உழவகம் சித்திரவேல் கீவ நூர்

ஜக் பாட் குப்பம்


Pages 1- 130

# வழியும் சத்தியமும் ஜீவனும்

ஆக்கியோன் :

ஸிக்பிரீட் ஆல்ம்


OFFICE OF THE ...
30 AUG 1929
MADRAS



மதுரை இரட்சணிய தெய்வாலயம்

225888

OFFICE OF THE
30 AUG 1929
MADRAS



மதுரை இரட்சணிய தெய்வாலயம்

# இந்நூல்

தமிழ்ச் சுவிசேஷ லுத்தரன் சபை அத்தியக்ஷரவர்களுக்கும் குருக்களுக்கும், மதுரை கள்ளநாடாகிய இருநாட்டின் நண்பர்களும் அருமையான உடன் ஊழியருமாகிய இந்தியர்களுக்கும் எனது வணக்கமுள்ள நன்றியறிதலைத் தெரிவிக்கும்பொருட்டு வெளியிடப் பட்டது.

இங்ஙனம்

Sigfrid Alm.

மதுரை, கிறிஸ்து உயிர்த்தெழுதலின் பண்டிகை காலம், 1929.

# விஷய அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| வருகையின் காலச் சுவிசேஷம்— | | |
| கிறிஸ்து வருகையின் 1-ம் ஞாயிறு | ... | 1 |
| கடவுள் நம்மோடிருக்கிறார்— | | |
| கர்த்தர் பிறந்த பண்டிகையின் 1-ம் நாள் | ... | 9 |
| என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி— | | |
| வருஷக் கடைசி இரவு | ... | 17 |
| கடவுளுக்குப் பிரியமான ஒரு புதிய வருஷம்— | | |
| வருஷப் பிறப்புப் பண்டிகை | ... | 25 |
| உனக்காகவே— | | |
| பெரிய வியாழக் கிழமை | ... | 34 |
| இயேசு மற்றவர்களுக்காகப் பட்ட பாடுகள்— | | |
| பெரிய வெள்ளிக் கிழமை | ... | 44 |
| எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே— | | |
| திரித்துவப் பண்டிகைக்குப் பின்தின 3-ம் ஞாயிறு | ... | 47 |
| எதினால் ஒருவன் கிறிஸ்துவின் ஊழியனானது?— | | |
| திரித்துவப் பண்டிகைக்குப் பின்தின 5-ம் ஞாயிறு | ... | 58 |
| இரக்ஷிக்கப்படுவதற்காக நான் என்ன செய்யவேண்டும்?— | | |
| திரித்துவப் பண்டிகைக்குப் பின்தின 9-ம் ஞாயிறு | ... | 71 |
| நித்திய ஜீவனுக்குக் கொண்டுபோகும் வழி— | | |
| திரித்துவப் பண்டிகைக்குப் பின்தின 13-ம் ஞாயிறு | ... | 81 |
| உலகப் பொருட்கள்— | | |
| திரித்துவப் பண்டிகைக்குப் பின்தின 15-ம் ஞாயிறு | ... | 90 |
| கடவுளுக்குப் பிரியமான விசுவாசம்— | | |
| திரித்துவப் பண்டிகைக்குப் பின்தின 18-ம் ஞாயிறு | ... | 100 |
| பரிசுத்தவான்கள் யார்?— | | |
| பரிசுத்தவான்களின் திருநாள் | ... | 111 |
| கடவுளுக்கு முன்பாகப் பலத்திலிருந்து பலத்துப் போகுதல்— | | |
| ஞானஸ்நான திடப்படுத்தல் சமயம் | ... | 120 |
| நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகம்— | | |
| உபாத்திமார் கூட்டத்தின் வர்தனோபசாரம் | ... | |
| கடவுளின் மகிமை வெளிப்படும்பொருட்டே— | | |
| தெய்வாலயம் பிரதிஷ்டை | ... | |



...CE OF THE REGISTRAR OF BOOKS ... RAS
30 AUG 1929


# வருகையின் காலச் சுவிசேஷம்.

(கிறிஸ்து வருகையின் 1-ம் ஞாயிறு.)

---

வேத வாக்கியம்: லூக்கா 1 : 67—79.

ளையாகிய யோவானின் தகப்பன் சகரியா பரிசுத்த ஆவியினால் நிறைந்து
தீர்க்கதரிசனமாகச் சொன்னதாவது:
இஸ்ரவேலின் கர்த்தராகிய கடவுள் ஸ்தோத்திரத்திற்குரியவர்; அவர் தமது
ஜனத்தைச் சந்தித்து அதற்கு மீட்பை உண்டு பண்ணினாரே;
வத்திலிருந்து தமது பரிசுத்த தீர்க்கதரிசிகள் மூலமாய்க் கூறியபடியே,
து தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரக்ஷணியக் கொம்பை
ஏற்படுத்தினார்.
து நமது சத்துருக்களினின்றும் நம்மைப் பகைக்கிற யாவருடைய கையி
னின்றும் தப்புவிக்கும் இரட்சிப்பு.
மது பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி நமது பிதாக்கள் பேரில்
வைத்த இரக்கத்தைக்காட்டி,
மது பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்,
மது சத்துருக்களின் கைகளினின்று நாம் விடுதலையாக்கப்பட்டு,
உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் அவருக்கு முன்பாகப் பக்தி
யோடும் நீதியோடும் ஊழியஞ்செய்ய அருளுவதற்குமே அப்படிச்
செய்தார்.
நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி எனப்படுவாய்.
மது கடவுளுடைய உருக்கமான இரக்கத்தினிமித்தம் பாவ மன்னிப்பினால்
வரும் இரட்சிப்பைக் கர்த்தருடைய ஜனத்துக்குத் தெரியப்படுத்தும்
பொருட்டு அவருக்கு முன்னாக நடந்துபோய் அவர் வழிகளை ஆயத்தஞ்
செய்வாய்.
அவ்விரக்கத்தினால் உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்
அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சந்
தரவும், நம்முடைய கால்களைச் சமாதான வழியில் நடத்தவும் நம்மைச்
சந்திக்கும் என்பதே.

---

கடவுளுடைய கிருபையினல் புதுத் திருச்சபை வருஷத்தை இன்று மறுபடியு மொருதரம் தொடங்குகிறேம். கடவுளால் ஆயத்தம் பண்ணப்பட்ட இரக்ஷிப்பின் சுவிசேஷம் கிறிஸ்தவத் திருச்சபையிலும், உலகத்திலுள்ள எல்லாச் சபைகளிலும் புதிதாய் மறுபடியும் ஒருதரம் அறிவிக்கப்படும். நாம் சீக்கிரத்தில் கிறிஸ்து ஜயந்திவிழாக் கொண்டாடப்போகிறேம். அப்போது மறுபடியும் ஒரு தடவை உலகமுழுவதும் இரட்சிப்பின் சுவிசேஷம் விசேஷித்த விதமாய்க் கூறப்படும்.

கடவுளிடத்திலிருந்து வருகிற இந்தப் பெரிய அற்புதமான சுவி சேஷத்தைப் பெறுவதற்கு நாம் நம்மையே ஆயத்தம் செய்வது அவசியமாயிருக்கிறது.

தற்காலத்தில் சமாச்சாரங்கள் உலகம் முழுவதும் எதிரே பேசுகிறதுபோல் அறியப்படுகிறது. இந்தச் சமாச்சாரங்களைக் கேட்பதற்கு நமக்கு radio என்று சொல்லப்படுகிற இயந்திரம் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட இயந்திரம் இருந்தால் நேர்த்தியான உபந்நியாசங்களையும், அற்புதமான சங்கீதங்களையும் நாம் கவனிக்கவும், கேட்கவும், அனுபவிக்கவும் கூடியவர்களா யிருப்போம். ஆனல் அப்பேர்ப்பட்ட இயந்திரம் சரியான நிலைமையி லமைந்திருக்கவேண்டும். கொழும்புப் பட்டினத்திலிருந்து அறிவிக்கப்படுகிற செய்தியைக்கேட்க வேண்டுமானல் அந்த இயந்திரத்தின் கருவிகளை விசேஷித்த விதமாய் மாற்றி வைக்கவேண்டும். பம்பாய் நகரிலிருந்து சமாச்சாரத்தைக் கேட்க வேண்டுமானல் அந்த இயந்திரத்தின் கருவிகளை வேறே விதமாய் மாற்றவேண்டும். அப்போது அந்தந்தப் பட்டினத்திலிருந்து வருகிற உபந்நியாசத்தையோ, பாடல்களையோ நாம் நேரே பேசப்படுகிறவைகளைப்போல் கேட்கக் கூடியவர்களா யிருக்கிறேம்.

இத்தன்மையாகவே பரலோகத்திலிருந்து கடவுளால் அறிவிக்கப்படுகிற ஒரு பெரிய சமாச்சாரம் உண்டு. இரக்ஷிப்பைப் பற்றிய இப்பரலோக செய்தியை நாம் அனுபவிக்கவேண்டு மானல் ஏற்றுக் கொள்ளும் இயந்திரம் ஒன்று நமக்கு இருப்பதல்லாமல் அந்த இயந் திரத்தைப் பரலோகத்துக்குத் தகுந்தவிதமாய் மாற்றிவைக்கவேண்



யது அவசியம். நம்முடைய மனம் இருதயம் முதலிய எல்லாம்
மோட்சத்துக்கு நேரே திருப்பிவைக்கப்பட வேண்டியதல்லாமல்,
இம்மைக்குரிய ஆசாபாசங்களை எல்லாம் நம்மால் கூடியமட்டும்
வேரோடு களையப் பிரயாசப்படவேண்டும். அப்போது நாம் மோட்சத்
தின் சுவிசேஷத்தைச் சரியாய்க் கேட்கக்கூடியவர்களா யிருப்போம்.
கிறிஸ்துபிறப்பின் பண்டிகைச் சமயத்தில் பரலோகத்திலிருந்து
வெளிப்படுகிற இந்தப் பெரிய சுவிசேஷத்தை நாம் ஏற்றுக்கொள்வ
தற்கு நம்மை ஆயத்தம் செய்துகொள்ளும்படியாக வருகையின் நாலு
வரங்களும் கிறிஸ்தவத் திருச்சபைக்கும், எல்லாச் சபைகளுக்கும்,
சபையின் எல்லா அவயவங்களுக்கும் கிருபையாய்க் கொடுக்கப்பட்
டிருக்கிறது. எவ்வளவுக்கு அதிகமாக நாம் நம்மையே ஆயத்தம்
பண்ணி, நமது மனதையும், இருதயங்களையும் மோட்சத்துக்கு
நேராக திரும்பிவைக்கிறேமோ, அவ்வளவுக்கதிகமாக நாம் இரட்
சிப்பின் இந்தப் பெரிய பண்டிகையைக் கொண்டாடுவதல்லாமல்,
கடவுளால் ஆயத்தம் பண்ணப்பட்டு நமக்குக் கிருபையாய் அளிக்கப்
படுகிற ஆச்சரியமான ஈவுகளையும் நாம் பெற்றனுபவிக்கக் கூடியவர்
களா யிருப்போம்.

நாம் பற்பலவிதமாய் நம்மை ஆயத்தம் செய்யவேண்டும். நம்மை
யும், நமது சோதனைகளையும் நமது பாவங்களையும் நமது இரட்சிப்புக்
குத் தேவையானவைகளையும் நாம் நினைக்கவேண்டும். நமது பாவங்களை
அறிக்கையிட்டு மனந்திரும்பவேண்டும். இப்பேர்ப்பட்ட ஆயத்தம்
செய்வதற்கு வருகையின் 2-ம், 3-ம், 4-ம் ஞாயிறுகள் நமக்கு விசே
ஷித்தவிதமாய் உதவியாயிருக்கும். ஆகையால்தான் இந்த நாட்
களில் நமது ஆலயத்திலுள்ள உடைகள் ஊதா (violet) நிறமானதாய்
மாற்றப்படும், ஏனெனில் ஊதாவர்ணம் தாழ்மைக்கும், ஆயத்தத்துக்
கும் அடையாளமான வர்ணமாயிருக்கிறது.
இந்த ஞாயிறே நமக்கு மனுஷஜாதியின் மேலுள்ள கடவுளின்
கிருபையையும் இரக்கத்தையும் நினைப்பூட்டுவதோடு அதற்காக நாம்
கடவுளைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கக் கடமையுள்ளவர்கள் என்ப
தையும் விசேஷித்த விதமாய் நினைப்பூட்டுகிறது. வருகையின் முதல்
ஞாயிறு எப்போதும் ஸ்தோத்திரம் செலுத்தும் நாளாயிருக்கிறது.

கடவுளுடைய ஈவுகளை ஏற்றுக்கொள்வதற்கென்று நம்மை ஆயத்தம்
பண்ணிக்கொள்ளும் விஷயமாக ஸ்தோத்திரம் செலுத்துதல் இன்றி
யமையாத ஒரு பாகமாயிருக்கிறதென்பதை இந்த ஞாயிறு நமக்கு
நினைப்பூட்டுகிறது. இக்காரணம்பற்றியே இன்று நமது ஆலயத்தில்
நாம் சிகப்பு வர்ணத்தை உபயோகிக்கிறோம். சிகப்பு நிறம் சந்தோஷத்
துக்கு அடையாளமாயிருக்கிறது.

* * *

இன்றையத்தினத்தின் நமது வாக்கியம் சகரியா தன் மகன்
பிறந்தபோது பாடிய ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபப்பாட்டாயிருக்
கிறது. வருகையின் காலத்தில் தங்கள் முழு வாழ்கையையும் கழித்த
பழைய யூதரில் சகரியா ஒருவராயிருந்தான். அத்தோடுகூட இரட்
சிப்பின் காலத்தையும், அதிகமதிகமாய் நெருங்கி வருகிற வாக்குத்த
த்தத்தின் நிறைவேறுதலின் காலத்தையும் உணர்ந்து கொள்ளும்படி
யான சிலாக்கியத்தைப் பெற்றிருந்தவனே. இவனே முதன்மையான
வன் நாம் வருகையின் காலம்இன்னதென்று அறியவும், முழு இரட்
சிப்பையும் ஏற்றுக்கொள்ளும்படியான சரியான ஆயத்தம் இன்ன
தென்று அறியவும் முழுமனதுடன் பிரியப்பட்டால், சகரியாவினால்
பாடப்பட்ட ஸ்தோத்திரக் கீதத்தைக் கவனிக்க வேண்டும்.

இந்தப் பாட்டில் அவர் அநேகத்திற்கடுத்த காரியங்களைச்
சொல்லுகிறார். கடவுளைப் பற்றியதும் மனுஷ ஜாதிக்கு அவரால்
ஆயத்தம் பண்ணப்பட்டு உலகத்தில் சம்பூரணத்தோடும் ஐசுவரியத்
தோடும் வெளிப்படப்போகிற இரட்சிப்பைப்பற்றிய சில காரியங்களை
நாம் இன்றைக்குத் தியானிக்கப் பிரயாசப்படுவோமாக.

அவன் இஸ்ரவேலின் ஆண்டவராகிய தேவனை ஸ்தோத்தரிக்
கிறான். ஏனெனில் அவர் நமது ஜனத்தைச் சந்தித்தார் என்று
சொல்லுகிறான். இன்னும் சம்பவியாத ஒரு காரியத்தை இறந்தகாலத்
தில் பேசுகிறான். தமது வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் நிறை
வேற்றுகிற கடவுள் பேரில் மிகுந்த திட விசுவாசம் அவனுக்கு இருந்
தது. இந்த உலகத்தில் அப்பொழுது சீக்கிரம் பிறக்கப்போகிற
இயேசுவின் மூலமாய்க் கடவுள் தமதுஜனத்தைச் சந்திக்கப் போயி
ருந்தார். இத்தகைய விசுவாசத்தோடு சகரியா இந்த ஆச்சரியமான
காரியத்தை ஏற்கனவே நடந்த ஒரு காரியமாக தரிசிக்கிறான். வரு



கையின் காலத்திலிருக்கிற கிறிஸ்தவத் திருச்சபைக்கும், ஒவ்வொரு
தனித்த கிறிஸ்தவனுக்கும் கடவுள் பேரிலுள்ள இத்தகைய பலத்த
விசுவாசம் தேவை.

சகரியா இன்னும் சொல்லுகிறதென்ன ? "கடவுள் தமது ஜன
த்தை மீட்டார்" என்பது. இந்த உலகத்தில் தாமே ஆச்சரியமான
விதமாய் வந்து அன்புள்ள தகப்பனாகிய தமக்கும் இந்த உலகத்தி
லுள்ள ஜனங்களாகிய நமக்கும் ஒரு பரஸ்பர ஐக்கியத்தை ஸ்தாபித்த
தாலும் மனுஷ ஜாதி முழு இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்ளும்படி
யான சத்துவத்தைச் சிருஷ்டித்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவின்
மூலமாய் இவ்வாறு செய்ய மனதாயிருந்தார். அங்ஙனமே செய்தும்
முடித்தார்.

சகரியா இன்னும் சொல்லுகிறதென்ன ? "ஆண்டவராகிய கட
வுள் இரட்சணியக் கொம்பை உயர்த்தினார்" என்பதே. கொம்பானது
பழைய யூதருக்கும், பெலனுக்கும் விசுவாச உறுதிக்கும் அடையாள
மாயிருந்தது. பழைய யூத தெய்வாலயத்திலுள்ள பீடங்களின் நாலு
மூலைகளிலும் வைக்கப்பட்டிருந்த கொம்புகள் பெலத்துக்கும் விசு
வாச உறுதிக்கும் அடையாளமாக வைக்கப்பட்டிருந்தன. யாதொரு
வன் சத்துருவால் துன்பப் படுத்தப்பட்டால் அல்லது அபாயத்தி
லிருந்தால், அவன் தெய்வாலயத்தின் முற்றத்திலுள்ள பீடத்தின்
கொம்புகளில் ஒன்றைத் தன் கையால் தொட்டுவிடுவானாகில் அப்
போது அவன் ஆபத்தினின்று நீங்கி அடைக்கலம் புகுந்தவனாகவே
கருதப்படுவான். ஒருவரும் அவனைத் தொடவும் பிடிக்கவும் முடி
யாது.

இந்தப் பழைய பீடக்கொம்புகளினால் ஒரு விதமாய் இரட்சிப்பு
உண்டாயிற்று. அவைகள் ஒரு விதமாய் மனிதனை அவனது சத்
துருக்களினின்று இரட்சிக்கக் கூடியதாயிருந்தன. ஆனால் அவனை
அவனது பாவங்களினின்று ஒருபோதும் இரட்சிக்கமுடியாது.

சகரியா தன் பாடலில் கடவுள் இப்போது ஒரு புதிய இரட்
சணிய கொம்பை, அதாவது உயிருள்ள ஒரு கொம்பை உயர்த்தினார்
என்று சொல்லுகிறான். சகரியா பீடத்தில் தங்கத்தகட்டால் மூடப்
பட்டுள்ள ஒரு மரக்கொம்பைப்பற்றி இனிமேல் நினைத்துச்சொல்லு
கிறதில்லை. அவன் மனிதனை அவனது பாவங்களினின்றும் மரணத்

தினின்றும் இரட்சித்து அவனுக்கு நித்திய ஜீவனைத் தரக்கூடிய ஒரு உயிருள்ள கொம்பாகிய இரட்சகரைப்பற்றிச் சொல்லுகிறான்.

வருகையின் காலமாகிய இப்போது உலகத்துக்கு இந்த இரட்சகர் வருவார், சீக்கிரம் வருவார் என்ற செய்தி மறுபடியும் ஒருதரம் சொல்லப்படுகிறது. கிறிஸ்து பிறந்த பண்டிகையின் காலத்திலும் மோட்சத்திலுள்ள தேவதூதரால் இவ்வுலகத்திலுள்ள ஜனங்களுக்கு மறுபடியும் ஒரு தரம் "இரட்சகர் பிறந்திருக்கிறார், அவர் வந்திருக்கிறார்'' என்ற பாடல் பாடப்படும்.

இரட்சிப்பைக்குறித்தும் நாம் எல்லாரும் சத்துருக்களின் கையினின்று மீட்கப்படுகிறதையும் நமது பாவங்களினின்று இரட்சிக்கப்படுவதையும் குறித்தும் சகரியா பேசும்போது அவன் நமது இரட்சிப்புக்கான சரியான நோக்கத்தை நமக்கு நினைப்பூட்டுகிறான். நாம் இரட்சிக்கப்படுவோம். ஆனால் நமது சுய இஷ்டப்பிரகாரம் பத்திரமாய் இருப்பதற்கும் சௌகரியமான சந்தோஷ ஜீவியம் செய்வதற்கும் மாத்திரமல்ல. கடவுள் மனுஷ ஜாதிக்கு இரட்சிப்பை ஆயத்தம் செய்யும்போது அவருடைய உள்ளத்தில் ஒரு திட்டமான நோக்கம் இருந்ததாகச் சொல்லுகிறான். அத்திட்டமான நோக்கம் யாதெனில் நமது ஜீவிய காலமெல்லாம் நாம் அவருக்கு ஊழியஞ் செய்வதே அத்திட்டமான நோக்கம். அன்றியும் பயமில்லாமல் ஊழியஞ் செய்யும்படியாகவும், சந்தோஷத்திலும், சமாதானத்திலும், பரிசுத்தத்திலும், நீதியிலும் அன்புள்ளவர்களாய் அவருக்கு ஊழியஞ் செய்யும்படியாகவும் கடவுள் நமக்கு இரட்சிப்பை ஆயத்தம் செய்கிறார், முன்னர் செய்துமிருந்தார்.

சகரியா இன்னும் சொல்லுகிறதாவது: "கடவுளுடைய ஜனத்துக்கு இரட்சிப்பின் அறிவு கொடுக்கப்படும்'' காமோ, அவர் சொன்னதின்படி, அந்த இரட்சிப்பை எந்த விதமாய் உணர்ந்து கொள்ளக் கூடும் என்று அதிக நன்றாய்க் கவனிக்கவேண்டும். நாம் பாவமன்னிப்பு இன்னதென்று உணரும் வரையில் இரட்சிப்பு இன்னதென்று அறியவும், இரட்சிப்பை ஒருபோதும் அனுபவிக்கவும் முடியாது. இரட்சிப்பைப்பற்றிய அறிவு மூளையைப் பொருத்ததாயிராமல் இருதயத்தைப் பொருத்ததாயிருக்கிறது.



இந்த இரட்சிப்பு கடவுளுடைய ஜனமாகிய இஸ்ரவேலருக்கு
மாத்திரம் அல்ல, அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்
கிறவர்களுக்கும் கூட கொடுக்கப்படும் என்று சகரியாசொல்லுகிறான்.
இதனால் சகரியா இஸ்ரவேலல்லாத புறசாதி யாரையும் உலக முழு
வதுமுள்ள எல்லாச் சனங்களையும் கூட நினைத்துச் சொல்லுகிறார்.
இரட்சிப்பு, எவரையும் தள்ளாமல், எல்லாச் சனத்துக்கும் அளிக்கப்
படும். கடவுள் தமது உருக்கமான இரக்கத்தினால் இப்படிச் செய்
வார்.

கடைசியாகத், தான் ஏற்கனவே தனது விசுவாசக் கண்களால்
கண்டு களிப்படைந்தவரும் வருகிறவருமாகிய இரட்சகர் எல்லா
ருடைய கால்களையும் சமாதான வழியில் நடத்துவார் என்றும்,
அந்த இரட்சகரால் சமாதானத்தின் இராச்சியமும், நீதியும், அன்
பும், பரிசுத்தமும் வாசமாயிருக்கிற இராச்சியமும், இந்த உலகத்தில்
ஸ்தாபிக்கப்படும் என்றும் சகரியா சொல்லுகிறான்.

வயது சென்ற பக்தியுள்ள ஆசாரியனாகிய சகரியாவின் மூல
மாய் இன்றைக்கு நமக்கு வருகையின் சுவிசேஷமாகக் கொடுக்கப்படு
கிற விஷயம் இதுவே. நமது காதுகளால் மாத்திரமல்ல நமது இரு
தயங்களாலும் அதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறோமா?

* * *

முடிவாக, வருகிற இரட்சகரைக் குறித்த வருகையின் சுவி
சேஷத்தை சகரியாதான் ஏற்றுக்கொள்ளக் கூடியவனாயிருந்த விதத்
தையும், இந்தவிதமாய் அவன் எப்படி அதைப் பூரணமாய் நம்பி, அதி
னால் சொல்லிமுடியாத சந்தோஷத்தினாலும் பாக்கியத்தினாலும்
நிறைந்தான் என்றதையும் நாம் ஒரு நிமிஷம் சிந்திப்போமாக.

அவன் உண்மையோடு கடவுளுக்கு ஊழியஞ்செய்து கொண்டு,
கடவுளுடைய வசனத்துக்காக ஜாக்கிரதையாய்க் காத்திருந்தான்.
அப்படியே தன்னிடத்தில் பேசிக்கொண்டிருக்கிற கடவுளுடைய சத்
தத்தையும் அவன் கேட்டதுமல்லாமல், அதை ஏற்றுக்கொள்ளவும்
செய்தான். அதேசமயத்தில், அத்தோடுகூட, தன் சொந்த ஜீவியத்
திலும், சொந்த வீட்டிலும் ஏதோ சம்பவித்தது என்று கவனித்து
அறிந்துகொண்டான். தன் சொந்த ஜீவியத்திலே கடவுள் செய்த
கிரியைகளைக் கண்டு படித்தான். தன் வீட்டில் என்ன சம்பவித்தா

லும், அது கடவுளுடைய அன்பிலும் இரக்கத்திலுமிருந்து வருகிற அவருடைய நேரான செய்கையாயிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டான்.

கடவுளுடைய வசனத்தைக் கேட்டுதல், கடவுளுடைய செயல்களைத் தன் சொந்த ஜீவியத்தில் உணர்ந்து கொள்ளுதல் ஆகிய இந்த இரண்டு காரியங்களும் சேர்ந்து கடவுள் பேரிலுள்ள நம்பிக்கையை அவனுக்குள்ளே பூரணப்படுத்திற்று.

நாமும் கடவுளுடைய வசனத்தைப் பெற்றோம். கடவுள் சகரியாவோடு பேசினதைப் பார்க்கிலும், அதிகமாயும் தெளிவாயும் கடவுள் நம்மோடு பேசிக்கொண்டிருக்கிறார். கடவுள் நம்முடைய ஜீவியத்திலும் கூட தம்மை வெளிப்படுத்தினார், வெளிப்படுத்துகிறார்.

கடவுளுடைய வார்த்தையை நாம் ஏற்றுக் கொண்டோமா? கடவுள் நமது ஜீவியத்தில் தினசரி செய்கிற அவருடைய செய்கைகளை உணர்ந்து கொண்டோமா? அப்படியானால் நமக்கும் கூட வருகையின் காலம் உண்டு. இன்னும் அதிகமாய்க், கடவுளால் ஆயத்த பண்ணப்பட்ட இரட்சிப்பின் அனுபவத்தால் நிறைந்த பாக்கியம கிறிஸ்மஸ் பண்டிகையின் காலம் நமக்குண்டாகும். அதினால் நாம் இப்போதும் எப்போதும் சந்தோஷத்தாலும் பாக்கியத்தாலும் நிறைந்தவர்களாவோம்.

ஆமேன்.

---

# கடவுள் நம்மோடிருக்கிறார்.

(கர்த்தர் பிறந்த பண்டிகையின் 1-ம் நாள்.)

---

வேதவாக்கியம்: மத்தேயு 1 : 18—25.

இயேசுகிறிஸ்துவினுடைய பிறப்பின் விவரம்: அவருடைய தாயாராகிய மரி
யம்மாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் கூடி வாழு
முன் அவள் கர்ப்பந்தரித்ததாகத் தெரியவந்தது; அதுவோ பரிசுத்த
ஆவியினால் உண்டானது.
அவள் புருஷன் யோசேப்பு நீதிமானாயிருந்து அவளை அவமானத்துக்குள்ளாக்க
மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்
தான்.
அவன் இப்படி யோசித்துக்கொண்டிருக்கையில், இதோ கர்த்தரின் தூதன்
சொப்பனத்தில் அவனுக்குத் தோன்றி: தாவீதின் குமாரனாகிய யோசே
ப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ளப் பயப்படாதே;
அவளிடம் உற்பவித்திருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது.
அவள் ஒரு குமாரனைப்பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக;
தமது ஜனத்தின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவர் அவரே
என்றான்.
இதோ, கன்னிகையானவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெறுவாள்; அவ
ருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று தீர்க்கதரிசியின் மூல
மாய்க் கர்த்தர் உரைத்தது நிறைவேற இதெல்லாம் நடந்தது.
இம்மானுவேல் என்பதற்கு கடவுள் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்
யோசேப்பு நித்திரை தெளிந்தெழுந்து கர்த்தரின் தூதன் தனக்குக் கட்டளை
யிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டான்.
அவள் குமாரனைப் பெற்றெடுக்குமளவும் அவளை அறியாதிருந்தான்; அவ
ருக்கு இயேசு என்று பேரிட்டான்.

---

கிறிஸ்து பிறந்தபண்டிகைநாள் யாது காரணத்தால் கிறிஸ்தவதிருச்சபைக்கு எப்போதும் சந்தோஷத்தாலும் பாக்கியத்தாலும் நிறைந்த ஒரு நற்காலமாயிருக்கிறது? நாம் ஏன் கிறிஸ்மஸ் பண்டிகையை நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் நமது சபையாருக்கும் இன்னும் நம்மைச் சேர்ந்த மற்றெல்லாருக்கும் சந்தோஷமும் களிகூறு

தலுமான நாளாக்க விரும்புகிறோம்? என் அநேக பெற்றோர் தங்களின் கஷ்டங்களிலும் உபத்திரவங்களிலும் கூட தங்கள் பிள்ளைகளுக்கு முக்கியமாக கிறிஸ்மஸ் காலத்தில் சந்தோஷம் உண்டாக்கப் பிரயாசப்படுகிறார்கள்?

அதற்கு உத்தரவு: கடவுளையும், எல்லா மனுஷரையும் அவர்களின் துக்கத்திலும் துயரத்திலும் கஷ்டத்திலும் கவலையிலுமிருந்து விடுவித்து அவர்களுடைய இருதயங்களை ஓயாத சமாதானத்தினாலும், சந்தோஷத்தினாலும் நிரப்பும்படியான அவருடைய சித்தத்தையும் முயற்சியையும் விசேஷித்த ஆச்சரியமான விதமாய்க் கிறிஸ்மஸ் பண்டிகை நமக்கு நினைப்பூட்டுகிறது.

ஒவ்வொரு புது கிறிஸ்மஸ் பண்டிகையும், கடவுளால் அனுப்பப்பட்டு இவ்வுலகத்தில் பிறந்த இரக்ஷகரைப்பற்றிப் புதியதாய், ஒரு சுவிசேஷத்தை நமக்குக் கொண்டுவருகிறது. இதைத்தான் இன்றையத்தினத்தின் நமது வாக்கியமும் நமக்கு நினைப்பூட்டுகிறது. அப்போஸ்தலன் இரக்ஷகரின் பிறப்பைக் குறித்தும் பிறக்கப்போகிற பிள்ளைக்கு இடப்படும் இயேசு என்கிற நாமத்தைக் குறித்தும் சொல்லுகிறார். அவர் மனுஷ ஜாதியை அவர்களுடைய பாவங்களிலிருந்து இரக்ஷிக்கும்படியாகவே அனுப்பப்பட்டதினாலே இந்த நாமத்தை அவருக்கு இடப்படவேண்டியதாயிருந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் அடிக்கடி இயேசுவைப் பாவங்களின் இரக்ஷகராகப் பேசுகிறோம். இதேவிதமாக அவரைப் பிரசங்கிக்கிறோம். ஆனால் அப்படிப் பிரசங்கிக்கிறவர்களும் பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுமாகிய நம்மில் அநேகர் இயேசு பாவங்களின் இரக்ஷகர் என்பதைக்குறித்து வெகு சொற்பமான அனுபவம் உடையவர்களாயிருக்கிறோம் என்று பயப்படுகிறேன். இயேசு பாவிகளின் இரக்ஷகர் என்பதைக் குறித்த நமது வார்த்தைகள் வெறும் வழக்கமான வார்த்தைகளா யிருக்கிறதேயல்லாமல் நம்மால் அறிந்து உணர்ந்து அனுபவிக்கப்படுகிற உண்மையான சத்தியமாயிருக்கிறதில்லை என்று பயப்படுகிறேன். வாஸ்தவமாய்ப் பாவம் இன்னதென்பதையும், அது நமது ஜீவியத்தின் உண்மையான ஒரு காரியமென்பதையும், நாம் அதிலிருந்து விடுவிக்கப் படுவ



தும் மீட்கப்படுவதும் அவசியமாயிருக்கிறது என்பதையும் நாம் அறிவதும் உணருகிறதும் வெகு சொற்பம் என்றும் பயப்படுகிறேன்.

பாவமானது, நமது ஜீவியத்திலும் நமது இருதயத்திலும் பயங்கரமும் கொடுமையுமான காரியமாயிருக்கிறதென்பதை நாம் அடிக்கடி உணராதிருக்கிறதினாலே பாவவிடுதலையைச் சந்தோஷமும் ஆச்சரியமுமான காரியமாக உணரக் கூடாதவர்களாயிருக்கிறோம். இதினாலேதான் கிறிஸ்மஸ்பண்டிகை காலத்திற்குரிய கிறிஸ்மஸ் சந்தோஷமும் களிப்பும் வெளிவேஷமாயிருக்கிறது. அதாவது, அது நமது இருதயங்களிலிருந்து உண்டாகி, வளர்ந்து வழிந்தோடுகிறதாயிராமல் பூர்வீக வழக்கத்துக்கடுத்ததாய் மாத்திரமிருக்கிறது. அதனாலேதான் நமது கிறிஸ்மஸ் சந்தோஷமும் வெகு சீக்கிரம் போய்விடும். அச்சந்தோஷம் நமது ஜீவியம் முழுவதும் நிலைக்கிறதில்லை. ஒரு வருஷ முடிவு வரையிலுங்கூட நிலைக்கிறதில்லை. நமது கிறிஸ்மஸ் மெழுகுவர்த்திகள் எரிந்துபோன அப்போதே, நமது கிறிஸ்மஸ் பூக்கள் உலர்ந்த அப்போதே, நமது புதிய கிறிஸ்மஸ் துணிமணிகள் பழையதாய்ப்போன அப்போதே, நமது கிறிஸ்மஸ் பலகாரம் தீர்ந்துபோன அப்போதே, நாம் நமது பிள்ளைகளுக்குக் கொடுத்த பொம்மைகள் முதலிய பொருட்கள் கெட்டுப்போன அப்போதே நமது கிறிஸ்மஸ் சந்தோஷமும் தீர்ந்துபோய் விடும்.

பெத்லகேமின் மாட்டுத்தொழுவத்தில் பிறந்த குழந்தையானது மனுஷஜாதியைப் பாவங்களிலிருந்து மீட்கப் போகிறதினாலே அவருக்கு இயேசு என்கிற நாமம் இடப்பட்டது. நாம் இதை நினைத்து உணர்ந்துகொள்ளும் வரையில் கிறிஸ்மஸ் பண்டிகையைச் சரியாய்க் கொண்டாடவும் அதின்சந்தோஷத்தைப் பூரணமாய் உணரவும் நம்மால் முடியாது. "இயேசு" என்கிற எபிரேயபதத்தின் அர்த்தம் என்னவென்றால் "கடவுள் இரக்ஷிக்கிறார்" என்பது.

மத்தேயு சுவிசேஷத்தின் பிரகாரம் நமது கிறிஸ்மஸ் பண்டிகையின் சந்தோஷ செய்தியாகிய நமது வாக்கியத்தின் மூலமாய், பாவம் இன்னதென்றும், பாவமீட்பு இன்னதென்றும், பாவத்தின் அர்த்தம் இன்னதென்றும் இரக்ஷிப்பு இன்னதென்றும் சரியாய் அறியும்படியான சரியான உதவி நமக்குக் கொடுக்கப்படுகிறது.

அப்போஸ்தலன் இயேசுவின் பிறப்பையும் அவரது நாமத்தையுங் குறித்து எழுதும்போது, நமக்கு ஏசாயா தீர்க்கதரிசியின் பழைய தீர்க்கதரிசனத்தை நினைப்பூட்டுகிறார்.

ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தில் ஒருதடவை இஸ்ரவேல் ஜனம்பெரிய இக்கட்டிற்குள்ளாயும் வல்லமையான சத்துருக்களால் பயமுறுத்தப்பட்டவர்களாயும் இருந்தார்கள். இப்படி இருக்க, இஸ்ரவேலருடைய இராசா கடவுளுடைய வல்லமையையும் ஜனத்தை இரக்ஷிக்கும்படியான அவருடைய விருப்பத்தையும் நம்பாமல் ஜனத்தை விடுவிக்கச் சொந்த வழிவகைகளைத் தேடினான். அப்போ ஏசாயாதீர்க்கதரிசி எழுந்து நின்று கடவுள் இஸ்ரவேலை அதன் சத்துருக்களினின்று இரக்ஷிக்கப்போகிறார் என்றும், எல்லாரும் கடவுளுடைய வசனத்தை அறிந்து, உணரும்படியாக அவர் ஒரு அடையாளத்தைக் கொடுக்கப் போகிறாரென்றும் சொன்னான். அவன்சொன்னதாவது: ஒரு ஸ்திரிக்குச் சீக்கிரத்தில் ஒரு குழந்தை பிறக்கப் போகிறது. அந்த ஸ்திரி ஒரு வேளை அக்காலத்தில் இராணியாய் இருக்கலாம். குழந்தையின் பெயர் இம்மானுவேல் என்று அழைக்கப்படும். அதாவது "கடவுள் நம்மோடிருக்கிறார்." அக்குழந்தையின் பிறப்பும் இருப்பும் இஸ்ரவேலருக்கு விசேஷமாய் இராசாவுக்கும் கடவுளுடைய உண்மையையும் வல்லமையையும் அக்காலத்தின் அவர்களது இக்கட்டுகளில் இஸ்ரவேலுக்குக்கொடுக்கும் இரட்சிப்பைப்பற்றிய அவருடைய வாக்குத்தத்தத்தையும் விருப்பத்தையும் ஞாபகப்படுத்த வேண்டும். அக்குழந்தையானது கடவுள் தமது ஜனத்தைக் கைவிடாமல் அதை வல்லமையாய்க் கவனித்து அவர்களுடைய இக்கட்டுகளிலிருந்து மீட்டு இரட்சிப்பாரென்றும் ஞாபகப்படுத்தவேண்டும்.

ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தில் இஸ்ரவேலருடைய சரித்திரத்தில் இப்பேர்பட்ட சம்பவமானது இவ்வுலகத்தில் இயேசு பாலகன் பிறந்தபோது கொடுக்கப்பட்ட கடவுளுடைய அன்பையும் வல்லமையையும் குறித்த இன்னும் ஆச்சரியமான வெளிப்படுத்தலையும் பற்றிய ஒரு தீர்க்கதரிசனமாக எல்லாக் காலத்திலும் மதிக்கப்பட்டு வந்தது ஆச்சரியமல்ல. இயேசு இம்மானுவேல் அதாவது "கடவுள் நம்மோடு இருக்கிறார்" என்று அழைக்கப்பட்டு வந்திருக்கிறதும் அடிக்கடி அழைக்கப்படுவதும் ஆச்சரியமல்ல.



"கடவுள் நம்மோடு இருக்கிறார்" என்ற இயேசுவின் நாமத்தைக் குறித்து நாம் யோசித்தால் பாவம் இன்னதென்றும், பாவமீட்பு அதாவது இரட்சிப்பு இன்னதென்றும் இன்னும் அதிகமாக ஒருவேளை நாம் அறியக்கூடும்.

கடவுள் எங்கே இல்லையோ, அங்கே பாவம் குடிகொண்டு இருக்கிறது. கடவுளுடைய பிரசன்னத்தில் அவரது சித்தத்துக்கு இசைந்து செய்யாதது எதுவோ அதெல்லாம் பாவமாயிருக்கிறது. நமது இருதயமும் மனதும் ஆத்துமமும் கடவுளுடைய ஆவியால் நிரப்பப்படாதவரையிலும் நாம் பாவம் நிறைந்தவர்களும் பாவத்தின் அடிமைகளுமாயிருக்கிறோம்.

இவ்வுலகத்தில் நாம் அநுபவிக்கவேண்டிய கஷ்டங்கள், கவலை
கள், துன்பங்கள், தீமைகளாகிய இவற்றின் காரணமொன்றை நாம்
வாஸ்தவமாய்க் கண்டுபிடிக்க முயன்றால் கடவுள் நமது ஜீவியத்தில்
பிரசன்னமா யிராததுவே யதன் காரணம் என்று நாம் கண்டுகொள்ளு
வோம். கடவுள் வெகுதூரத்தில் இருக்கிறார். சரியாய்ச் சொன்னால்
நாம் கடவுளை நமது ஜீவியத்துக்கும் உலக ஜீவியத்துக்கும் அப்பால்
வெகுதூரத்தில் வைக்கிறோம். ஆகையால் எல்லாம் அப்படி தீமையா
யும் பொல்லாப்பாயும் மாறுகிறது. காரியம் இப்படி இருப்பதால்
கெட்டகாரியங்களை வென்று அவைகளை நல்லவைகளாக்க நமக்கு
சக்தியில்லை.

இங்கே ஒரு பெரிய அறை இருப்பதாக நாம் வைத்துக்கொள்
வோம். அதில் ஏராளமான பொருட்களும் தட்டு முட்டுகளும் இருக்
கின்றன. அங்கே மேஜைகள், நாற்காலிகள், அலமாரிகள் முதலிய
வைகள் இருக்கின்றன. எல்லாம் ஒழுங்காய் வைக்கப்பட்டிருக்கிறது.
ஒவ்வொரு சாமானும் ஒரு முக்கியமான உபயோகத்துக்கென்று
இருக்கிறது. இந்த அறை சன்னல்கள் இல்லாமல் இருட்டாயிருப்ப
தாகவும் அதில் சிலர் பிரவேசிப்பதாகவும் பாவித்துக்கொள்வோம்.
அவர்கள் அங்கே ஒன்றையும் பார்க்கமுடியாது. வழிதெரியாமல்
சாமான்களில் மோதிக் கொள்ளுகிறார்கள். சீக்கிரத்தில் சாமான்கள்
எல்லாம் தலைகீழாக விழுந்து, அவர்களுக்குப் பலமான காயம் உண்
டாகிறது.

பிறகு அதே அறையில் நீங்கள் விளக்கைக் கொளுத்துகிறதாகவும் அதே சமயத்தில் சிலர் உட்பிரவேசிக்கிறதாகவும் பாவித்துக் கொள்வோம். அவர்கள் உடனே சந்தோஷத்தையும் சௌக்கியத்தையும் அடைவார்கள். ஒரு வேளை நல்ல சாமான்களையும் அவைகள் வைக்கப்பட்டிருக்கிற ஒழுங்கையும் பார்த்தும் ஆச்சரியப்படுவார்கள். இது எதனால்? ஏனெனில் அறைக்குள் வெளிச்சம் இருக்கிறது. ஆகையால் எல்லாவற்றையும் ஒழுங்காகப் பார்க்கிறதுமல்லாமல் அதை அந்தந்த வேலைக்கென்று உபயோகிக்கவும் கூடும்.

கடவுள் பிரசன்னமாயிராதபோதும் பிரசன்னமாயிருக்கிறபோதும் இவ்வுலகில் காரியங்கள் அடைகிற மாறுதலை விளக்கும் திருஷ்டாந்தமாக இதை வைத்துக்கொள்ளலாம். பாவத்தோடும் இரக்ஷிப்போடும் சம்பந்தமான ஒவ்வொன்றையும் இந்த திருஷ்டாந்தத்தினால் விளக்கக்கூடாது என்பது உண்மை. கடவுளோடு போராடி அவரது சிருஷ்டிப்பை நிர்மூலம் செய்ய முயற்சிக்கிற ஒரு தீமையான வல்லமை இவ்வுலகில் வாஸ்தவமாகவே இருக்கிறது. ஆனால் அதே காரியத்தினால் சிலருக்குத் துயரமும் மற்றவர்களுக்குச் சந்தோஷமும் உண்டாகிறது அடிக்கடி உண்மையாயிருக்கிறது. ஒரு காரியத்தினால் சில மனுஷர் வேதனையும் துன்பமும் அடைகிறார்கள். வேறு சிலர் இதே காரியத்தை நினைத்துத் தங்கள் முழு இருதயத்தினாலும் கடவுளை ஸ்தோத்தரிக்கிறார்கள். கடவுளையன்றி நம்மால் செய்யப்படுகிற அல்லது நம்மால் பெற்றுக்கொள்ளப்படுகிற எதுவும் துன்பத்தையும் துயரத்தையுமே உண்டுபண்ணும். ஆனால் கடவுளுடைய சமுகத்தில் நம்மால் செய்யப்படுகிறதும் பெற்றுக்கொள்ளப் படுகிறதுமான எதுவும் எப்போதும் நமக்குள்ளே சந்தோஷத்தையும் நன்றியறிந்த குணத்தையும் உண்டாக்கும்.

பயங்கரமான வியாதியால் பிடிக்கப்பட்டுத் தங்கள் வருத்தத்தின் பெருக்கத்தால் புலம்பி அழுது கடவுளையும் மனிதரையும் தூஷணிக்கிற அநேகரை நான் பார்த்திருக்கிறேன். இன்னும் வேறு சிலர் அப்படியே பயங்கரமான வியாதியால் பிடிக்கப்பட்டுத் தங்கள் கஷ்டங்களையும் நோவையும் பொறுமையோடும் நம்பிக்கையோடும் சகிக்கலாம். அவர்கள் முகம் சந்தோஷத்தினாலும் அவர்கள் இருதயம் சமாதானதினாலும் நிறைந்திருக்கலாம். இப்பேர்ப்பட்டவர்களையும் பார்த்திரு-



க்கிறேன். இது எதினாலே? முந்திச் சொல்லப்பட்டவர்கள் கடவுளையன்றி கஷ்டப்பட்டார்கள். கடவுளைவிட்டு தூரமாயிருந்தார்கள். இரண்டாவது சொல்லப்பட்டவர்களோ கடவுளுக்கு நெருங்கி இருந்தார்கள். அவர்கள் கடவுள் வல்லமையும் அன்புமுள்ள தகப்பனாகத் தங்களுக்கு நெருங்கி இருக்கிறதாக உணர்ந்தார்கள்.

நம்மில் அநேகர் எளியவர்கள். ஆனால் சில மனிதர் எப்படி திருப்தியாய் நடந்துகொள்ளுகிறார்கள் என்பதைப் பார்த்தால், ஆச்சரியமாயிருக்கிறது. சில மனிதர் தங்கள் எளிமைத்தனத்தோடுகூட, எப்படி சந்தோஷ ஜீவியம் செய்யக்கூடியவர்களாயிருக்கிறார்கள் என்று பார்க்கிறது ஆச்சரியமாயிருக்கிறது.—வேறு சிலரோ ஓயாமல் நாள்தோறும் கஷ்டத்தினாலும் கடனாலும் முழுகி இருக்கிறார்கள். இந்த வித்தியாசம் ஏன்? இங்கேயும் கூட, மனித ஜீவியத்தில் கடவுள் பிரசன்னமாயிராமை பிரசன்னமாயிருத்தல் என்ற கேள்வி இருக்கிறது என்பதை நீ காண்பாய் என்று நினைக்கிறேன்.

நாம் எல்லோரும் பாவத்தாலும், சோதனைகளாலும் சூழப்பட்டிருக்கிறோம். நம்மெல்லாருடைய இருதயங்களிலும் பாவ ஆசை இச்சைகள் உண்டு. அநேகர் தீமைகளாலும் பாவத்தாலும் மேற்கொள்ளப்படுகிறார்கள். ஆனால் பாவத்தையும் தீமையையும் மேற்கொண்டு ஜெயஜீவியம் செய்கிற அநேகரும் உண்டு. அது எப்படி? இங்கேயும் கூட கடவுளின் பிரசன்னமும், பிரசன்னமில்லாமையும் காரணமாயிருக்கிறது.

சந்தோஷ ஜீவியத்தின் இரகசியமானது, வாஸ்தவமாய்க், கடவுளுடைய பிரசன்னத்தில் அடங்கியுள்ளது. கடவுள் தம்மை நமக்குப் பட்சமுள்ள தகப்பனாக வெளிப்படுத்தி, நாம் அவரை நமது தகப்பனாக நம்பி, அவருக்குக் கீழ்ப்படிந்து முழுவதும் நம்மை அவருக்கு ஒப்புக்கொடுத்தால் நாம் அதிகமதிகமாய் இரட்சிப்பு இன்னதென்று அறிந்து கொள்வோம். நமது இருதயம் அதிகமதிகமாய்ச் சந்தோஷத்தாலும், பாக்கியத்தாலும் நிரப்பப்பட்டு எல்லாக் கஷ்டங்களையும் தீமைகளையும் மேற்கொள்ளும்படியான பெலத்தை அதிகமதிகமாய்ப் பெற்றுக் கொள்வோம்,

நமக்கு அருளப்படுகிற கிறிஸ்மஸ் பண்டிகையின் ஆச்சரியமான விசேஷம் என்னவென்றால்: கடவுள் பிரத்தியக்ஷமாயிருக்கிறார்.

மனுஷ ஜீவியத்தில் உயிருள்ள பட்சமுள்ள தகப்பனாக கடவுள் தம்மை வெளிப்படுத்துவதே அவரது விருப்பம். அவர் தாமே காணப்படுகிறவிதமாய் இவ்வுலகத்தில் வந்தார். இவ்வுலகத்தில் மனுஷ ஜீவியத்தின் நடுவில் ஒருவிசை பெத்லகேமில் பிறந்த சின்னபாலகனின் மூலமாய் வெளிப்பட்டார். அக்குழந்தை இயேசு என்று அழைக்கப்பட்டது. ஏனென்றால் அவர் தமது ஜனத்தைப் பாவத்திலிருந்து இரட்சிப்பார். இன்னும் இம்மானுவேல் என்று அழைக்கப்பட்டார். கடவுள் நம்மோடிருக்கிறார் என்பது அதின் அர்த்தம்.

நம்மோடிருக்க வேண்டுமென்ற கடவுளுடைய விருப்பத்தையும், சித்தத்தையும், நம்மில் ஒவ்வொருவரும் அறியக்கூடிய விதமாய், பெத்லகேம் பாலகனில் கடவுள் வெளிப்படுத்தியிருக்கிறார். மேலும் நாம் அவரையே நம்பும்படியான விதமாயும் அப்படி வெளிப்படுத்தியிருக்கிறார். கடவுளுடைய வசனம் உயிரோடு காணப்படுகிற வார்த்தையாக ஆயிற்று.

மரியாள் இயேசு என்ற சிறு பாலகனைத் தன் கைகளில் ஒரு தரம் முதல் கிறிஸ்மஸ் பண்டிகையிலே ஏந்திக்கொண்டதைப்போல நம்மில் ஒவ்வொருவரும் இந்த கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்திலே மறுபடியும் ஒரு தரம், ஒவ்வொரு நாளும் ஜீவியம் முழுவதும் நம்முடைய இருதயங்களில் அவரைச் சின்னபாலகனாக ஏற்றுக்கொள்ள வேண்டியது. இப்படி நாம் செய்தால், நாம் வாஸ்தவமாகவே, அவர் இம்மானுவேல் என்று அழைக்கப்பட்டதின் அர்த்தத்தை அறிந்துகொள்வோம். நமது இருதயத்தில் கடவுள் பிரசன்னமாயிருக்கிறார் என்பதின் அர்த்தம் இன்னதென்றும் நாம் அறிவோம். பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுவதின்னதென்றும் அறிவோம். தேவதூதர் "உன்னதங்களிலிருக்கிற பராபரனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிதர் பேரிலே பிரியமும் உண்டாவதாக" என்று மேய்ப்பரிடத்தில் பாடினதின் அர்த்தம் இன்னதென்றும் அறிவோம். நாம் அதை எல்லாம் உணர்ந்துகொள்ளுவோம்.

ஏனென்றால் கடவுளுடைய மகிமை நமது இருதயங்களில் சமாதானத்தோடும், சந்தோஷத்தோடுங்கூட வாசம் செய்யும். அத[...] நாம் ஜெய ஜீவியம் செய்யவும் பாவங்களையும் கஷ்டங்களையும் [...]



கொள்ளவும் கடவுளுக்கும் நமக்கடுத்தவர்களுக்கும் உண்மையோடு ஊழியஞ் செய்யவும் கூடியவர்களாயிருப்போம்.

அப்போதுதான் நாம் சரியானவிதமாய் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையைக் கொண்டாடுகிறோம். நமது ஜீவியகாலம் முழுவதுமாக கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுவோம்.

இதைக் கடவுள் நம்மெல்லாருக்கும் கிருபையாய்க் கட்டளையிடுவாராக. ஆமென்.

---

# என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி.

(வருஷக் கடைசி இரவு.)

---

வேத வாக்கியம்: சங்கீதம் 103:1-3.

*என் ஆத்துமமே, கர்த்தரையும் என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தையும் ஸ்தோத்திரி.*

*என் ஆத்துமமே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.*

*அவர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்.*

---

பரம தகப்பனாகிய கடவுளுடைய கிருபையினாலே நாம் மறுபடியும் வருஷத்தின் கடைசி நேரத்தில் வந்திருக்கிறோம். மறுபடியும் ஒரு விசை 12 மாதங்களும் அல்லது 365 நாட்களும் கொண்ட ஒரு வருஷம், முழுவதும், நமக்குப் பின்னே இருக்கிறது. சீக்கிரத்தில் நாம் ஒரு புது வருஷத்தைப் பார்க்கப்போகிறோம்.

இப்பேர்ப்பட்ட சமயத்தில், ஒரு வேளை, பவுல் அப்போஸ்தலன் பிலிப்பியருக்கு "பின்னானவைகளை மறந்து முன்னானவைகளைப் பார்த்துத் தாவியோடிக் கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுள் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளைப் பெறுவதற்கு இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று 3-ம் அதிகாரம் 14-ம்

வசனத்தில் சொன்ன பிரகாரம் வரப்போகிற புது வருஷத்தை நாமும் நோக்குகிறோமாக்கும்.

நிச்சயமாகவே, கடந்த காரியங்களில் நமது எண்ணங்களைச் செலவிடுவதைப்பார்க்கிலும் முன்னானவைகளை நோக்குவது எப்போதும் அதிக முக்கியமானதுதான். "Onward, Christian Soldiers," "யுத்தம் செய்வோம், வாரும், கிறிஸ்துவீரரே!" இதுவே நமது கவனிப்பான வார்த்தைகளாய் இருக்கக் கடவது.

எப்படி இருந்தாலும் இப்படிப்பட்ட கடைசி நேரங்களில், ஒரு நிமிஷமாகிலும், பின்னால் வரப்போகிற காரியங்களைக் குறித்து யோசிக்காமல் போனால், முன்னானவைகளை நோக்குகிறதற்கான பெலனும் சித்தமும் நமக்கு உண்டாவது கூடாதகாரியமாயிருக்கும்.

ஆகையினாலே பழைய வருஷத்தின் கடைசி நிமிஷத்திலாகிலும் நாம் சற்றுநேரம் பின் நோக்கிக், கடந்த காரியங்களைச்சோதித்து நிதானிப்போமாக. அப்போதுதான் அதிகம் அதிகமாய் நாம் புது வருஷத்தில் சந்திக்கப் போகிறவைகளை நாளைக்காலையில் நன்றாகச் சிந்திக்கவும் கூடியவர்களாயிருப்போம்.

* * *

ஒரு வருஷம் முடிந்தது. அவ்வருஷம் உனக்குச் செய்ததையும், அவ்வருஷமுழுமையிலும் நீ அநுபவித்த காரியங்களையும், நீ யோசித்தாயானால் கட்டாயம் அவ்வருஷத்தில் நீ கண்ட குறைவுகளையும், கஷ்ட நிஷ்டூரங்களையும், துக்கமான காரியங்களையும் நீ நினைப்பாய் என்று நினைக்கிறேன். ஒருவேளை அதிகமாய் அவ்வருஷத்தில் உனக்குண்டான சந்தோஷமற்ற காரியங்களையும், அவ்வருஷத்தில் நீ பெறாத நன்மையான காரியங்களையும் நீ நினைப்பாய். ஆனால் நினைக்க வேண்டியது அதுவல்ல. அவ்வருஷத்தில் உனக்கு உண்டான நன்மையான காரியங்களைத்தான் நீ நினைக்கவேண்டியது. அதற்கு மாறாக மனுஷசுபாவமோ அதிகமாய்க் குறை காரியங்களையே நினைக்கிறதாயிருக்கிறது. ஆகையால் தான் பிறர்மேல் குறை கூறுதலிலும்விசனமான காரியங்களையும் துக்கமான காரியங்களையும் நினைத்துக் கொள்வதிலும் நமது நாட்களைப் பின்னிடுகிறோம்.

இப்படியிருக்க, நமக்குரிய குறைவுகளையும், உண்மை தாழ்ச்சிகளையும் சிநேகத் தாழ்ச்சிகளையும் நினைப்பது தகுதியாய் இருக்கும்;



நாம் மற்றவர்களோடு சிநேகபாந்தமாய் இராததினால் விசனப்படுகிறவர்களாய் இராமல், மற்றவர்கள் நம்மோடு சிநேகபாந்தமாய் இராதபடியாலும், நாம் எதிர்பார்க்கிற நல்ல வாழ்வையும் சந்தோஷத்தையும் கடவுள் நமக்குக் கொடாதபடியாலுமே விசனப்படுகிறோம். முறையிடுகிறதும் மனஸ்தாபப்படுகிறதுமான தப்பிதமான வழியில் நமது காலத்தையெல்லாம் செலவழிக்கிறோம். நாம் நமது கிருபையின் காலத்தைக் கடவுளை நினைத்து ஸ்தோத்திரம் செய்வதில் பின்னிட வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஒவ்வொருவருக்கும் அப்படிச் செய்யப்போர்ந்த நியாயம் உண்டு.

இப்படிப்பட்ட சமயத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனின் மனதிலும் இருதயத்திலும் இருக்கவேண்டியது என்னவென்று நாம் இப்போது வாசிக்கக்கேட்ட 103-ம் சங்கீதத்தின் வார்த்தைகளைத் தவிர வேறு பொருத்தமான வார்த்தைகள் சத்தியவேதத்தில் நான் அறிகிறதில்லை.

என் ஆத்துமமே! என் முழு உள்ளமே! கர்த்தரையும் அவருடைய பரிசுத்த நாமத்தையும் ஸ்தோத்திரி. கடவுளுக்கு நமது துதி தோத்திரங்களை, ஒவ்வொரு நாளும், விசேஷமாய் வருஷத்தின் கடைசி நேரமாகிய இப்போதும், கடந்துபோகிற பழைய வருஷத்தின் காரியங்களை நினைக்கிற இச்சமயத்திலும் செலுத்தக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.

ஆனால் இப்படிச்செய்வது எவ்வளவு கஷ்டம்! இங்கே கோவிலில் ஞானப்பாட்டு பலகையில் குறிப்பிட்டதும் கின்னாரத்தில் வாசிக்கப்படுகிறதுமான புகழ்ச்சிக்குரிய ஞானப்பாட்டுகளை நமது உதடுகளால் மாத்திரம் பாடுவதல்ல. கர்த்தர் நமக்கு அருளிய அவருடைய எல்லா உபகாரங்களுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் நமது முழு இருதயத்தாலும் உள்ளத்தாலும் கடவுளை ஓய்வின்றிப் புகழ்ந்து ஸ்தோத்தரிப்பதே விசேஷம்.

நமது முழு ஜீவியத்தையும் அவருக்கு உகந்த காணிக்கையாகப் படைப்பது கஷ்டந்தான். சங்கீதக் காரனுக்கும் அது கஷ்டமாய்த் தான் இருந்தது. துதி தோத்திரங்களைச் செலுத்துவதற்கு நம்மைத் தூண்டி விடுகிற மற்றெதைப்பார்க்கிலும் இரண்டு காரியங்களால் தன்னையும் நம்மையும் நினைப்பூட்டுகிறான். அதாவது:

முதலாவது:—"கடவுளுடைய எல்லா உபகாரங்களையும் மறவாதே."

கடவுளை ஸ்தோத்தரிக்கிறதற்கான யாதொரு நன்மையையும் ஆசீர்வாதத்தையும் நீ பெற்றதில்லை என்று நினைக்கிறாய். நீ ஏழை. கேவலமான வசதியற்ற வீடு உனக்கு இருக்கிறது. உனக்குச் சுகம் இல்லாமல் இருக்கிறது. உன் பெண்சாதியோ, உன் புருஷனோ அல்லது பிள்ளைகளோ அடிக்கடி வியாதிப்படுகிறார்கள். தீர்க்கமுடியாத அதிகக்கடன் உனக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட இன்னும் அநேக காரியங்கள் உனக்கு உண்டு. கடவுளை ஸ்தோத்தரிக்கிறதற்கு ஏதுவான காரியங்கள் ஒன்றுமில்லை என்று நீ நினைக்கலாம்.

நீ சொல்லுகிற கஷ்டங்கள் எல்லாம் உண்மையாயிருக்கலாம். நம்மில் ஒவ்வொருவருக்கும் இதேமாதிரி கஷ்டங்கள் உண்டு. ஆனால் குறைவுகளும் கஷ்டங்களும் மாத்திரம் தானா? கஷ்டங்களும் தொந்தரவுமான காரியங்கள் எனக்கு ஏற்பட்டபோது நான் அடிக்கடி நினைக்கிறது என்ன: இதிலும் அதிகக் கேவலமான கஷ்டம் வரக் கூடுமே. எனக்கு நேரிட்டதைப் பார்க்கிலும் அதிகக் கேவலமான கஷ்டம் நஷ்டங்களை யநுபவிக்கிறவர் எத்தனையோ பெயர். எனக்கு உண்டானவை அவ்வளவு அல்லவே! அவர்களைப் பார்க்க நான் நன்றாயிருக்கிறேன் என்ற ஆறுதலான எண்ணம் எனக்கு இருக்கிறது.

நம்மைப் பார்க்கிலும் அதிகச் சந்தோஷமான நிலைமையில் இருக்கிற அநேகரை அக்கம்பக்கத்தில் நாம் அடிக்கடி பார்க்கக் கூடும் என்பது உண்மைதான். நமக்குக் கிடைக்காத நன்மைகளும் ஆசீர்வாதங்களும் அவர்களுக்கிருந்தால் உண்மையில் இவைகளினால் நமக்குள் சந்தோஷமின்மையும், நன்றி இல்லாமையும் உண்டாகிறது.

ஆனால் இன்னொருபக்கத்திலும் நாம் அடிக்கடி அக்கம் பக்கத்தில் நம்மைப் பார்க்கிலும் சந்தோஷக் குறைவுள்ளவர்களையும் நம்மைப் பார்க்கிலும் குறைவான நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் அநுபவிக்கிறவர்களையும் பார்க்கிறது நிசம்தானே! அது நமக்குச் சந்தோஷத்தையும் நன்றியுள்ள சிந்தையையும் கொடுக்கக்கூடுமே! உன் மேல் அருளப்பட்ட கடவுளுடைய எல்லா உபகாரங்களையும் மறவாதே. சிநேகிதனே, நீ பெறாத நன்மைகளைப் பார்க்கிலும் பெற்ற நன்மைகள் எப்போதும் அதிகம். கடவுள் உனக்கு அளித்த எண



யும் மறவாமல், அவருக்கு உன் புகழ்ச்சியையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்து.

நான் ஒருதடவை ஒரு ஜெபக்கூட்டத்துக்குப் போய் இருந்தேன். அப்போது ஒருவன் எழுந்துநின்று "கடவுளால் எனக்கு உண்டான ஆச்சரியமான ஒரு காரியத்தைப் பாருங்கள். இக்கூட்டத்துக்கு வர நான் அதிகதூர பிரயாணம் செய்யவேண்டியது. அது உங்களுக்குத் தெரியும். புறப்படும்முன் என்னை சுகபத்திரமாய்க் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று ஆண்டவரிடத்தில் மன்றாடினேன். சிறிதுதூரம் போவதற்குமுன் வண்டியின் ஏர்க்கால் முறிந்துபோயிற்று. குதிரை ஓடவில்லை. என்ன ஆச்சரியம்! முறிந்துபோன காலைச் செம்மைப்படுத்திச் சரியான நேரத்தில் ஜெபக்கூட்டத்துக்கு வந்துசேர்ந்தேன். நிச்சயமாகவே, கடவுள் நமது ஜெபத்தைக் கேட்கிறார்" என்று விவரித்துச் சொன்னான்.

பிறகு ஒருவன் எழுந்து சொன்னதாவது: "இதைப் பார்க்கிலும் ஆச்சரியமான ஒரு காரியம் எனக்குண்டு. அதாவது இவ்விதம் நானும்கூட நீண்ட பிரயாணம் செய்யவேண்டியதாயிருந்தது. கடவுள் என் பிரயாணத்தையும் வாய்க்கச் செய்யவேண்டுமென்று நானும் கூட மன்றாடினேன். என்ன ஆச்சரியம்! என் வண்டியின் ஏர்க்கால் முறிந்ததில்லை. ஒரு ஆபத்தும் நேர்ந்ததில்லை. எல்லாம் ஒழுங்காய் முடிந்தது" என்றான்.

பிரியமான சிநேகிதனே! நமது ஜீவியத்தில் யாதொரு அபாயமோ அல்லது கஷ்டமோ எந்தவிதமாகவும் நடவாதிருந்தானால், அதுவே கடவுளின் ஆசீர்வாதத்துக்கு ஆச்சரியமும் நிச்சயமுமான ஒரு அடையாளம் என்பதை மறவாதிருப்போமாக.

கடந்த வருஷத்தில் உனக்கு ஏதும் கெடுதலாக நடவாதிருப்பதும் இங்கே கர்த்தருடைய ஆலயத்தில் கடவுளைச் சந்திக்கக் கூடியவனாயிருப்பதும் வாஸ்தவமாகவே கடவுள் உனக்குத் தமது ஆசீர்வாதங்களை அருளினதுக்கு ஒரு அடையாளம்தான். அதற்காக நீ இடைவிடாமல் கடவுளுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்தக் கடமைப்பட்டவன். என் ஆத்துமாவே, கடவுளின் உபகாரங்களை மறவாதிரு.

கடவுளை நாம் புகழ்ந்து ஸ்தோத்தரிக்கிறதற்காகச் சங்கீதக்காரன், மற்றெதையும் பார்க்க நமக்கு உதவியும் ஏவுதலுமாய் இருக்கிறதான இரண்டு காரியங்களைக் குறித்துக் காட்டுகிறார். அதில் முந்தினதை நாம் இப்போது சிந்தித்தோம்.

இரண்டாவது:—"அவர் உன் அக்கிரமங்களை மன்னிக்கிறார்."

மனிதன் கடவுளுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்தாததற்குக் காரணம் அவன் கர்த்தரிடத்திலே நன்மையைப் பெறாமல்போனதல்ல, அவனுக்குக் கடவுள் அருளின உபகாரங்களை மறந்துபோனதே காரணம் என்று இப்போது பார்த்தோம்.

அப்படி மனிதன் கடவுளுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம்செலுத்தாததற்கு இன்னுமொரு முக்கியமான காரணம் உண்டு. அதாவது:— பாவமன்னிப்பின் அனுபோகம் அவனுக்கு இல்லாததுதான். அப்படி பாவமன்னிப்பின் அனுபோகம் இல்லாததற்குக் காரணம் என்ன? பாவம் இன்னதென்றும், அக்கிரமம் இன்னதென்றும் அறியாமைதான். ஆகையால் அவன் பாவமன்னிப்புக்காகக் கடவுளைச் சரியானபடி சேரவில்லை.

என் பிரிய சிநேகிதனே! பாவம் இன்னதென்று நீ அறிவாயா?

கடந்த வருஷத்தின் உன் ஜீவியத்தை நீ யோசித்தால் ஒரு வேளை கடவுளின் கற்பனைகளை மீறினாய் என்பதை மறுக்க முடியாது. அதற்காக ஒரு வேளை மனதில் விசனப்படுகிறாய். ஆனால், அது பாவத்தை அறிவதல்ல. ஒரு வேளை இயற்கை சுபாவத்தின் பலவீனத்தினால் நடந்தது என்பாய். கிறிஸ்துவின் சமுகத்திற்குமுன் நாம் அமைதலாய் நின்று நம்மையும் நமது ஜீவியத்தையும் அவரோடு ஒப்பிட்டுப் பார்த்தாலல்லாமல் பாவம் இன்னது என்று சரியாய் உணர முடியாதவர்களாயிருக்கிறோம் என்று நினைக்கிறேன். அப்போது தான் நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம் என்பதையும் நாம் எப்பேர்ப்பட்டவர்கள் ஆகவேண்டுமென்று கடவுள் எதிர்பார்க்கிறார் என்பதையும் நாம் உணரக் கூடியவர்களாயிருப்போம். நாம் பரிதாபமான ஏழைப் பாவிகளே.

மேலும், அப்போ, வேறெதைப் பார்க்கிலும் நமக்கு விசேஷமாக வேண்டியது பாவ மன்னிப்புதான் என்று உணரக்கூடியவர்களாயிருப்போம்.



பாவமன்னிப்பை உணருவதென்றால்; வண்ணான் அழுக்கு வஸ்திரத்தை வெளுத்துச் சுத்தம் செய்வதுபோல், கடவுள் நமது பாவங்களையும் கழுவுகிறார் என்று நம்புவது மாத்திரமல்ல கடவுள் நமக்குப் பிதா என்றும் நாம் அவருக்குப் பிள்ளைகள் என்றும் சொல்ல நாம் அபாத்திரர் என்றும் உணருவதும் கடவுள் நமது அசுத்தத்தையும் சிநேகக் குறைவையும் பாராமல் நம்மைத் தேடி, நம்மைத் தமது பிள்ளைகள் ஆக்கவும் புதிய ஜீவியத்தைச் செய்வதற்கு நமக்குப்பெலனையும் சித்தத்தையும் தரவும் பிரியப்படுகிறார் என்று உணருவதும் பாவமன்னிப்பின்னதென்று உணருவதாகும்.

பாவத்தின்பேரிலும் பாவ மன்னிப்பின்பேரிலும் உனக்கு இப்பேர்பட்ட அனுபோகம் இருந்ததேயானால், அப்போதான் கடவுளுக்கு நன்றி செலுத்துவதற்கான முகாந்தரத்தைக்கண்டு கொண்டவனாவாய். உன் முழுஜீவியமும் அவருக்குத் துதிதோத்திரங்களைச் செலுத்தும் சங்கீதமாயிருப்பதே யல்லாமல் வேறொன்றும் நேரிடக் கூடாது.

* * *

பிரியமானவர்களே! நாம் இங்கே ஆலயத்தில் வருஷக் கடைசி மணிநேரங்களில் இருப்பது ஒருவருக்கொருவர் சந்திக்கிறதற்காக மாத்திரமல்ல, எல்லாவற்றிலும் முக்கியமாய் நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்துவை விசேஷித்த விதமாய்ச் சந்திப்பகாகவே வந்திருக்கிறோம். ஏனென்றால் அவரே நம்மை அவருடைய சந்நிதிக்குமுன் வரும்படியாக அழைக்கிறார்.

அவர் மறுபடியும் ஒருதடவை நமக்காகத் தமது திருவிருந்தை ஆயத்தம் செய்திருக்கிறார். அதின் மூலமாய் அவர் தம்மை உன் இரக்ஷகராக வெளிப்படுத்துகிறார். சரியான எல்லையில் அடங்காத, சுயவெறுப்பான சிநேகம் இன்னதென்றும் உனக்குக்காட்ட விரும்புகிறார். இப்படிக் கடவுள் உன்பேரில் வைக்கும் அன்பைக் குறித்துப் புது எண்ணத்தை நீ அடையும்போது கடவுள் உன்னில் எதிர்பார்க்கிறது இன்னதென்று உணரக்கூடியவனாவாய். அது மாத்திரமோ? உன் குறைவுகளையும், உன் மீறுதல்களையும், பாவங்களையும் இன்னும் பாவமன்னிப்பின்னதென்பதையும் உணரக்கூடியவனாவாய். அநேக [illegible]டையர், ஒருகடனைத் தீர்த்தபின் புதிதாய் வேறு பெரியகடன்

வாங்குகிறார்கள். அப்படிப் போல பாவமூட்டையை இராப்போசனத்தில் மறுபடியும் இறக்கிவிட்டு, அதற்கப்பால் பழைய பாவஜீவியத்தினால் பாவத்தைப் பெருக்கலாம் என்று அநேக கிறிஸ்தவர்கள் பாவமன்னிப்பைப் பற்றித் தப்பிதமாய் நினைக்கிறார்கள். அப்படியல்ல என்பதை ஞாபகத்தில் வைப்போமாக.

கடவுள் உன் அபாத்திரத்தன்மையைப் பாராமல் உனக்காகக் கவலைப்படுகிறதையும் இந்தநிமிஷத்தில் நமது குமாரனாகிய கிறிஸ்து இயேசுவை உனக்கே இரக்ஷகராகத்தருகிறதையும் அதினால் சோதனையையும் பாவத்தையும் மேற்கொள்ளுவதற்கும் புதிய ஜீவியம் செய்வதற்குமான பெலனையும் சித்தத்தையும் நீ அடைவதையும் குறித்து நீ உன் இருதயத்தின் ஆழத்தில் சிந்திப்பதுமே பாவமன்னிப்பாயிருக்கிறதே யல்லாமல் வேறெதுவுமல்ல.

பாவமன்னிப்பானது கர்த்தருடைய திருப்பந்தியில்லாமல் வேறெங்கும் அவ்வளவு தெளிவாய் நமக்குக் கிடைக்கிறதில்லை என்று நாம் நினைக்கக் காரணம் என்ன? இரக்ஷகர் தமது பந்தியில் தான் தனித்த ஆத்துமாவை நிச்சயமாகவும் மிகவும் தெளிவாகவும் சந்திக்கிறார். உன் ஜீவியத்தின் இந்த விசேஷித்த சமயத்தில்தான் உன் இரக்ஷகர் உன்னையே தேடித்தமது கரங்களை உன்பேரிலே நீட்டுகிறார்.

என் சிநேகிதனே! நீ எத்தனைதரம் பரிசுத்த இராப்போசனப் பந்தியில் பங்கு பெற்றிருந்தாலும் பாவத்தையும் சோதனைகளையும் மேற்கொள்வதற்கான புதிய பெலனையும் சித்தத்தையும் நீ அடையாவிட்டால் பாவமன்னிப்பு இன்னதென்று நீ உணரவே உணருகிறதில்லை. இப்படி இருந்தால், உன் ஆத்துமாவும்இருதயமும் கடவுளின் பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரிக்காமலிருப்பது ஆச்சரியமல்ல.

எப்படியிருந்தாலும் அவரது பரிசுத்த விருந்தில் உன் இரக்ஷகரைத் தாழ்மையோடும் முழு இருதயத்தாலும் சந்திக்கும்படியாய் வா! வந்து அவரது வாஸ்தவமான பிரசன்னத்தில் பாவத்தை உணர்ந்து உன் பேரிலுள்ள அவரது சிநேகத்தையும் அன்பையும் அனுபவித்தாயானால் அதின் மூலமாய்ப் பாவமன்னிப்பு இன்னதென்று நீ சரியாய் அறிந்துகொள்வாய். நன்றியறிந்த ஸ்தோத்திரத்தினாலும் புகழ்ச்சியினாலும் பழைய வருஷக்கடைசி நிமிஷத்திலாகிலும் உன் இருதயம் நிரப்பப்படும்.



இது மாத்திரமல்ல. இன்னும் புது வருஷம் உனக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரமும் புகழ்ச்சியும் நிறைந்த வருஷமாக இருக்கும். இதற்கென்றே கடவுள் கிருபையாய் உன்னை ஆசீர்வதிப்பாராக! ஆமேன்.

# கடவுளுக்குப் பிரியமான ஒரு புதிய வருஷம்.

(வருஷப்பிறப்புப் பண்டிகை.)

வேத வாக்கியம்: லூக்கா 4:16-21.

இயேசுநாதர் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து தமது வழக்கத்
தின்படியே ஓய்வுநாளில் ஜெபாலயத்தினுட்சென்று வாசிக்க எழுந்து
நின்றார்.
ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தை அவரிடங் கொடுத்தார்கள். அவர்
ஸ்புஸ்தகத்தை விரித்து: கர்த்தருடைய ஆவி என்மேலிருக்கிறது; தரித்
திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அவர் என்னை அபிஷேகம்
பண்ணினாரே. சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் குருடருக்குப்
பார்வையையும் பிரசித்தப்படுத்தவும் நொறுங்குண்டவர்களை விடுதலை
யாக்கவும்
கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்
பினார் என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு
வாசித்துப் புஸ்தகத்தைச் சுருட்டிப் பணிவிடைக்காரனிடங் கொடுத்து உட்
கார்ந்தார். ஜெபாலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்
மேலேயே நோக்கமயிருந்தன.
அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள்
கேட்க இந்தவேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று என்றார்.

இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து தமது வழக்கத்தின்படியே ஓய்வு நாளில் ஜெப ஆலயத்தினுட்சென்றுவாசிக்க எழுந்து நின்று ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தை விரித்து அதில் ஒரு வசனத்தை வாசித்து, அதின் பேரிலே ஒரு பிரசங்கம் செய்தார்.

இதே மாதிரி வருஷத்துவக்கத்தின் முதல் நாளாகிய இன்றையத்தினத்தில் இயேசு நம்மைச் சந்திக்கும்படியாக நமது தேவாலயத்துக்கு வருகிறார். அவர் தாமே வருகிறார். அவரே, பரிசுத்த

வேதாகமத்திலிருந்து ஒரு வாக்கியத்தை வாசித்து, அதின் பேரில் ஒரு பிரசங்கம் செய்கிறார். நீண்ட பிரசங்கமல்ல. சில வார்த்தைகள் மாத்திரம். ஆனால் இந்த பிரசங்கம் எவ்வளவுக்குச் சுருக்கமாயிருக்கிறதோ, அவ்வளவுக்கதிகமாய் இது மனதில் பதியத்தக்கதாயும் நம்மெல்லாருடைய இருதயங்களிலும் ஆழமாய்ப் படக்கூடியதுமான உண்மையான பிரசங்கமாயிருக்கிறது.

சத்திய வேதத்திலிருந்து இன்றைக்கு நமக்கென்று இயேசுவினால் வாசிக்கப்படுகிற வாக்கியம் எது? . இது ஏசாயா தீர்க்கதரிசன புஸ்தகத்தின் பிந்தின பாகத்தில் 61-ம் அதிகாரத்தின் முதல் வசனங்களே.

அதாவது : தீர்க்கதரிசி சொல்லுகிறதாவது : கர்த்தருடைய ஆவி அவர்மேலிருக்கிறார். ஆண்டவர் அவரை அபிஷேகம் பண்ணி அவருக்குச் சில விசேஷித்த ஊழியங்களை ஒப்புக்கொடுத்தார் என்பதே.

எவ்விதமான ஊழியங்கள்? தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல், இருதயம் நொறுங்குண்டவர்களைக் கட்டுதல், சிறைப்பட்டவர்களை விடுதலையாக்குதல் முதலிய ஊழியம் அவருக்குக் கையளிக்கப்பட்டது. ஆண்டவர் தமது ஊழியனாகிய தீர்க்கதரிசிக்குக் கையளித்த விசேஷித்த ஊழியங்கள் கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்ற ஒரே காரியத்தில் கடைசியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த புதுவருஷத்தின் அதிகாலையில் இயேசுகிறிஸ்து தாமே, நம்மெல்லாரையும் கர்த்தருடைய பிரியமான வருஷத்தைப் பிரசித்தப்படுத்தல் என்ற கடவுளுடைய வார்த்தையைக் கொண்டு சந்திக்கிறார். அதன் அர்த்தமென்ன?

* * *

மோசேயின் பழைய நியாயப்பிரமாணத்தின்படி இஸ்ரவேலருக்குள் ஒவ்வொரு 50-ம் வருஷமும் ஜுபிலி வருஷம் அல்லது பரிசுத்த வருஷம் அல்லது விடுதலை வருஷமாகக் கொண்டாடப்பட்டது.

ஒரு குடும்பம் ஏதோ காரணத்தைப்பற்றித் தனது பூஸ்திதியையோ அல்லது அதின் ஒருபாகத்தையோ 49 வருஷங்களில் விற்கும்படி நேரிட்டிருந்தால் அந்தச் சொத்தானது அக்குடும்பத்திற்கு 50-வது வருஷத்தில் ஈடில்லாமல் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும்.—



யாராவது ஒருவன் தன்னையே அடிமையாக மற்றவனுக்குக் கடந்த 49
வருஷங்களில் விற்கும்படி நேரிட்டால், 50-வது வருஷத்தில் அவ
னுக்கு விடுதலை கொடுக்கப்படவேண்டும். இஸ்ரவேலருடைய பூஸ்
திதியானது கடவுளிடத்திலிருந்து நேராக இஸ்ரவேல் கோத்திரங்
களுக்கென்று கொடுக்கப்பட்ட ஈவாய் எண்ணப்பட்டது. அப்பேர்
பட்ட கடவுளுடைய ஈவானது எக்காலத்திலும் ஒரு போதும் இஸ்ர
வேல் கோத்திரங்களில் ஒன்றிலிருந்து எடுபடமுடியாது. அவசர
மிருந்தால் நிலத்தின் விளைந்த விளைச்சலை மாத்திரம் சில வருஷங்
களுக்கென்று விற்கலாம். ஆனால் நிலத்தை விற்றுவிட முடியாது.
இஸ்ரவேலருடைய தனித்த ஆளின் விடுதலை கடவுளுடைய ஈவாக
எண்ணப்பட்டது. அதை விற்றுவிட முடியாது. யாராவது ஒருவன்
தன்னைத் தன் தரித்திரத்தினிமித்தம் யாருக்காவது விற்றுவிட நேரிட்
டால், அவன் தன் ஊழியத்தைச் சில வருஷங்களுக்கு மாத்திரம் விற்
கக்கூடும். ஆனால் தனது தனித்த ஆளின் விடுதலையை ஒரு போதும்
முழுவதுமாய் விட்டுவிட முடியாது. யூபிலிவருஷம் வந்தவுடனே எவ்
விதத்திலும் தன் விடுதலையை மறுபடியும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.
விதத்திலும் தன் விடுதலையை மறுபடியும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

யூபிலி வருஷத்துக்கடுத்த இன்னும் அநேக விதமான சட்டங்
களும் இருந்தன. அந்தச் சட்டங்களுக்கெல்லாம் ஒரே ஒரு நோக்கம்
உண்டு. அந்த நோக்கம் என்னவென்று கேட்டால், இஸ்ரவேல் கோத்
திரங்களுக்கும் குடும்பங்களுக்கும் தனித்த ஆளுக்கும் ஈவாகக்கொடுக்
கப்பட்ட எதுவும் சரியான சொந்த பாத்தியமுடையவர்களுக்குக்
கடைசியாகத் திருப்பிக்கொடுக்கவேணும். கடவுளால் தனக்கென்று
கையளிக்கப்பட்ட ஈவை எந்த மனுஷனும் நித்யமாகத்தள்ளிவிட அல்
லது விட்டுவிட நியாயம்கிடையாது. தனக்கடுத்தவனுக்குக் கடவு
ளால் கொடுக்கப்பட்ட ஈவுகளை, எந்த விதத்திலும் பறித்துக்கொள்ள,
ஒருவனுக்கும் அதிகாரம் இல்லை.

கடவுளுடைய பிரியமான வருஷத்தைப் பிரசித்தப்படுத்தத்
தான் கடவுளால் அனுப்பப்பட்டேன் என்று தீர்க்கதரிசி சொன்ன
போது, தீர்க்கதரிசியின் மனதில் இருந்தது இதுவே.—

இன்னும் இந்த வார்த்தைகளில் சொல்லப்பட்டவைகளின்
விசேஷித்த சந்தர்ப்பத்தை நாம் யோசித்தால், இவை இன்னும் அதிக
மாய் அறிந்து கொள்ளுவோம்.

இஸ்ரவேல் ஜனம் பாபிலோன் பட்டணத்தில் சிறைப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய சொந்த தேசம், பரிசுத்த ஸ்தலங்கள், எருசலேம் தெய்வாலயம் இவையெல்லாம் சத்துருக்களால் நாசமாக்கப்பட்டது. அவர்களில் தப்பிப் பிழைத்தவர்கள் வெகு தூரத்தில் அன்னிய தேசத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அங்கே இஸ்ரவேலரின் கடவுளை அறியாத ஒரு ஜனத்தின் நடுவில் ஜீவிக்கவும் ஊழியம் செய்யவும் வேண்டியதாயிருந்தது. அங்கே வெகு கொடுமையாய்த் துன்பம் அனுபவித்ததினால் சொந்த தேசத்துக்குத் திரும்பிப்போக வேண்டுமென்றும், தங்கள் சொந்த பரிசுத்த ஸ்தலங்களில் தங்கள் கடவுளைத் தடையில்லாமல் பணிய வேண்டுமென்றும் அவர்களுக்குள் ஆவல் உண்டாயிற்று. இந்தத் தங்கள் சிறையிருப்பின் காலத்தில் வாஸ்தவமாகவே அவர்கள் வர வர தங்கள் கடவுளுக்கு நெருங்கி வந்தார்கள். தங்கள் பாவங்களை அறிக்கையிட ஆரம்பித்தார்கள். மேலும் தங்களுடைய கஷ்டங்களினிடையிலே தங்களுடைய கடவுளுக்கு அதிகமதிகமாய் உண்மையோடு ஊழியம் செய்யவும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தார்கள். கடவுள் தங்கள் மன்றாட்டுக்கு இணங்கிச் செய்யப்போகிற ஒத்தாசையைப்பற்றிய ஒருவித தெளிவான அறிவு அவர்களுக்கு அதிகமாய் உண்டாயிற்று. அவர்கள் நடுவில் சில தீர்க்கதரிசிகள் எழும்பினார்கள். அவர்களில் எசேக்கியேல் ஒருவர். இப்பேர்ப்பட்ட தீர்க்கதரிசிகளில் ஒருவரால் செய்யப்பட்ட பிரசங்கங்களின் ஒரு சுருக்கம் நமது சத்தியவேதத்தில் உண்டு. அவருடைய பெயர் நமக்குத் தெரியாது. அப்பிரசங்கங்களை நாம் ஏசாயாவின் புஸ்தகத்தின் பிந்தின பாகங்களில் காணலாம். அவை 40-ம் அதிகாரத்திலிருந்து ஆரம்பிக்கிறது. அவருடைய பிரசங்கங்கள் பாபிலோனிய சிறையிருப்புக்கு 100 வருஷங்களுக்கு முன்னே இருந்த ஏசாயா தீர்க்கதரிசியின் பிரசங்கங்களுக்கும் பிரபந்தங்களுக்கும் ஊடே வைக்கப்படும்படி ஒருவேளை நேர்ந்தது. இப்படி இந்தப் பிரசங்கங்களின் ஆசிரியருடைய பெயர் கொடுக்கப்படாதபடியினாலே அவைகாளாவட்டத்தில் ஏசாயாதீர்க்கதரிசியினுடைய பிரசங்கங்களின் ஒரு பாகங்களாக எண்ணப்பட்டது. சிறையிருப்பின் காலத்திலிருந்த இந்த அறியப்படாத தீர்க்கதரிசி இரண்டாவது ஏசாயர் என்று அநேகமாய் அழைக்கப்படுகிறார்.



விடுதலையைப் பற்றியும் கடவுளுடைய பிரியமான வருஷத்தை
பற்றியும் பேசப்பட்ட இந்த வார்த்தைகளுடைய சரியான தன்
மையை யோசித்தால், அந்த வார்த்தைகளைச் சொல்லக்கேட்ட ஜனங்
களுக்குச் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகளின் அர்த்தம் இன்ன
தென்று அவர்கள் அதிகமாய் அறிந்திருப்பார்கள். சிறையிருப்பு
இன்னதென்று அவர்கள் நன்றாய் உணர்ந்தார்கள். ஆகையால் மீட்
பைப்பற்றியதும் சுயாதீனத்தைப் பற்றியதும் விடுதலையின் வருஷத்
தைப் பற்றியதுமான சுவிசேஷத்தை அவர்கள் வாஸ்தவமாய் அறிந்து
கொள்ளக் கூடியவர்களாயிருந்தார்கள்.

*    *    *

ஒரு ஓய்வுநாளில் ஜெபாலயத்தில் நாசரேத் ஊராருக்கு வாசித்த
வாக்கியமானது இப்படிப்பட்டதாயிருந்தது. இஸ்ரவேல் ஜனங்
களுக்குச் சரித்திர அறிவு எப்போதும் அதிகப் பலமாயிருந்தது.
தங்கள் சொந்த ஜனங்களுடைய சரித்திரத்திலிருந்து கடவுளுடைய
வசனத்தையும் கடவுளுடைய சித்தத்தையும் வாசிக்கக் கற்பிக்கப்
பட்டுப் பழக்கப்படுத்தப்பட்டார்கள். பாபிலோனிய சிறையிருப்
பானது ஒவ்வொரு உண்மையுள்ள யூதனாலும் முழுஜனத்துக்கும்
அவர்களுடைய பாவங்களுக்காகக் கடவுளால் வந்த பயங்கரமான
தண்டனையாக எண்ணப்பட்டது. அப்படியே பாபிலோனிய சிறை
யிருப்பின் விடுதலையானது தமது ஜனங்கள் பேரில் வைத்திருக்கும்
கடவுளுடைய அன்புக்கும் கிருபைக்கும் மகா பெரிய அடையாள
மாக அவர்களால் எப்போதும் எண்ணப்பட்டது. அந்த நாளில்
இயேசுவினால் ஏசாயாவின் புஸ்தகத்திலிருந்து இப்படிப்பட்ட வார்த்
தைகளை வாசிக்கக் கேட்ட ஒரு யூதனுக்கு இதேவிதமான எண்ணம்
உண்டாயிற்று. அவர்களுடைய மனதில் உடனே பாவம், இரட்
சிப்பு என்றவைகளைப்பற்றிய எண்ணம் உண்டாயிற்று.

இயேசுவினால் வாசிக்கப்பட்ட வாக்கியத்தின் பேரிலுள்ள அவ
ருடைய பிரசங்கம் என்ன ? இயேசுவின் பிரசங்கம் “ உங்கள் காது
கள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றயத்தினம் நிறைவேறிற்று ''
என்ற பரிசுத்த லூக்காவின் வார்த்தைகளின் பிரகாரமாயிருக்கிறது.

இதன் அர்த்தமாவது : பாபிலோனிலுள்ள ஜனங்களுக்குக் கட
வுளுக்குப் பதிலாகத் தீர்க்கதரிசி பேசினபோது அவரால் வாக்குக்

கொடுக்கப்பட்டவை எவையோ அவை கடவுளால் மெய்யாகவே நிறைவேறிற்று. ஜனம் விடுதலையடைந்தது. அவர்கள் தங்கள் சுயதேசம் திரும்பிப்போய், அங்கே குடியேறவும் தங்கள் வீடுகளை விசேஷமாக எருசலேம் தேவாலயத்தைத் திரும்பக் கட்டவும் உத்தரவாயிற்று. அதாவது அது ஒரு தனித்த ஜனம் அல்லது ஒரு தனித்த ஜனத்தின் ஒரு கூட்டத்துக்கு அளிக்கப்பட்ட விடுதலையாகவும் மீட்பாகவும் இருக்கிறது. யூதஜனம் பாபிலோனிலிருந்து தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போனபோது என்ன நடந்ததோ அது கடவுள் முழு உலகத்துக்கும், முழுமனுஷஜாதிக்கும் கொடுக்க வேண்டுமென்று விரும்பி ஆயத்தம் செய்துவந்த பெரிய பரிபூரண இரட்சிப்புக்கு அடையாளமாக மாத்திரம் இருந்தது. இந்த இரக்ஷிப்பானது முழு உலகத்துக்கும் எல்லா விதத்திலேயும் இயேசு கிறிஸ்துவிலே வாஸ்தவமாய் நிறைவேறிற்று.

இஸ்ரவேலர் பாபிலோனிலிருந்து தங்கள் சுயதேசத்துக்குத் திரும்பியபோது நடந்தேறிய இரட்சிப்பானது மனுஷ ஜீவியத்தின் ஒரு பாகத்துக்கடுத்ததாய் மாத்திரம் இருந்தது. அவர்களுடைய பழைய ஆஸ்திகள் திருப்பிக் கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு இராஜாங்கத்துக்கடுத்த சுயாதீனம் கொடுக்கப்பட்டது. இது கடவுள் முழுமனுஷ ஜாதிக்கென்றும் ஆயத்தம் பண்ணின பூரண இரட்சிப்பின் அடையாளமாயிருந்ததேயல்லாமல் வேறொன்றும் இல்லை. பூரண இரட்சிப்பு பாவத்திலிருந்தும் தீமையிலிருந்தும் மீட்கிறதும் கடவுளுடைய பிள்ளைகளுக்கொத்த • அன்பும் நீதியுமுள்ள ஜீவியம் செய்வதற்கான பெலத்தைத் தருகிறதுமான இரட்சிப்பாயிருக்கிறது. மனித ஜீவியத்தின் ஒவ்வொரு அம்சத்துக்கும் அடுத்ததாயிருக்கிற இந்த பூரண இரட்சிப்பானது இயேசு கிறிஸ்துவில் வாஸ்தவமாய் நிறைவேறிற்று. ஆகையால் அவர் கடவுளுடைய பிரியமான வருஷத்தைப்பற்றிய தீர்க்கதரிசியின் வாக்கியத்தை வாசிக்கும்போது "உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று" என்று சொன்னார்.

* * *

இப்படிப்பட்ட வேதத்தின் ஒரு வாக்கியத்தைக் கொண்டும், அந்த வாக்கியத்தின் பேரில் செய்யப்பட்ட இப்படிப்பட்ட பிரசங்கத்



தைக் கொண்டும், இயேசுநாதர் இப்புதுவருஷத்தின் காலையில் மறுபடியும் ஒருதரம் நம்மெல்லாரையும் சந்திக்கிறார். இதன் சரியான அர்த்தம் இன்னதென்று நாம் எவ்விதத்திலாகிலும் உணருகிறோமா? இதனால் எவ்வளவு ஆச்சரியமான சுவிசேஷம் நமக்கு அருளப்படுகிறதென்பதை நாம் உணருகிறோமா?

தீர்க்கதரிசியானவர் ஒரு காலத்தில் பாபிலோன் சிறையிருப்பிலிருந்த இஸ்ரவேலருக்கு ஒரு யூபிலி வருஷத்தை அல்லது விடுதலையின் வருஷத்தைக் கூறினது போலவே, இயேசுகிறிஸ்து நாசரேத்தின் ஜனங்களுக்கும் முழு இஸ்ரவேலருக்கும் விடுதலையையும் மீட்பையும் அதிக ஆழமாய்ப் பிரசித்தம் செய்தார். இதேவிதமாய் இப்பூமியில் இயேசு நாசரேத்திலும் தமது ஜீவியகால முழுவதிலும் விடுதலையையும் இரட்சிப்பையும் பிரசித்தம் செய்ததுபோல இன்னும் செய்துகொண்டு வருகிறார். இப்போதும், இன்றைக்கும், இங்கே நமது ஆலயத்திலும் நாம் அவரது வசனத்தைக்கொண்டு செய்துவருகிறார். பூர்வீக இஸ்ரவேலருக்குள் ஒவ்வொரு 50-ம் வருஷமும் யூபிலி வருஷமாகப் பிரசித்திபண்ணப்பட்டு சில விஷயங்களில் மாத்திரம் விடுதலையும் மீட்பும் கொடுக்கப்பட்டது. இயேசுவோ ஒவ்வொரு புது வருஷத்தையும் யூபிலி வருஷமாகவும் மீட்பின் வருஷமாகவும் விடுதலையின் வருஷமாகவும் பிரசித்தம் பண்ணிக்கொண்டு வருகிறார்.

இயேசு கடவுளுடைய பூரண நீதியையும் கடவுளுடைய பூரண அன்பையும் இப்பூமியில் வெளிப்படுத்தியிருக்கிறார். இன்னும் ஒவ்வொரு புது வருஷத்திலும் அதிகமதிகமாய் வெளிப்படுத்தவும் விரும்புகிறார். கடவுளுடைய நீதியும் அன்பும் எங்கெங்கே மனிதருடைய இருதயங்களில் உயிருள்ளதாயும் ஆளுகிற வல்லமையுடையதாயும் ஏற்றுக்கொள்ளப் படுகிறதோ, அங்கெல்லாம் விடுதலையும், பூரண விடுதலையும் ஏற்படும்.

நமக்குள் தரித்திரம் அதிகமாயிருக்கிறது. தரித்திரத்தின் காரணம் என்னவென்றால் பணக்குறைவும் வேலையில்லாமையும் அல்ல. மனுஷர் தங்கள் பொக்கிஷங்களை பரலோகத்தில் சேர்த்து வைக்கிறதுக்குப் பதிலாக இங்கே இப்பூமியில் தேடுகிறதினாலேதான் அடங்கியுள்ளது. இயேசுவினுடைய சுவிசேஷத்தைக் கவனிக்கிறவன், அவனுக்குப் பணக்குறைவு இருந்தாலும், இப்பொழுதும் எப்பொழுதும்

ஐசுவரியவானுக்கப்படுவான். ஏனென்றால் அவன் பரலோகத்திலே மகாபெரிய பொக்கிஷங்களைத் தேடி அடைவான்.

இயேசு இருதயம் நொறுங்குண்டவர்களுக்குச் சுகம் அளிக்க விரும்புகிறார். அநீதியும் சிநேகக்குறைவும் குடிகொண்டிருக்கிற இடத்திலெல்லாம் எப்போதும் இருதயம் நொறுங்குண்ட மனிதர் உண்டு. இயேசுவினால் பிரசித்தம் பண்ணப்படுகிற கடவுளுடைய நீதியும் அன்பும் இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்கும் வல்லமையோடு முடிகிறது.

சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைப் பிரசங்கிக்க இயேசு வந்திருக்கிறார். ஜனத்திரளுக்கும் பொது அபிப்பிராயங்களுக்கும் எப்போதும் அடிமையாயிருப்பதுதான் சிறையிருப்பிலெல்லாம் மகா மோசமானது. இயேசு நமக்குள் சுயாதீனத்தின் ஆவியை சிருஷ்டிக்கிறார். அவர் நமக்குள், நாம் கடவுளுடைய சமுகத்தில், கடவுளுடைய வசனத்தினாலும், சொந்த மனச்சாட்சியினாலும் நடத்தப்பட்டு, யாருக்கும் பயப்படாமல் சுயாதீன ஜீவியம் செய்யும் தைரியத்தைச் சிருஷ்டிக்கிறார்.

இயேசு குருடருக்குப் பார்வையை அளிக்கிறார். இவ்வுலகத்துக்குரிய காரியங்களைப் பார்க்க முடியாத அநேகர் நமது நடுவில் உண்டு. அவர்களைப்பார்க்கிலும் மறுமையின் அழகையும் பிரகாசத்தையும் பார்க்க முடியாத ஏராளமானபேர் உண்டு. இவர்கள் வாஸ்தவமாய் குருடர்களே. அவர்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருக்கிறார்கள். விடுதலையையும் இரட்சிப்பையும் பிரசித்தம் பண்ணுகிறதினாலே இயேசு இப்பேர்ப்பட்ட குருடருக்குப் பார்வையை அளிக்கவிரும்புகிறார்.

புதிய வருஷதினத்திலே நாம் எல்லாரும் சிநேகிதர், அயலகத்தார் முதலியவர்களுக்கு நமது முழு இருதயத்தின் வாழ்த்துதலையும், நல் விருப்பங்களையும் அனுப்புவது வழக்கமாயிருக்கிறது. அநேக சமயங்களில் இந்த நமது வாழ்த்துதல்கள் வெறும் வழக்கமாய் மாத்திரம் இருக்கிறது. இன்னும் நமது வாழ்த்துதல்கள் - இருதயத்திலிருந்து இருதயத்துக்குட்பாய்ந்து ஓடினாலும் - அவை புது வருஷத்தில் நமது நிலைமைகளை மாற்றுவது அசாத்தியம்.



இந்த புதுவருஷ தினத்தின் காலையில் புது வருஷவாழ்த்துத
லோடு நம்மைச் சந்திக்கிற ஒருவர் இருக்கிறார். அவருடைய வாழ்த்து
தலுக்குப் புது சிஷ்டியாக்குகிற வல்லமையும், இரட்சிக்கிற வல்லமை
யும் உண்டு. இப்படிப்பட்ட ஆச்சரியமான வாழ்த்துதலோடு நம்மைச்
சந்திக்கிறவர் இந்தப் புது வருஷத்தை மறுபடியும் ஒரு தரம் கர்த்த
ருக்குப் பிரியமான வருஷமாகப் பிரசித்தம் செய்கிறவராகிய இயேசு
கிறிஸ்துவே. அவரே, நம்மில் ஒவ்வொருவருக்கும், நாம் அவரை எவ்
வளவாக ஏற்றுக்கொள்ளுகிறோமோ அவ்வளவாக எல்லாவிதத்திலும்
இந்தப் புதுவருஷத்தை யூபிலி வருஷமாகவும், விடுதலையின் வருஷ
மாகவும் செய்யக்கூடியவராயுமிருக்கிறார்.

இயேசுநாதர் நாசரேத்திலும் தமது முழு ஜனத்துக்கும் விடுதலை
யையும் இரட்சிப்பையும் பிரசித்தம் செய்தார். அக்காலத்தில் அவ
ருடைய சுவிசேஷத்தைக் கேட்டவர்களுக்குச் சம்பவித்தது என்ன?
முழு உலகத்திலும் இன்றைக்கு வாஸ்தவமாகவே யூத ஜனம்தான்
எல்லா ஜனங்களிலும் மகா நிர்ப்பாக்கியமான ஜனம். இந்த ஒரே
ஜனம் தான் தங்களுக்கென்று சொந்தமான பூஸ்திதியில்லாத ஜனம்.
அவர்கள் இப்படியானதற்குக் காரணம் என்ன? நாசரேத்தூரார்
இயேசுவின் வாயிலிருந்து புறப்படுகிற கிருபை நிறைந்த வார்த்தை
களுக்குக் கொஞ்சநேரம் ஆனந்தித்து, பிறகு கோபத்தால் நிறைந்து
எழுந்து அவரைப் பட்டணத்தைவிட்டுத் தள்ளி, பட்டணம் கட்டப்
பட்டிருந்த மலைச்சிகரம்மட்டும் கொண்டுபோய்த் தலைகீழாகத் தள்ளப்
பார்த்தார்கள்.

நாசரேத்தில் நடந்த இந்தக் காரியத்தைக் குறித்து மத்தேயு
சுவிசேஷகர் "அவர்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தம் இயேசு
அங்கே மகத்துவமான வல்லமைகளைச் செய்யக் கூடாதவராயிருந்
தார்" என்று சொல்லுகிறார்.

மனுஷருடைய இருதயத்திலிருக்கிற அவநம்பிக்கையையல்லா
மல் வேறொன்றும் விடுதலையையும் இரட்சிப்பையும் கொண்டுவருகிற
இயேசுவைத் தடுக்கிறதாயிராது. மனுஷருடைய இருதயங்களிலிருக்
கிற நம்பிக்கை தான் ஏற்கனவே நீதியும் அன்பும் பூரணமாய் வாசமா
யிருக்கிற கடவுளுடைய இராச்சியத்தை இப்பூமியில் அதிகமதிகமாய்
ஸ்தாபிக்க இயேசுவுக்கு வழியைத் திறக்கிறதாயிருக்கிறது.

"விசுவாசிக்கிறவனுக்கு எல்லாக் காரியங்களும் கூடியதாயிருக்கிறது" என்று இயேசு ஒருதரம் சொன்னார். இதை வியாதியாயிருந்த ஒரு பையனுடைய தகப்பனுக்குச் சொன்னார். இயேசுவின் இந்த வார்த்தையைக்கேட்ட தகப்பன் உடனே கண்ணீரோடு "ஆண்டவரே நான் விசுவாசிக்கிறேன். என் அவிசுவாசத்துக்கு உதவி செய்யும்" என்று கூவி இயேசுவினிடம் எதிர்கொண்டு போனதாக நாம் வாசிக்கிறோம். நாமும் இப்படிச் செய்வோமாக. அப்போது நிச்சயமாகவே, இப் புது வருஷம் நமக்கு கர்த்தருடைய பிரியமான வருஷமாகவும் பாக்கியமும் ஆசீர்வாதமும் பொழிகிற புது வருஷமாகவும் முடியும்.

ஆமேன்.

---

## உனக்காகவே.

(பெரிய வியாழக்கிழமை.)

---

வேத வாக்கியம்: லூக்கா 22:7-20.

பஸ்கா ஆட்டைப் பலியிடவேண்டிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள் வந்தது.

அப்பொழுது இயேசுநாதர் பேதுருவையும் யோவானையும் அழைத்து: நாம் பஸ்காவைப் புசிக்கும்படி நீங்கள் போய் நமக்கு ஆயத்தம்பண்ணுங்களென்றார்.

அவர்கள்: நாங்கள் எங்கே ஆயத்தம்பண்ணுவது? உமது சித்தமென்னவென்று கேட்க

அவர்: இதோ, நீங்கள் நகரத்திற்குட் போகும்போது தண்ணீர்க்குடம் சுமந்து வருகிற ஒரு மனுஷன் அங்கே உங்களுக்கு எதிர்ப்படுவான், நீங்கள் அவனைத்தொடர்ந்துபோய் அவன் செல்லும் வீட்டிற்குள் நீங்களும் சென்று அந்த வீட்டெஜமானிடம்:

நான் என் சீஷரோடு பஸ்காவைப் புசிக்கும் அறை எங்கே என்று போதகர் உம்மிடம் கேட்கிறாரென்று சொல்லுங்கள்.

கம்பளமுதலானவைகள் விரித்திருக்கிற பெரிய மேல் அறையை உங்களுக்குக் காண்பிப்பான். அங்கே ஆயத்தம் பண்ணுங்களென்று சொன்னார்.

அவர்கள் போய்த் தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டு பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.



வேளை வந்தபோது அவரும் அவருடன் அப்போஸ்தலரும் பந்தியமர்ந்தார்கள்.

அப்பொழுது அவர் அவர்களிடம்: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசைகொண்டிருந்தேன்.

கடவுளின் ராஜ்யத்தில் இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதே யில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொல்லிப்

பானபாத்திரத்தை எடுத்து நன்றிசெலுத்தி: நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்;

கடவுளின் ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழ ரசத்தை இனி அருந்துவதில்லை யென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அப்பத்தையும் எடுத்து, நன்றி செலுத்தி அதைப்பிட்டு அவர்களிடம் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரம்; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

போஜனம் பண்ணின பின்பு அவர் அப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை என்றார்.

---

இன்றையத்தினம் நாம் பரிசுத்த இராப்போசனத்தின் ஸ்தாபகத்தை ஆசரிக்கிறோம். நமது இரக்ஷகர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிரவில் என்ன சம்பவித்தது என்பதை நமது வாக்கியத்தில் நாம் கேட்டிருக்கிறோம்.

நமது ஆண்டவரும் இரக்ஷகருமானவர் பஸ்காப் பண்டிகையை ஆசரிக்கும்படியாகத் தமது சீஷரோடு எப்படி வந்தாரென்றும், அச் சமயத்தில் அவர் அப்பத்தையும் பாத்திரத்தையும் எடுத்து "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; இந்தப் பாத்திரம் உங்களுக்காகவும் அநேகருடைய பாவமன்னிப்புக்கென்றும் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்றும் சொல்லிப் பகிர்ந்துகொடுத்தார்.

எக்காலத்திலும் உலகமெங்கும் கிறிஸ்துவினுடைய உண்மையான சீஷர் இதற்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள்.

கிறிஸ்தவசபைகளிலும், உலகத்திலுள்ள திருச்சபையிலுமுள்ள ஜனம், விசேஷமாக இத்தினத்தில் கர்த்தருடைய திருப்பந்தியில் சேருகிறார்கள்.

இப்பொழுது நான் என்னையும், உங்களெல்லாரையும் ஒரு கேள்விகேட்க விரும்புகிறேன்: பரிசுத்த இராப்போசனம் இன்னதென்று நாம் வாஸ்தவமாய் ஆலோசித்திருக்கிறோமா? பரிசுத்த இராப்போசனத்தின் அர்த்தம் இன்னது என்று யோசிக்கக்காலத்தை அதற்கென்று ஏற்படுத்தினோமா? இப்படிச் செய்தோமோ இல்லையோ, எப்படியாவது இப்போது அப்படிச் செய்வோமாக. இதைக் குறித்து சொல்லக்கூடியது வெகு கொஞ்சம் என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால், கடவுள் கிருபையால் நமக்குக் கொஞ்சமாவது வெளிப்படுத்துவார் என்று நம்புகிறேன்.

* * *

கடவுள் வார்த்தைகளின் மூலமாய் நம்மோடு பேசுகிறார். நமக்கு சத்தியவேதம் இருக்கிறது. நீங்கள் அதை வீட்டில் அபூர்வமாய் வாசிக்கிறதில்லை என்று நம்புகிறேன். இங்கே தேவாலயத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் வாசிக்க நீங்கள் கேட்கிறீர்கள். அன்றியும் அது உங்களுக்கு விஸ்தரிக்கவும் படுகிறது.

சத்திய வேதத்திலோ நமக்கு விளங்காதவை அநேகம் இருக்கின்றன. கர்த்தருடைய வசனத்தை விஸ்தரிக்கும்படி அழைக்கப்பட்ட நாங்கள் அடிக்கடி அதிருப்தியான ஊழியத்தைச் செய்கிறோம். நம்மில் ஒவ்வொருவரும் அநேகவிசை கடவுள் தமது வசனத்தின் மூலமாய் தனித்தனியே நேரேசொல்ல விரும்புவதை அறிந்துகொள்ளக்கூடாதவர்களாயிருக்கிறோம் என்பதை அநுபவத்தில் கண்டிருக்கிறோம் என்று நினைக்கிறேன்.

கடவுள் வார்த்தைகளின் மூலமாய் மாத்திரமல்ல கிரியைகளின் மூலமாயும் நம்மோடு சிலசமயங்களில் பேசுவது நமக்கு அவசியமாகத் தோன்றுகிறது.

நீ மற்றவர்களோடு பேசும்போது மாத்திரமல்ல, ஆனால் அதே சமயத்தில் செய்கைகளோடு அப்படிச் செய்யும்போது நீ காரியத்தை எவ்வளவு சுலபமாய் மற்றவர்கள் அறிந்துகொள்ளும்படி விஸ்தரிக்கக்கூடியவனாயிருக்கிறாய் என்பது உனக்கு நன்றாய்த் தெரியும். அவர்கள்



போகவேண்டிய வழியைப் பேசும் வார்த்தைகளால் விவரிக்கிறதைப் பார்க்கிலும் அதேசமயத்தில் அவ்வழியை எடுத்துக்காட்டுவதினால் அல்லது அவர்களோடு கொஞ்சதூரம் போவதினாலும், இன்னும் அவர்கள் செய்யவேண்டிய வேலையை நீ பேசும் வார்த்தைகளால் விவரித்துச் சொல்லுவதைப்பார்க்கிலும் நீயே ஆயுதங்களைப் பிடித்துச் செய்துகாட்டினால் காரியம் சுலபமாய் அறிந்துகொள்ளப்படும்.

நாம் அநேக விஷயங்களில் புத்தியற்ற பிள்ளைகளைப்போல இருக்கிறதையும், அவருடைய அன்பையும், சித்தத்தையும் அறிவதில் மெதுவாயிருக்கிறதையும் நன்றாய் அறிகிற கடவுள் இதேவிதமாய்ச் செய்கிறார். அவர் தமது வார்த்தைகளின் மூலமாய் மாத்திரமல்ல, கிரியைகளின் மூலமாயும் நம்மோடு பேசுகிறார். அவர் செய்யும் கிரியைகளிலெல்லாம் அதிமுக்கியமானது ஒன்று உண்டு. இது பரிசுத்த இராப்போசனந்தான் என்று துணிந்து சொல்லுகிறேன்.

நமக்குக் கடவுளுடைய அன்பையும் சித்தத்தையும் சொல்லுவதற்கென்றே கடவுள் கிறிஸ்துவை இந்த உலகத்தில் அனுப்பினார். கிறிஸ்து கடவுளுடைய அன்பைப் பிரசங்கித்து, அநேக காரியங்களைச் செய்து காட்டி, இதின்மூலமாய்க் கடவுள் மனுஷஜாதியை எவ்வளவாய்ச் சிநேகிக்கிறார் என்பதைக் காண்பித்தார். இப்பேர்ப்பட்ட செய்கைகளில் கடைசியான ஒன்றை இந்த நாள் நமக்கு நினைப்பூட்டுகிறது.

தமது சீஷரைப் போசனத்துக்கென்று கூட்டிச்சேர்த்தார். அந்நேரத்திலே இந்த உலகத்தில் தமக்கு நேரிட்ட துன்பங்களில் கடைசியான துன்பங்களைச் சந்திக்கப்போயிருந்தார். சிலுவையில் அறையப்பட ஒப்புக்கொடுக்கப்போயிருந்தார். அவருடைய சரீரம் சீர்குலையப்போயிருந்தது. இரத்தம் சிந்தப்படப்போயிருந்தது. இவைகளெல்லாம், அவர்களுடைய இரட்சிப்புக்கு ஏன் அவசியமானதாயிருந்தது என்று அநேகந்தரம் சீஷருக்குச்சொல்ல விரும்பிவந்தார். அவர் அவர்களை எவ்வளவாய்ச் சிநேகிக்கிறார் என்றும் அவர்களுக்காக இவைகளையெல்லாம் சகிக்க விரும்புகிறார் என்றும் விளக்கும்படி பிரயாசப்பட்டு வந்தார். ஆனால் அவர்களோ அறிந்துகொண்டது வெகு சொற்பந்தான்.

தமது ஜீவியத்தின் கடைசிச் சாயந்தரமாகிய அப்போது அவரும்
அவரது சிஷரும் சேர்ந்து பந்தியிருந்தார்கள். இப்படி இருக்க அவர்
ஒரு அப்பத்தை எடுத்தார். சிறு துண்டையல்ல, யூதர் பஸ்கா விருந்
தில் உபயோகித்த தட்டையான பெரிய அப்பத்தை எடுத்தார்.
அதைப் பிட்டுத் தமது சிஷர்களுக்குப் பகிர்ந்தார். அவர் சொல்ல
விரும்பினது: "நான் இந்த அப்பத்தைப் பிட்டு உங்களுக்குப்
பங்கிடுகிறேன். நீங்கள் சாப்பிடுகிறீர்கள். அதேமாதிரி என்சரீரமும்
சிலுவையின் மரணத்தினால் உங்களுக்கென்றே பிட்கப்படும்" என்று
சொல்ல விரும்பினார் என்று நினைக்கிறேன்.

அவர் திராக்ஷரசம் நிறம்பிய பாத்திரத்தை எடுத்து (யூதர் இப்
படித் தங்கள் பஸ்கா பண்டிகையில் செய்தார்கள்), தமது சிஷருக்குக்
கொடுக்கும்பொழுது சொல்ல விரும்பினதாவது: "நான் இந்தத்
திராக்ஷரசப் பாத்திரத்தைக் குடிக்கக் கொடுக்கிறவிதமாய் என் இரத்த
மும் சிலுவை மரணத்தில் உங்களுக்காகவே சிந்தப்படும்" என்று
சொல்ல விரும்பினார் என்று நினைக்கிறேன். இங்கே வார்த்தைகள்
மாத்திரமல்ல, கிரியையுங்கூட இருந்தது. அதுவே மிகவும் கவனிக்கப்
படவேண்டியது.

அவர் தமது சிஷருக்கு "இதை மறுபடியும் மறுபடியும் என்னை
நினைக்கிறதற்காகச் செய்யுங்கள்" என்று சொன்னார்.

அப்படியே நாமுங்கூட, ஏறக்குறைய 2000 வருஷங்களுக்குப்
பின் அநேக லக்ஷக்கணக்கானவர்களோடுகூட, காலா காலங்களில்
இதேவிதமான போசனத்தில் ஒன்றாய்ச் சேருகிறோம். இதன் அர்த்த
மென்ன?

இயேசு தமது முதல் சிஷரோடு எப்படிப் பிரசன்னமாயிருந்
தாரோ அப்படியே நமது நடுவிலுங்கூடப் பிரசன்னமாயிருக்க விரும்
புகிறார் என்பதும், இருக்கிறார் என்பதுமே அதன் அர்த்தம். அப்ப
மும் இரசமும் உனக்குக் கொடுக்கப்படுகிறது. அது ஒரு மனித
கையினால் உனக்குக் கொடுக்கப்படுகிறது உண்மையான காரியம்.
ஆனால் ஆதியில், ஆரம்பத்தில் பிரசன்னமாயிருந்த பிரகாரம், எப்
போதும் கிறிஸ்துவே இந்த விருந்தில் பிரசன்னமாயிருக்கிறார். நீ
அவருடைய வார்த்தைகளைக் கேட்கிறது மாத்திரமல்ல. அத்தோடு
கூட நீ அவரையே அவர்செய்யும் பரிசுத்த இக்கிரியையில் பார்த்து



உணரக்கூடும். உன் எல்லா இந்திரியங்களினாலும் அவருடைய பரி
சுத்த பிரசன்னத்தைக் குறித்து ஒரு நல்லஅநுபவம் உனக்குள் உண்
டாகக்கூடும்.

அப்பம் உனக்குக் கொடுக்கப்படுகையில் "இயேசுக்கிறிஸ்து
வின் மெய்யான சரீரமென்றும்", பாத்திரம் உனக்குக் கொடுக்
கப்படுகையில் இயேசு கிறிஸ்துவின் உண்மையான இரத்தம்
என்றும் சொல்லப்படுகிறது. இதின் அர்த்தமென்ன? இயேசுக்
கிறிஸ்து உனக்காகவே மறித்தார் என்பது அதின் அர்த்தம். உனக்
காகவேண்டியே இயேசு கிறிஸ்து உன்னுடைய பாவங்களிலிருந்தும்,
தீமைகளிலிருந்தும், உன்னை இரக்ஷிக்கிற உன்னுடைய இரக்ஷகராக
இருப்பார் என்றும் இருக்கிறார் என்றும் நீ நிச்சயமடையலாம்.

இதைச் சத்திய வேதம் அடிக்கடி உனக்குச் சொல்லியிருக்கிறது.
ஆனால் இந்த உயர்ந்த வார்த்தைகளும் பெரிய வாக்குத்தத்தங்களும்
உனக்காக வேண்டிச் சொல்லப்பட்டன என்று அறிவது ஒருவேளை
கஷ்டமாயிருக்கலாம். இங்கே பரிசுத்த இராப்போசனத்தில் வார்த்
தைகள் மாத்திரமல்ல ஒரு கிரியையும் உனக்கு உண்டு. அது உன்
னைக்கருதியே செய்யப்பட்டது என்பதில் நீ தவறிப்போவது முற்றி
லும் கூடாதகாரியமாயிருக்கிறது. கடவுளுடைய அன்பெல்லாம்
உன்னுடையது. பாவங்களின் மன்னிப்பு உன்னுடையது. இந்தப்
பரிசுத்த கிரியையினால் கடவுள் இதை உத்தரவாதஞ் செய்கிறார். நீ
இனி சந்தேகப்படுவது முடியாத காரியம்.

இதை நீ உணருகிறது எப்படி என்று எனக்குத் தெரியாது.
ஆனால் சத்தியவேதத்திலுள்ள இந்த வார்த்தைகளோடு கூட கடவு
ளுடைய இந்தப் பரிசுத்த கிரியையும் நான் பெற்றிருப்பது எனக்கு
மிகவும் ஆறுதலாயிருக்கிறது என்பதை நான் சொல்லவேண்டியவனா
யிருக்கிறேன். பரிசுத்தத்திருவிருந்தில் பரமதகப்பனாகிய கடவுளு
டைய கரங்கள் எனக்காக என்னைநோக்கி விரிக்கப்பட்டுத்திறந்திருக்
கிறது என்பது எனக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது.

* * *

பரிசுத்த இராப்போசனமானது, நமது பேரிலுள்ள கடவுளு
டைய அன்பை நாம் பார்க்கவும், உணரவும் கூடிய ஒரு செய்கையா

யிருக்கிறதென்று நாம் சொன்னோம். மேலும், பரிசுத்த இராப்போசனத்தில் உண்டாகும் கடவுளுடைய பிரசன்னத்தைக்குறித்து இன்னும் கொஞ்சம் விசேஷித்துச் சொல்ல விரும்புகிறேன்.

எப்போதும் பிரசன்னமாயிருக்கிற மகத்துவமுள்ள கடவுள் பேரில் நம்பிக்கை வைப்பது நமக்கு அடிக்கடி கடினமாயிருக்கிறது. மகத்துவமுள்ள ஒரு கடவுள் பிரசன்னமாயிருக்கிறார் என்பதற்கு விபரீதமான பேச்சுகள் நம்மை ஏவுகிற அநேக விஷயங்கள் உலகத்திலும், நமது தினஜீவியத்திலும், உண்டு. மகத்துவம்பொருந்திய உயிருள்ள கடவுள் உலகத்தில் இல்லை என்றோ அல்லது கடவுள் இருக்கிறார் என்றோ ஒப்புக்கொண்டாலும், அவர் வெகுதூரத்தில் இருக்கிறார். அவர் நமக்காக எவ்விதத்திலும் கவலைப்படுகிறதில்லை என்று தினசரி நடக்கும் அநேக சம்பவங்களின் மூலமாய்த் தோன்றுகிறது.

என்றாலும் நம்மெல்லாருக்கும் கடவுள் தேவையே. கடவுளையன்றி நாம் உயிரோடிருப்பது முடியாது. கடவுளைக் குறித்து நாம் ஒன்றும் அறியாதபோதும் அல்லது ஒரு மகத்துவமுள்ள அன்புள்ள கடவுளின் இருப்பையும் பிரசன்னத்தைக்குறித்தும் நம்ப முடியாதபோதும் நமக்கு ஒரு கடவுளை உண்டுபண்ண முயற்சி செய்கிறோம். கடவுளுக்குச் சமீபத்தில் நாம் ஜீவிக்கவேண்டும். மனித இயற்கை அப்படித்தான் இருக்கிறது.

இந்தியாவில் எங்கும், ரஸ்தா மார்க்கங்களிலும், ஒவ்வொரு சிறு கிராமத்திலும் கடவுளுடைய உருவங்கள் இருப்பதுக்குக் காரணம் என்ன? அதற்கு காரணம் கடவுளையன்றி ஜீவிப்பது கூடாது என்னும் உணர்வு ஜனங்களுக்குள் இருப்பதுதான் என்று நினைக்கிறேன். தாங்கள் தேட்டம்கொண்டிருக்கிற கடவுளின் பிரசன்னத்தை உணராதபோதும், உண்மையுள்ள கடவுளைப்பற்றியே ஒன்றும் அறியாதிருக்கிறபோதும் தங்களுக்கென்று தேவர்களையும், விக்கிரகங்களையும் உண்டுபண்ணி அவைகளைக் கிராமத் தெருக்களிலும், ரஸ்தாக்களிலும் வைக்கப் பிரயாசை படுவார்கள்.

நீ தேவர்களுடைய சிலைகளை உண்டுபண்ணுவது உனக்கு அவசியமல்ல. மகத்துவமும் அன்புமுள்ள கடவுளைப்பற்றிச் சந்தேகம் கொள்ளவும் தேவையில்லை. அவர் தம்மை இயேசுக்கிறிஸ்துவுக்



குள் வெளிப்படுத்தியிருக்கிறார். சத்திய வேதமாகிய தம்முடைய வசனத்தில் அவர் பிரசன்னமாயிருக்கிறார்.

அவருடைய பிரசன்னத்தைக் குறித்தும் அவர் உனக்குச் சமீபமாயிருக்கிறதைக் குறித்தும் இன்னும் பலமான ஒரு உணர்ச்சியைப் பரிசுத்த திருவிருந்தில் அல்லாமல் வேறேவிதமாய்ப் பெறுவது சுலபமல்ல. இங்கே, அந்த பரிசுத்த கிரியையில் கடவுளுடைய பிரசன்னம் உனக்கு இருக்கிறது. உன் சொந்த பரம தகப்பனாகிய மகத்துவமும் அன்புமுள்ள கடவுள் தாமே தம்மையே தமது குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவில் உனக்குக் கொடுக்கிறார். நித்திய ஜீவனின் சுதந்திரத்தைக்கொடுக்கிறவராய் உன்னைப் பெயர் சொல்லி அழைக்கிறதை நீ கேட்கக்கூடும். முன்னிருந்ததைப் பார்க்கிலும், பரிசுத்த இராப்போசனத்தை நாம் மதித்தால், கடவுளுடைய பிரசன்னம் ஒரு மனித சிருஷ்டிக்குத் தரக்கூடிய அந்தச் சந்தோஷத்தையும், உறுதியையும் முன்னிலும் அதிகமாய் நீ அடைவாய்.

* * *

கடைசியாக: பரிசுத்தத்திருவிருந்தினால் கிடைக்கிற பெரிய ஈவுகளில் மற்றொன்றை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

பூர்வகாலம் தொடங்கிப் பரிசுத்த இராபோசனம் "Communio" என்ற லத்தின் வார்த்தையால் அழைக்கப்படுகிறது. "Communio" என்றால், தமிழில் "ஐக்கியம்" என்பது. இது ஒரு அதிக முக்கியமான காரியத்தைப்பற்றி நமக்கு நினைப்பூட்டுகிறது. அதாவது: திரு இராப்போசனத்தில், கடவுளோடு மாத்திரமல்ல, மற்ற மனுஷரோடுங்கூட நம்மை ஐக்கியப்படுத்தும் ஆச்சரியமான வல்லமை உண்டு.

இந்த ஐக்கியப்படுத்தக்கூடும் வல்லமை எப்படிப்பட்டது?

உலகத்தில் ஐக்கியமாக்குகிற வல்லமைகளில் அநேகத்தை நீ அறிவாய். ஜாதிகளையும், குடும்பங்களையும், உறவுகளையும், சங்கங்கள் முதலியவைகளையும் ஐக்கியமாக்குகிற வல்லமைகளையும் நீ அறிவாய். இந்த ஐக்கியமாக்கும் வல்லமை அதிக பலமுள்ளதாயிருக்கலாம். ஆனால் இந்தவிதமான வல்லமையில் அதேசமயத்தில் ஜனங்களை ஒருவருக்கொருவர் பிரிக்கக்கூடிய பெலமான வல்லமையும் உண்டு. உலகில் மற்றதைப்பார்க்கிலும் ஜாதியபிமானம் பிரிக்கும் வல்லமையையுடையதாயிருக்கிறதை நீ அறிவாய்.

பரிசுத்த இராப்போசனத்திலோ, மற்றெதைப்பார்க்கிலும் அதிகமான பிரிக்கக்கூடிய வல்லமையில்லாத ஐக்கியமாக்குகிற வல்லமையை நீ காண்கிறாய். பரிசுத்த இராப்போசனத்தைப்பற்றிய கேள்விகள் பல சமயங்களில் ஜனங்களையும் சபைகளையும் பிரித்திருக்கிறதும் இன்னும் பிரிக்கிறதும் உண்மை. ஆனால் அப்படிப்பட்ட சமயங்களில் அவர்கள் பரிசுத்த இராப்போசனம் இன்னது என்பதை முற்றிலும் மறந்து போகிறார்கள். அது ஒரு போதனையல்ல. அது கடவுளுடைய ஒரு ஈவாயும், பாவிகளுக்கும், பிரிந்துபோன மனுஷஜாதிக்கும் ஒரு உண்மையான சுவிசேஷமாயுமிருக்கிறது.

கடவுளின் இந்தவிதமான ஈவில் உனக்கு ஐக்கியத்திற்குரிய ஆச்சரியமான ஒரு வல்லமையுண்டு. அந்த ஐக்கியத்தின் வல்லமையாது? பரிசுத்த இராப்போசனத்தில் பங்கு பெறுகிறவர்களுடைய பொதுவான விசுவாசமல்ல. எப்படியிருந்தாலும், இதைப் பார்க்கிலும் அதிக பெலமான ஐக்கியமாக்கக்கூடிய வல்லமை உண்டு. இந்த வல்லமை பரிசுத்த இராப்போசனத்தைப்பற்றிய உண்மையான போதகம் அல்ல. ஒருபோதும் இல்லை. ஆனால் கடவுளுடைய அன்பு என்பதும் அவருடைய திறக்கப்பட்ட கரங்கள் இதேவிதமாயும் அளவிடக்கூடாத அளவிலும் எல்லாருக்காகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதுமே இந்த ஐக்கியப்படுத்துகிற வல்லமை.

நாம் குடும்பமுறைமைகளைக் குறித்து அது எப்படி ஐக்கியம் உண்டாகும் என்று பேசுகிறோம். இங்கே, பரிசுத்த இராப்போசனத்தில் நமக்கு ஒரு குடும்பச் சங்கிலி உண்டு. அது உலகமுழுவதிலும்,எல்லாக்காலத்திலும் எட்டிற்று. அக்குடும்பத்தில் தலைவர் கடவுளும் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவும்தான். கடவுள் நம்மெல்லாருக்கும் தமது நித்தியமான ஈவுகளைக்கொடுக்கிறார். அவர் தமது ஈவுகளை நம்மெல்லாருக்கும்,ஓரேவிதமான அளவில்லாத அளவின்பிரகாரம் கொடுக்கிறார். ஆகையால் நாம் எல்லாரும், எவ்வளவாக அவரை நம்பி சந்தோஷமாய் அவரது ஈவுகளைப் பெற்றுக்கொள்ளுகிறோமோ, அவ்வளவாக நாம் எல்லாரும் சமத்துவமான சகோதரரும் சகோதரிகளுமாயிருக்கிறோம். விசேஷமாய்ப் பரிசுத்த இராப்போசனத்தில் இந்தவிதமான எண்ணத்தோடு கடவுளையும் நமது ஆண்டவராகிய இயேசுக்



கிறிஸ்துவையும் சுற்றிலுமுள்ள ஒவ்வொருவரோடும் ஒன்றாய்க் கூடியிருக்கும்போது, கிறிஸ்துவினுடைய சீஷரின் ஐக்கியத்தையே நாம் உணருகிறோம்.

இன்றையத்தினத்திலுள்ள கிறிஸ்துமார்க்கம் அப்படி பிரிவுபட்டிருப்பது ஏன்? பல சபைகளிலுமுள்ள நமது கிறிஸ்தவர்கள் இப்படி கேவலமாய்ப் பிரிந்திருப்பது ஏன்? பரிசுத்த இராப்போசனத்தின் ஈவை நாம் மதிப்பது வெகு கொஞ்சம் என்பது வாஸ்தவமான ஒரு காரணமாயிருக்கிறது. இந்த பரிசுத்த ஏற்பாட்டில் கடவுள் அருளுகிற பெரிய ஈவையும் சுவிசேஷத்தையும் நாம் மதிப்பது வெகு கொஞ்சம் என்று உணருகிறோம்.

இக்காலத்திலுள்ளவர்கள் நூதனமான விஷயங்களைக் கண்டுபிடிக்கப் பிரயாசப்படுகிறார்கள். நீங்களும் இப்படிப்பட்டவர்களோ என்று நான் அறியேன். நீங்களும் அப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன். ஆகையால் நாம் பரிசுத்த இராப்போசனம் அல்லது பரிசுத்தத்திருவிருந்து என்று அழைக்கிற இந்த பரிசுத்த செய்கையிலும் நூதனமான காரியங்களைக் கண்டுபிடிக்கும்படியாய் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆனால், இது பரிசுத்தமான இடம் என்பதை நினைவுகூற வேண்டும். ஒரே இருதயத்தோடும், ஆவலோடும், ஜெபத்தோடும் வாருங்கள். அப்போது இதற்குமுன் நினையாத பிரகாரமாய்க் கண்டடைவீர்கள். கடவுளையே நீங்கள் கண்டடைவீர்கள். அவருடைய அன்பெல்லாம் உன்னுடையதாகும். நீங்கள் நித்திய சந்தோஷத்தைப் பெறுவீர்கள்.

ஆமேன்.

# இயேசு மற்றவர்களுக்காகப் பட்ட பாடுகள்.

(பெரிய வெள்ளிக்கிழமை.)

வேத வாக்கியம்: மார்க்கு 15: 34.

**இயேசு : எலோயீ ! எலோயீ ! லமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.**

"என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்". இவ்வார்த்தையை நாம் உற்றுக்கேட்கும்போது, இயேசுவுக்குண்டான கஸ்திகள், பாடுகளினுடைய அளவிடக்கூடாத ஆழத்தை நாம் முகமுகமாய்ப் பார்க்கிறவர்களாயிருக்கிறோம். அவருடைய பாடுகள் தன் உச்சிநிலைக்கு வந்திருக்கிறது. மனிதரால் மாத்திரமல்ல, கடவுளாலுங்கூட கைவிடப்பட்டவரானார். இயேசு அந்நேரத்தில் உணர்ந்தது இதுதான்.

இவ்விதமாய் நாம் இயேசுவின் பாடுகளைக்குறித்துச் சிந்திக்கும்படி நடத்தப்படும்போது, இயேசுவின்பாடுகளும், துன்பங்களும், இந்த உலகத்திலேயே எந்த மனுஷனாலும் அறிந்து அனுபவிக்கப்படாத அவ்வளவு ஆச்சரியமானதாயும், பெரியதாயும் இருக்கிறதற்குக் காரணம் என்ன என்று நாம் வாஸ்தவமாகவே கேட்கலாம். எக்காலத்திலும் இயேசுவின் சிலுவை மகா பரிசுத்தமான அடையாளமாயிருக்கிறதற்குக் காரணம் என்ன? அதற்குப்பக்கத்திலுள்ள எதுவும் மங்கி ஒன்றுமில்லாமல் போகிறதற்குக் காரணம் என்ன ?

ஒரு சுவீடிஷ் ஞானப்பாட்டில் "இயேசு கிறிஸ்து பாடுபட்டது போல ஒருவனும் பாடுபட்டதில்லை" என்று நாம் பாடுவது உண்மையானாலும், பாடுகளின் ஆழத்தில் அல்லது அவைகளின் அளவில் அதற்குக் காரணம் இல்லை. மேலும், கடவுளாகிய பரமதகப்பனால் கைவிடப்பட்டவராக அந்நேரத்தில் இயேசு பாடுகளை உணர்ந்த அளவாக எவரும், எந்த விதத்திலும், பாடுகளையும் துன்பங்களையும் உணர்ந்திருக்கமாட்டார்கள் என்பது உண்மையாயிருக்கலாம்.



எப்படியோ, இயேசுவின் பாடுகளும், துன்பங்களும், எக்காலத்திலும், இந்த உலகத்திலுள்ள மனுஷஜாதியால் மகாபெரியதும், ஆச்சரியமானதுமாய் அறிந்து அனுபவிக்கப்படுவதற்கு, இவைகளில் ஒன்றாகிலும் காரணமாகாது. முழு உலகத்திலுமுள்ள ஜனங்களையும் பாடனுபவிக்கிற கிறிஸ்துவுக்குமுன் அதிகமதிகமாய்க் கொண்டுவந்து, அதிக மரியாதையோடும் வணக்கத்தோடும் நன்றியறிந்த ஸ்தோத்திரத்தோடும் நிறுத்தக்கூடியதாயிருக்கிறது எது ?

வேறு எவ்விஷயத்திலும் சம்பவியாத அளவில் இயேசுவின் பாடுகள்தான் இரக்ஷிப்பைக் கொண்டுவரும் பாடுகளாக வெளிப்பட்டிருக்கிறது.

இவ்வுலகில் அநேகவிதமான துன்பங்களும் பாடுகளும் உண்டு. ஏராளமான ஜனம் கஷ்டப்படுகிறது. என் சிநேகிதனே ! நீயும் இப்படிப்பட்டவர்களில் ஒருவனாயிருக்கலாம். ஆனால் உன் பாடுகளுக்குத் திட்டமான ஒரு கருத்துண்டா ? உன் பாடுகளுக்கெல்லாம் நீ எஜமானாயிருக்கிறாயா ? நமது பாடுகள் ஏழைகளாகிய நம்மை அடிக்கடி முந்தின நிலைமையிலும் கேடாக்கினதில்லையோ ? பாடுகள் நமக்குக் கசப்பாகவும் கடினமாகவும் ஆகிறது. அவை நமக்குள்ளே அல்லது நமக்கு அடுத்தவர்களாகிய மற்றவர்களுக்குள்ளே யாதொரு நன்மையையும் உண்டாக்குகிறதில்லை.

ஆனால் இயேசுகிறிஸ்துவைப் பார். அவர் தம்மை ஆச்சரியமானவிதமாய்த் துன்பங்களுக்கும் பாடுகளுக்கும் எஜமானாக ஆக்கினார். தமது அளவற்ற பாடுகள் ஒரு மேலான நோக்கத்துக்கென்று உதவவும், உலகத்தைப் பாவத்திலிருந்தும் பொல்லாப்பிலிருந்தும் மீட்டு இரக்ஷிக்க உதவவும், அவைகளைக் கீழ்ப்படுத்தினார். இயேசு தாம் கடவுளால் கைவிடப்பட்டவராகத் தம்மை உணர்ந்தபோதுங்கூட இவ்விதமாகத் தமது பாடுகளையெல்லாம் சகித்து, சிலுவையைச் சுமந்தார்.

இது எப்படிக் கூடியதாயிருந்தது? வாஸ்தவமாக இது ஒரு இரகசியந்தான். ஆனால் எக்காலத்திலும், தினந்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்களால் அனுபவிக்கப்படுகிற உண்மையான ஒரு சத்தியமாயிருக்கிறது.

என்றபோதிலும் ஒரு காரியம் நிச்சயமாயிருக்கிறது. தமது பாடுகள் அவ்வளவு பெரிதாயிருந்தபோதுங்கூட அவர் தம்மைக்

குறித்து நினைத்ததில்லை. தம்மைச் சுற்றிலுமுள்ள ஜனங்களாகிய மற்றவர்களையே எப்போதும் நினைத்து, எல்லாவிதத்திலும் மற்றவர்களின் பேரில் பட்சமுடையவராகவே இருந்தார். தமது அளவில்லாத பாடுகளிலுங்கூட, தம்மைப்பற்றி எண்ணாமல் மற்றவர்களுக்கு நவு களைக் கொடுக்கிறவராகவும், ஊழியஞ் செய்கிறவராகவும் இருந்தார்.

அழுகிற ஸ்திரீகளுக்கு அவர் சொன்னது என்ன? என்னைக் குறித்து நினையாமல், உங்களையும் உங்கள் பிள்ளைகளுடைய நிர்ப்பந்தங்களையும் நினையுங்கள்'' என்றார். சேவகர் அவரைச் சிலுவையில் ஆணிகளால் கடாவினபோது அவர் நினைத்தது என்ன? ''பிதாவே, அவர்களுக்கு மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறதின்னதென்று அறியார்கள்'' என்றார். தமது தாயையும் தமது சீஷரையும் அன்பாய் நினைத்தார். தாம் துன்பத்தின் ஆழத்தில் இருக்கிறதாக உணர்ந்தபோதும், கடவுளால் கைவிடப்பட்டவராக உணர்ந்தபோதும் தம்மைப்பார்க்கிலும் மற்றவர்களைக்குறித்துத் தான், அச்சமயத்திலும் கூட அதிகமாய் நினைத்திருப்பார் என்று நினைக்கிறேன்.

அவர் உலகத்தில் வந்ததுவே மனுஷஜாதிக்குச் சந்தோஷமான சுவிசேஷத்தைக் கொண்டுவருகிறதாயிருந்தது. அதாவது, அன்புள்ள ஒரு பரம தகப்பன் இருக்கிறாரென்பதும் அவர் தம்மில் நம்பிக்கையாயிருக்கிற ஒவ்வொருவருக்கும் சமீபத்தில் இருக்கிறாரென்பதுமே. இதிலே அவர் பிசகிப்போனாரோ? மனுஷஜாதிக்கு ஒரு தப்பான சுவிசேஷத்தைக்கொண்டுவந்தாரோ?

இப்படிக்கொத்த சந்தேகங்கள் மற்றெந்த சரீரப்பாடுகளைப் பார்க்கிலும், அதிகமான வேதனையை உண்டுபண்ணியிருக்கலாம் ஏனெனில் அவர் தம்மையே பூரணமாக மறந்து, மற்றவர்களுக்காக ஜீவிக்கவும் மரிக்கவும் வேண்டியவராயிருந்தார். பிற்பாடு: ''முடிந்தது'' என்று சொன்னார். அதாவது: மனுஷஜாதியின் இரக்ஷிப்புக்கு அவசியமானதெல்லாம் நிறைவேறிவிட்டது. மற்றவர்களுக்காகவே! தம்மைக்குறித்து ஒன்றாகிலும் நினைக்காமல் இருந்தார்.

ஆகையால் அவருடையபாடுகள் ஆச்சரியமான விதமாய் மனுஷஜாதியின் இரக்ஷிப்புக்கென்று ஊழியம்செய்தது, இனியும் எப்போதும் செய்தும் வருகிறது. ஆகையால் நாம் [illegible] ருடைய ஏராளமான பாடுகளைக் காணி [illegible]



உண்மையான நன்றியறிதலுடனும் அவரை தோத்தரிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

எங்கள் பரம தகப்பனாகிய ஆண்டவரே, இயேசு கிறிஸ்துவினிமித்தம் நீர் எங்களைக் கைவிட்டதில்லை. சிலுவையில் அறைப்பட்ட இரக்ஷகரில் உம்மை நாங்கள் கண்டுகொள்ளும்படியாக எங்களுக்குக் கிருபையாய்த் துணைபுரியும். ஆமேன்.

---

# எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே!

(திரித்துவப்பண்டிகைக்குப் பிந்தின 3-ம் ஞாயிறு.)

---

வேத வாக்கியம்: அப்போஸ்தலர் 5:1-11.

அனனியா என்னும் ஒருவன் தன் மனைவி சப்பீராளோடு சேர்ந்து ஒரு
நிலத்தை விற்றான்.

அதன் கிரயத்தில் ஒரு பங்கைத் தன் மனைவியும் அறிய வஞ்சித்து வைத்துக்
கொண்டு ஒரு பங்கைக் கொண்டுவந்து அப்போஸ்தலர் பாதங்களில்
வைத்துவிட்டான்.

பேதுருவோ: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து
வைத்துப்பரிசுத்த ஆவியினிடம் பொய் சொல்லும்படி சாத்தான் உன்
இருதயத்தை நிரப்பினதென்ன?

அது இருக்கும் போதும் உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்ற
பின்னும் அதன் கிரயம் உன் வசத்திலிருந்ததல்லவோ? நீ உன் இருத
யத்தில் இப்படிப்பட்ட காரியத்தைக் கொண்டதென்ன? நீ பொய்
சொன்னது மனுஷரிடத்திலல்ல கடவுளினிடத்திலேயே என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்கவே அனனியா விழுந்து ஜீவனைவிட்டான்;
அதைக்கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.

வாலியர் எழுந்து அவனைத் துணியில் சுற்றி வெளியே கொண்டுபோய் அடக்
கம் பண்ணினார்கள்.

ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின் அவன் மனைவி உள்ளே வந்தாள்,
நடந்தது அவளுக்குத் தெரியாது.

பேதுரு அவளிடம் நிலத்தை இவ்வளவுக்குத்தானா கொடுத்தீர்கள்? எனக்குச்
சொல் என்று கேட்க அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள்.

***பேதுரு அவனைப்பார்த்து ஆண்டவரின் ஆவியைச்சோதிக்கும்படி நீங்கள் ஒரு மனப்பட்டதென்ன? உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களின் கால்கள் இதோ வாசற்படியிலே வந்திருக்கின்றன, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான்.***

***உடனே அவள் பாதத்தில் விழுந்து ஜீவனைவிட்டாள். வாலிபர் உள்ளே வந்து அவள் மரித்திருக்கிறதைக்கண்டு அவளையும் வெளியே கொண்டு போய் அவள் புருஷனண்டையில் அடக்கம் பண்ணினார்கள்.***

***சபையாரெல்லாருக்கும் இவைகளைக் கேள்விப்பட்ட மற்றயாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.***

---

அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு "நீங்கள் சித்தங் கொள்ளவும் உழைக்கவும் செய்கிறவர் கடவுளே; தமது தயவுள்ளசித்தம் நிறைவேறவே இப்படிச்செய்கிறார்," என்று 2-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் எழுதுகிறார். மேலும், எபேசியருக்கு "கிருபையினாலேயே விசுவாசத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது கடவுளின் ஈவு" என்று எழுதுகிறார்.

இங்கே அப்: நமது சொந்த மனதும், நமது சொந்த பலமும், நமது இரக்ஷிப்புக்கடுத்தவைகளுமெல்லாம் கடவுளுடைய ஈவு என்று நமக்கு எடுத்துக் காட்டுகிறார். நாம் பெற்றிருக்கிற ஒவ்வொன்றும் கடவுளுடைய ஈவாயிருக்கிறது. அது கிருபையாய் நமக்கு அருளப்பட்டது. இதை நாம் கவனிக்கும்போது நமது மனதையும் ஆத்துமாவையும் நிரப்பவேண்டிய காரியம் ஒன்றே. இந்தக் காரியம் என்னவென்று கேட்டால், நமது முற்பிதாக்கள் வற்புறுத்தின புத்திசொல்லுதல். அதாவது, "Soli Dei gloria"—தமிழில் "கடவுளுக்கே மகிமை" என்பதே.

"கடவுளுக்கே மகிமை" என்பது நமது இருதயத்தின் தின ஜெபமாயும் நம்மால் தினமும், நமது ஜீவியம் முழுவதிலும் பாடப்படும் பாட்டுமாயிருக்கவேண்டும்.

மேலும், நம்மால் ஒவ்வொருநாளும் ஜெபிக்கப்படவேண்டிய மற்றொரு ஜெபமும், நமது தினசரிஜீவியத்தில் நாம் எதைச் செய்தாலும் பாடப்படவேண்டிய மற்றொருபாட்டும் இருக்கிறது. இந்த ஜெபமும்



பாட்டும் "எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே," அதாவது நமக்குக் கையளிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொன்றும் கடவுளுடைய மகிமைக் கென்றே கையாடப்படவேண்டும் என்பதே நமக்குக் கையளிக்கப் பட்ட ஒன்றும் தன்னயமாய்ப் பிரயோகிக்கப்படக்கூடாது. ஒவ்வொன் றையும் கடவுளுடைய ஊழியத்திற்கென்றும், நமது அயலகத்தாரைச் சிநேகிக்கும் சிநேகத்திலும் தாராளமாய் தத்தம் செய்யவேண்டும்.— "எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே!"

"எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே" என்பதே நமது இருதயத்தைத் தொடக்கூடியதும் பயத்தை உண்டாக்கக்கூடியதுமான அனனியாசப்பீராளைப்பற்றிய விருத்தாந்தம் இன்றைக்குக் குறிக்கப் பட்டவாக்கியத்தின் தலைப்பாயிருக்கலாம். கடவுளுடைய தண்டனையை அவ்வளவு கொடுமையாய்ப்பெற்ற அவர்களுடைய பாவமானது எதுவென்றால், தங்களுடைய சொந்தப் பிரயோசனத்துக்கென்று சிறிது பொருள் வைத்துக்கொண்டதுதான். அவர்கள் கடவுளுடைய மகிமைக்கென்றும், அவருடைய ஜனத்தின் ஊழியத்திற்கென்றும் எல்லாவற்றையும் தத்தம் செய்ய மனமற்றிருந்தார்கள்.

"எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே" என்பது இந்த நாளின் தியானபொருளாய் நமக்கிருக்கட்டும்.

* * *

அதைக்கொண்டு முதலாவது: நாம் பெற்றிருக்கிறதில் ஒன்றும் நமக்குச் சொந்தமானதல்ல என்ற உண்மைப்பொருளைக் குறித்துத் தியானிப்போமாக.

நாம் பெற்றிருக்கிறது ஒவ்வொன்றும் சரீரசுகமோ, பெலமோ, அல்லது வேலையோ, கூலியோ, அல்லது விசேஷித்த வல்லமையோ, அல்லது வீடோ, நிலமோ, பணமோ, அதெல்லாம் கடவுளால் நமக்குக் கையளிக்கப்பட்டதே, நம்முடைய நம்பிக்கைக்கு ஒப்பு விக்கப்பட்டதே. எல்லாம் கடவுளுடைய மகிமைக்கென்றும், அவருடைய ராச்சியத்திலும், அவருடைய ஜனத்தின் நடுவிலும் செய்யப்படும் ஊழியத்திற்கென்றும் அவரால் அளிக்கப்படும் அவருடைய சொத்தாயிருக்கிறது.

இது எருசலேம் சபையின் முதல் கிறிஸ்தவர்கள் உடனே உணர்ந்து அறிந்து கொண்டதும் கவனிக்கப்பட வேண்டியதுமான

உண்மையாயிருந்தது. இந்த ஆதிக் கிறிஸ்தவசபையைப்பற்றி அப்போஸ்தலர் வர்த்தமானத்தின் 2-ம் அதிகாரம் 44-ம், 45-ம் வசனங்களில் "விசுவாசிகளனைவரும் ஒன்றாயிருந்து யாவற்றையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் உடைமைகளையும் விற்று அவனவன் அவசியத்துக்குத் தக்கபடி அவைகளில் எடுத்து எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்" என்றும், 4-ம் அதிகாரம் 32-ம் 34-ம், 35-ம் வசனங்களில் "விசுவாசிகளாகிய கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களா யிருந்தார்கள். ஒருவனும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. அனைத்தும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்றவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலர் பாதங்களில் வைப்பார்கள். அவனவன் அவசியத்துக்குத் தக்கபடி பகிர்ந்து கொடுக்கப்படும். அவர்களில் ஒருவருக்கும் ஒரு குறையுமிருந்ததில்லை," என்றும் வாசிக்கிறோம்.

ஆதி கிறிஸ்தவர்கள் தங்களுக்கு உள்ளது உரியதெல்லாம் தங்களுடைய சொந்த சொத்தல்ல என்பதையும் இவை கடவுளுடைய இராச்சியத்துக்கென்றும் அயலாரின் பிரயோசனத்துக்கென்றும் கையாடப்பட வேண்டிய சொத்து என்பதையும் எந்த விதமாய் அக்காலத்திலேயே உணரக்கூடியவர்களானார்கள்? இக்கேள்விக்கு உத்தரவாக நான் ஒரு காரியத்தைச் சொல்லக்கூடும்.

அதாவது, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது கடவுளுடைய கிருபையைப்பற்றிய அபாரமான அநுபவம் அடைந்ததே. கடவுளுடைய கிருபையால் அவர்களுக்கு இரட்சிப்பின் அபாரமான அநுபவம் உண்டாயிற்று. தன் பாவங்கள் கடவுளுடைய கிருபையால் மன்னிக்கப்பட்டது என்கிற அநுபவம் அடைந்த மனிதனும், சுயபிரயாசையால் அல்ல, கடவுளுடைய கிருபையினாலே தனக்கு இரக்ஷிப்பு அளிக்கப்பட்டது என்று உணர்ந்த மனிதனும் சுகமோ, பலமோ, சத்துவமோ, சொத்தோ அல்லது கடவுளால் தான் பெற்றிருக்கிற மற்றெதுவோ, இவையெல்லாம்கூட கடவுள் அளித்த விசேஷித்த ஈவுகள் என்பதை மற்றவரைப் பார்க்கிலும் அதிகமாய் உணரக்கூடியவனாகிறான். ஒரு மனிதன் தான் பெற்ற ஈவுகளெல்லாம் தனக்



குச் சொந்தமான, தனக்கே பிரயோசனமான ஈவுகள் அல்ல, கடவுளுடையவைகள் என்பதை உணராவிட்டால் அதினால் என்ன தெரிகிறது? இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கடவுளுடைய கிருபையினாலே தன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்கிற அநுபவமும் கடவுளுடைய கிருபையினாலே இரக்ஷிப்பு தனக்குக் கிடைத்தது என்கிற அநுபவமும் அவனுக்கு இல்லாததுதான்.

எருசலேமின் ஆதிகிறிஸ்தவர்களுக்குக் கடவுளுடைய கிருபையினாலே புதுமையும் அபாரமுமான இப்பேர்ப்பட்ட அநுபவம் இருந்தபடியினாலே தாங்கள் பெற்ற ஈவுகளைக் கடவுளுடைய இராச்சியத்துக்கென்றும், அயலாரின் ஊழியத்திற்கென்றும் தத்தம் செய்யக்கூடிய அநுபவம் அவர்களுக்கே இயற்கையாயிருந்தது. அப்போஸ்தலர் வர்த்தமானம் 4ம் அதிகாரத்தில் எருசலேமிலுள்ள ஆதிக் கிறிஸ்தவர்களைக் குறித்து அவர்களில் ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொன்னதில்லை என்று நாம் வாசிக்கிறது வாஸ்தவமாகவே மெச்சத்தக்கதாயிருக்கிறது. இந்த ஆதிக் கிறிஸ்தவர்கள் ஆவியிலும் ஜெபத்திலும் எப்படி ஒருமித்து இருந்தார்கள் என்கிறதுக்கு இதுவும் ஒரு காரணம். அவர்கள் ஜெபத்தில் ஒருமித்திருக்கும்போதெல்லாம் ஏதோ ஒரு விசேஷம் சம்பவிக்கிறதுக்கு இது ஒரு காரணமாயிருக்கிறது. அவர்கள் ஒருநாள் ஒன்றுகூடி ஜெபித்தபோது, கூடின இடம் அசைந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதிலும் வல்லமை நடந்திருக்கிறது. கடவுள் அவர்களுடைய ஜெபத்தைக்கேட்டார். எல்லாரும் பரிசுத்த ஆவியால் நிறைந்து கடவுளுடைய வசனத்தைத் தைரியமாய்ப் பிரசங்கித்தார்கள்.

தற்காலத்திலுள்ள கிறிஸ்தவ சபைகளில் ஏன் அப்பேர்ப்பட்ட காரியங்கள் அபூர்வமாயிருக்கிறது? நாமும் அடிக்கடி ஜெபத்தில் கூடுகிறோம். ஆனால் விசேஷம் சம்பவிக்கிறது வெகு அபூர்வம். ஏன்? அதற்கு ஒரு காரணம் உண்டு. அதென்ன? நாம் தன்னயத்தினால் அதிகமாய் நிறைந்திருக்கிறோம். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சொத்துகளும் ஈவுகளும் கடவுளுடைய கிருபையினாலே அவருடைய ஊழியத்திற்கென்றும் அயலாரின் ஊழியத்திற்கென்றும் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை உணராததினாலேதான் நாம் அவைகளில்

கொஞ்சப் பாகத்தையோ முழு பாகத்தையோ நமது சுயலாபத்திற்கென்று வைத்துக்கொள்ளப் பார்க்கிறோம். ஆகையினாலே ஞான காரியங்களில் நமக்குள்ளே ஒருமை இல்லை. நாம் கடவுளை ஆவியின் பெலனோடு ஒருமித்துச் சந்திக்கப் பெலனற்றிருக்கிறோம். ஆகையால் நாம் ஜெபத்தில் ஒன்று கூடும்போது நமது சபைகளில் விசேஷித்த சம்பவம் நடக்கிறதில்லை. இது ஆச்சரியம் அல்ல.

கடவுள் தமது கிருபையினால் இரக்ஷிப்பின் பெரிய அனுபவத்தை நம் எல்லாருக்கும் கிருபையாய்க் கட்டளையிடுவாராக. அப்போது நமக்குள் இருக்கிற தன்னயமான காரியம் போகுமே. அப்போது எருசலேமின் ஆதிக்கிறிஸ்தவர்களைப்போல் நாமும் நம்முடையது ஒன்றும் இல்லை என்று உணருவோமே.

“நமக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை” என்பதே நாம் நமது வாக்கியத்தைக்கொண்டு இன்றைக்குத் தியானிக்கவேண்டிய முதல் காரியம்.

* * *

இரண்டாவது காரியம் : நாம் பெற்றிருக்கிற ஒவ்வொன்றும் கடவுளால் நமக்குக் கையளிக்கப்பட்டது என்பதும் அதை அவருடைய மகிமைக்கென்று உண்மையோடும் அன்போடும் கையாடி ஊழியம் செய்யப் பிரயோகிக்க வேண்டும் என்பதுமே.

“எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே!” இதை உணராத ஒருவன் எருசலேம் சபையில் இருந்தான். அவனுக்குச் சொற்பச் சொத்தாகிய ஒரு வயல் இருந்தது. கடவுளுக்கும் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளுக்கும் ஊழியஞ் செய்ய மனமுள்ளவனாயிருந்தான். ஆனால் தனக்கு உள்ளதில் எல்லாவற்றையும் கடவுளின் ஊழியத்திற்கென்று தத்தஞ்செய்ய மனமற்றிருந்தான். தானும் தன் பெண்சாதியும் சேர்ந்து தங்கள் சொத்தில் சிலதை வஞ்சித்து ஒரு பங்கை மாத்திரம் கொண்டுவந்து கடவுளுக்குக் கொடுத்ததாக அவர்களைக் குறித்துச் சொல்லியிருக்கிறது.

அனனியாவும் சப்பீராளும் ஆரம்பமுதல் ஒருமித்து தன்னயமுள்ளவர்களாயிருந்தார்களோ? என்பது எனக்குத் தெரியாது. ஏதேன் தோட்டத்தில் பெண்சாதி தன் புருஷனைப் பாவத்துக்குத்



தூண்டி அவனைப் பாவத்துக்குட்படுத்தினது போல இதுவும் நடந்தி
ருக்கலாம். புருஷனைப் பார்க்கிலும் பெண்சாதி வீட்டுச் சொத்தி
லும், ஆகாரத்தை தயாரிப்பதிலும் அதிகக் கரிசனமுள்ளவள் என்
பது இயற்கை. இன்னும், கஷ்ட ஜீவனமான குடும்பத்தில் புருஷ
னைப் பார்க்கிலும் பெண்சாதியே அதிகக் கஷ்டப்படுகிறவளாயிருக்கி
றாள் என்பதும் இயற்கையே.

அல்லது, நமது வாக்கியத்திலுள்ள மனைவி அதிகப் புத்தி விசா
லித்தவளாயும் கர்த்தரிடத்திலும் அவாது இராட்சியத்திலும் புரு
ஷனை விட கரிசனமுள்ளவளாயிருக்கக் கூடும். நமது இந்திய குடும்
பங்களிலும் அப்படியிருக்கக்கூடும் என்று நினைக்கிறேன். ஆஸ்தியில்
சிலதைத் தங்களுக்கென்று எடுத்து வைக்கவும் அதை யாருக்கும்
சொல்லாதிருக்கும்படி தன் பெண்சாதியினிடத்தில் சொல்ல அனனி
யாவுக்குக் கஷ்டம் இருந்திருக்கக்கூடும்.

காரியம் எப்படியிருந்திருந்தாலும் நமது வாக்கியத்தில் அனனி
யாவையும் சப்பீராளையும் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிற
காரியம் விசனிக்கத்தக்கதே. புருஷனும் மனைவியும் உண்மையோடும்
நம்பிக்கையோடும் ஒருவருக்கொருவர் உதவுவதுமல்லாமல் கடவு
ளுடைய சித்தத்தை முழுமனதோடும் சேர்ந்து செய்யவும் வேண்டும்.
புருஷனானாலும் மனைவியானாலும் சரி, கடவுளிடத்தில் அதிகமதிகமாய்
நெருங்கிவருவதிலும், கடவுளுடைய சித்தத்தை உண்மையோடு
செய்வதிலும் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவேண்டும். ஏனெ
னில் ஒருவருக்கொருவர் துணையாளாயிருக்கிறார்கள். நமது கிறிஸ்த
வக் குடும்பங்களைக் குறித்துச் சொல்லப்போனால் புருஷனோ அல்லது
பெண்சாதியோ கடவுளுடைய சித்தத்தைச் செய்வதில் ஒருவருக்
கொருவர் அடிக்கடி தடையா யிருந்துவருகிறதுண்டு என்பதை விச
னத்தோடு சொல்லவேண்டும். நமது கிறிஸ்தவ சபைகளில் இப்படி
யிருப்பது தகாது.

கடவுளுடைய மகிமைக்கென்று பிரயோகிக்கும்படியாக நமக்கு
அளிக்கப்பட்டவைகளைச் சரியாய்க் கையாடும் பலவழி வகையுண்டு.
சபையின் அவயவங்கள் தங்களுக்குரியது யாவையும் கடவுளுடைய
இராச்சியத்துக்கென்றும் சபையின் பிரயோசனத்துக்கென்றும்

கையாடும்படியாக அப்போஸ்தலரிடத்தில் பூர்வ எருசலேம் சபையார் கொடுத்தது வழக்கமாயிருந்தது. கடவுளுக்கு நமது பொருட்களைத் தத்தஞ்செய்யும் விஷயத்தில் இது எப்போதும் பொருந்தக்கூடாததாயிருக்கலாம். இவ்வித ஐக்கியம் எருசலேம் சபையில் நீண்டகாலம் நடந்ததாகத் தெரியவில்லை. எருசலேம் சபை வெகு சீக்கிரத்தில் ஏழைச் சபையாகிவிட்டது. ஆகையால் தான் பவுல் அப்: மற்ற சபைகளிலிருந்து பணச்சேர்ப்புச்செய்தான். இவ்வித ஐக்கிய ஒழுங்கினால் தனிச்சபையானின் பராமரிப்புக்கு அடிக்கடி குறைவு நேரிடும். அதனாலே உத்தரவாத உணர்ச்சி நாளுக்குநாள் குறைவுபட நேரிட்டது.

அனனியாவும் சப்பீராளும் தங்களுடைய நிலத்தை விற்றதின் முழு கிரயத்தையும் அப்போஸ்தலருக்கு முன் கொண்டுவராதது பாவம் அல்ல. அவர்கள் கடவுளுடைய மகிமையின் விர்த்திக்கும் கடவுளுடைய இராச்சியத்துக்கும் சம்பந்தமாய் விலைக்கிரயத்தை முழுவதும் அல்லது அதிலே கொஞ்சம் பாகத்தை கையாடும்படியாக வைத்து வைத்திருக்க இடமுண்டு. தங்கள் சுயநன்மைக்கென்றே கொஞ்சம் பாகத்தை வைத்துக்கொண்டது தான் அவர்களுடைய பாவம். அத்தோடு தங்கள் சொத்து எல்லாவற்றையும் கடவுளுடைய இராட்சியத்துக்கென்றும் கிறிஸ்தவ சகோதரரின் நன்மைக்கென்றும் தத்தம் செய்கிறதான எண்ணத்தை எல்லாருக்குள்ளும் உண்டுபண்ணினது வெகு பெரிய பாவமே. இதனாலேதான் அவர்கள் கடவுளால் கொடூரமாய் தண்டிக்கப்பட்டார்கள்.

கடவுளுடைய மகிமைக்கென்று நாமெல்லாரும் ஒரே விதமாய் நம்முடைய சொத்தையும் பெலத்தையும் பொருட்களையும் தத்தம் செய்ய கடவுள் விரும்புகிறதில்லை. நாமெல்லாரும் தகுதியானதும் சரியானதுமான வழியில் அவருக்கும் அவருடைய மகிமைக்கும் ஊழியஞ் செய்யவேண்டுமென்று விரும்புகிறார். நம்மில் ஒவ்வொருவரும் கடவுளுக்கும் அவரது மகிமைக்கும் ஊழியஞ்செய்யும் நல்ல வழி வகைகளைக் கண்டு பிடிக்கும்படி விரும்புகிறார். ஆனால் நாம் தன்னயமுள்ளவர்களாய் ஒன்றையும் மறைக்காமல், எப்பேர்பட்டதானாலும், எல்லாவற்றையும் கடவுளுடைய இராச்சியத்துக்கென்றும் சகோதர சகோதரிகளின் நன்மைக்கென்றும் தத்தஞ் செய்யும்படியாய் விரும்புகிறார்.



நமது கிறிஸ்தவ சபைகளின் அவயவங்கள் எல்லாரும் தங்களுக்கு உரியதெல்லாவற்றையும் கடவுளுடைய மகிமைக்கென்று கையாடி வந்தால், அது எத்தனை மெச்சத்தக்க காரியமாயிருக்கும்!

நம்மில் ஒவ்வொருவருக்கும் விசேஷித்த அழைப்பும் விசேஷித்த தினசரி வேலையும் உண்டு. என் சிநேகிதனே! நீ கடவுளுக்கு ஊழியஞ் செய்கிறாயா? அல்லது உனக்களிக்கப்பட்ட ஈவுகளைக்கொண்டு உனக்காகவே ஊழியஞ் செய்கிறாயோ? நீ உன் தினசரி ஊழியத்தைச்செய்கிற விதம் உன்னை உன் வேலையில் கவனிக்கிற மனுஷருக்கு என்ன போதிக்கிறது? நீ சம்பள உயர்த்திக்காக ஆவலுள்ளவனாயிருக்கிறாய் என்று சொல்லுகிறதா? உயர்ந்த உத்தியோகத்துக்குப் போக ஆவலுள்ளவனாயிருக்கிறாய் என்று சொல்லுகிறதா? அல்லது உன் வேலையின் உன் உண்மையும் ஊக்கமும் மற்றவர்களுக்கு எளியவர்களையும் ஏழை பாவிகளையும் தாங்கி ஆதரித்துப் பரிசுத்தப்படுத்திக் கடவுளுடைய வல்லமையை வெளிப்படுத்தும் சுவிசேஷமாயிருக்கிறதா?

நமது சபைகளில் உதவிக்காக வருந்தும் அநேகர் உண்டு. கடவுளுடைய இராட்சியத்தைக் கட்டும் விஷயத்தில் செய்யப்படுவது வெகு கொஞ்சம்.—இயேசு கிறிஸ்துவின் மூலமாயுள்ள இரட்சிப்பின் சுவிசேஷம் கேட்கப்படுவதும் கேட்கப்படும் மனுஷரும் வெகு கொஞ்சமே. ஏன் அப்படி நடக்கிறது? ஒருவருக்கொருவர் உதவி செய்யக்கூடாதவர்களாயிருக்கிறோமா? கடவுளுடைய இராட்சியத்தைப் பிரஸ்தாபப்படுத்த நமக்கும் வழியும் பெலனும் இல்லையா? நமது நடுவில் கடவுள் தமது இராட்சியத்தை ஸ்தாபிக்கத்தாமே பெலனற்றிருக்கிறாரோ? இல்லையே! காரணம் என்ன? நமக்குள் சுயநயம் அதிகமாயும், கடவுளுடைய இராட்சியத்திற்கென்று நமக்குள்ளதையெல்லாம் தத்தம் செய்வது வெகு குறைவாயும் இருக்கிறது. நாம் நம்மையோ, நமது சொத்தையோ, நமது பெலத்தையோ, சத்துவத்தையோ கடவுள் எதிர்பார்க்கிற விதமாய் அவருடைய மகிமைக்கென்று தத்தம் செய்கிறதில்லை.

ஒரு தரம் இயேசு நாதர் எருசலேம் தேவாலயத்தில் கண்ட ஏழை விதவையை நினைப்போமாக! கடவுளுடைய இராச்சியத்திற்குரிய இவ்வுலக சரித்திரத்தில் அவருடைய இராச்சியத்தின் பரம்

புதலுக்கென்று இந்த ஏழையைப்போல் உழைத்தவர்கள் வெகு சொற்பம் என்று எண்ணுகிறேன். அவளுடைய முன்மாதிரி எக்காலத்திலும் கோடிக்கணக்கான ஜனங்களை அவரது இராச்சிய பரம்புதலுக்கென்று தங்களை தத்தம் செய்யுமாறு ஏவக்கூடியதாயிருக்கிறதுமல்லாமல் இன்னும் அநேகருக்கு எழுப்புதலை உண்டாக்கக்கூடியதுமாயிருக்கிறது. இந்த விதவை அப்பொழுது செய்தது என்ன? அவள் 2 காசுகளை மாத்திரம் காணிக்கையாகப் போட்டாள். ஒருவேளை மற்றவர்கள் கொடுத்ததைப் பார்க்கிலும் இது அதிகச் சிறிய தொகையாயிருக்கலாம். என்றாலும் மற்றவர்களை விட கடவுளுடைய மகிமைக்கென்று அதிகமாய் தத்தம் செய்தாள். ஏனென்றால் கடவுளை நம்பித் தனக்குள்ளதையெல்லாம் தத்தம் செய்துவிட்டாள். எல்லாவற்றிலும் முக்கியமான காரியம் எவ்வளவு கொண்டுவருகிறோம், எவ்வளவு காணிக்கைப் போடுகிறோம் என்பதில்லை. நாம் நமக்குரிய தெல்லாவற்றையும் கொண்டுவருகிறோமா? அல்லது உள்ளதில் சிலதை வஞ்சித்துக் கொஞ்சம் கொண்டுவருகிறோமா என்பதுதான் கேள்வி.

*　　*　　*

இன்றைக்கு நமது நடுவில் அநேக ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் வந்திருக்கிறார்கள். அவர்கள் புது பள்ளிக்கூடவருஷத்தில் பிரவேசிக்க இப்பட்டணத்தில் வந்திருக்கிறார்கள்.

என் பிரிய வாலிபரே பெண்களே! நீங்கள் மதுரைக்கு வந்த காரணம் என்ன? நமது பள்ளிக்கூடங்களிலும் போர்டிங்களிலும் நீங்கள் சேர்ந்த நோக்கம் என்ன? இவ்விடம் வந்ததினால் நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள்? பரீக்ஷையில் நல்லமார்க்குகள் எடுத்து மேல்வகுப்புக்குப்போய், இப்படி பிறகு நல்ல உத்தியோகம் சம்பாதித்து அதிகச் சம்பளம் பெறவேண்டும் என்ற நோக்கமாய் வந்திருக்கிறீர்களா? அல்லது அறிவைப் பெறவும் சரீரப்பிரகாரமாயும் ஆத்துமபிரகாரமாயும் தேர்ச்சியடைந்து அதின் மூலமாய்க் கடவுளுடைய மகிமைக்கென்று உழைக்கும் பெலத்தை அடையவும், கடவுளுடைய இராச்சியம் ஸ்தாபிக்கப்படும் விஷயத்தில் உழைக்கவும் கூடும் என்ற நோக்கமாய் இங்கே வந்திருக்கிறீர்களா? உங்கள் சொந்த நன்மைக்கென்றே உழைக்கும்படியாய் பாடசாலையில் சேர்ந்து படிக்கிறவர்களா



யிருந்தால் உங்கள் வேலையும் அதற்காகச் செலவு செய்யப்படும் பணமும் எல்லாம் வீணும் விருதாவும் தான். கடவுளுடைய இராச்சியத்தில் உழைக்கும் பெலனையும் சத்துவத்தையும் பெறவேண்டுமென்ற நோக்கமாய் வந்திருந்தால் நீங்கள் சித்தி பெறுதலுமல்லாமல் நீங்கள் நினைத்ததுக்கு மேலாகவும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

“எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே!” இதுவே நம்மெல்லாருக்கும் நாம் எந்த வேலையைச் செய்தாலும், நமது எச்சரிப்பின் வாக்கியமாயிருக்கட்டும். நீங்கள் பள்ளிக்கூடத்தில் செய்யும் வேலையில் இவ்வருஷத்திலும் வரப்போகிற வருஷங்களிலும் இதுவே உங்கள் எச்சரிப்பின் வாக்கியமாயிருக்கட்டும்.

*　　*　　*

நமது முழு ஜீவியமும் கடவுளுடைய மகிமையைப் போற்றும் ஒரு பாடலாய் இருக்கட்டும். இந்த பாடல் இரண்டு பங்காகப் பாடப்படவேண்டும். ஒன்று “கடவுளுக்கே மகிமை,” மற்றது “எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே”.

இந்தப்பாட்டு கடவுளுடைய மகிமைக்கென்று இரண்டு பாகத்திலும் பாடப்படுவது வெகு அபூர்வம். அநேகமாய் ஏதோ ஒரு பாகத்தில் தான் பாடப்படுகிறது. லுத்தரன் சபைகளைப் பார்த்தால், “கடவுளுக்கே மகிமை” என்ற பாகம் அவர்களால் கொஞ்சமாய்த்தான் அறியப்பட்டிருக்கிறது. கடவுளுடைய கிருபையினால் மாத்திரம் இரட்சிப்பு என்கிற சுவிசேஷத்தை நாம் நமது லுத்தரன் சபைகளில் வற்புறுத்துகிறோம். ஆகையால் “கடவுளுக்கே மகிமை” என்ற முதலாம் பாகத்தைப்பற்றிய பாட்டை நாம் கொஞ்சம் அறிந்திருக்கிறோம் என்பது இயற்கை. ஆனால் “எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே” என்ற 2-ம் பாகத்தை லுத்தரன் சபைகள் அநேகமாய் வெகு சொற்பமாய் அறிந்திருக்கிறது.

ரிபோர்மித்தர் சபைகளைப்பற்றிய ஜீவிய சரித்திரத்தை நாம் பார்த்துப் படித்தோமானால் “கடவுளுக்கே மகிமை” என்ற பாகத்தில் அடிக்கடி தவறுகிறோம். ஆனால் கடவுளுக்கு மகிமை என்ற பாடலில் 2-ம் பாகமாகிய “எல்லாம் கடவுளுடைய மகிமைக்கே” என்ற பாகத்தைக் குறித்து லுத்தரன் சபைகளைப்பார்க்கிலும் ரிபோர்மித்தர் சபைகள் அதிகமாய் அறிந்திருக்கிறார்கள் என்பதை நிச்சயமாய் அறி

வோம். அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதையும் தங்கள் நம்பிக்கைக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதையும் கடவுளுடைய மகிமைக்கென்றே தத்தஞ்செய்ய வேண்டுமென்று நம்மைப்பார்க்கிலும் அதிகம் அறிவார்கள். "கடவுளுக்கே மகிமை" என்றதைப் பற்றியோ, லுத்தரன் சபைகள் மற்ற சபைகளுக்கு அதிகமாய் நிச்சயமாகவே சொல்லக்கூடும். ஆனால், அதேசமயத்தில் கடவுளுக்கு மகிமையாக எல்லாவற்றையும் தத்தஞ் செய்வதைப்பற்றி மற்ற சபைகளிலிருந்து நாளுக்கு நாள் அதிகமதிகமாய் நாம் படிக்கவேண்டும்.

இவ்விதமாய் நாம் அவர்களிடத்திலும் அவர்கள் நம்மிடத்திலும் படித்துக்கொண்டால்தான், கடவுளுக்கு மகிமை என்ற பாட்டு நமது கிறிஸ்தவ சபைகளில் பாடப்பட்டு ஒருவிதமாய் உலகமுழுவதும் எதிர்பாராத விதமாய்க் கேட்கப்படக்கூடும். இப்பாடல் நம்மெல்லாராலும் தினசரி ஜீவியத்திலும் வேலையிலும் நிறைவாகாரமாய்ப் பாடப்பட்டால், கடவுளுடைய மகிமை பூமியில் வெளிப்படுவதுமல்லாமல் முழு மனுஷ ஜாதியும் இரக்ஷிக்கப்படும். இதைக் கடவுள் நமக்குக் கிருபையாய்க் கட்டளையிடுவாராக! ஆமேன்.

---

## எதினால்
## ஒருவன் கிறிஸ்துவின் ஊழியனானது?

(திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின 5-ம் ஞாயிறு)

---

வேத வாக்கியம் : அப்போஸ்தலர் 9:1-20.

சவுல் ஆண்டவரின் சீஷரைப்பயமுறுத்துவதும் கொலை செய்வதுமாய்ச் சீறிக்கொண்டேயிருந்தான். அவன் பிரதான ஆசாரியரிடம் போய்

இந்த மார்க்கத்தாரில் யாரையாவது தான் கண்டுபிடித்தால், அவர்கள் புருஷரானாலும் ஸ்திரீகளானாலும், அவர்களைக்கட்டி எருசலேமுக்குக்கொண்டு வரும்படி தமஸ்குவிலிருந்த ஜெபாலயங்களுக்குக் கடிதங்களைக் கேட்டு வாங்கினான்.

பிரயாணத்தில் அவன் தமஸ்குவைச் சமீபித்தபோது சடுதியில் வானத்திலிருந்து ஓர் ஒளி அவனைச்சுற்றி மின்னல்போல் பிரகாசித்தது;



அவன் தரையிலே விழுந்தான். விழவே, சவுலே, சவுலே நீ என்னை ஏன் இம்சை செய்கிறாய் என்று தன்னிடஞ் சொல்லுகிற ஒரு சத்தங்கேட்டான்.

அது கேட்டு அவன்: ஆண்டவரே, நீர் யார் என்றுசொல்ல, நீ இம்சைசெய்கிற இயேசு நானே;

நீ எழுந்திரு, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியதின்னதென்று அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.

அவனோடு பிரயாணஞ்செய்த மனுஷர் சத்தத்தைக்கேட்டும் ஒருவரையும் காணாமல் பேச்சற்று நின்று விட்டார்கள்.

சவுல் தரையிலிருந்தெழுந்தான்; தன் கண்களைத் திறந்தபோது ஒன்றுந் தெரியவில்லை அப்பொழுது கைலாகுகொடுத்து அவனை தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள்.

அவன் மூன்று நாளளவும் பார்வையற்று அன்னபானம் ஒன்றும் இல்லாதிருந்தான்.

தமஸ்குவில் அனனியா என்னும் ஒரு சீஷனிருந்தான். அவனுக்கு ஆண்டவர் தரிசனமாகி: அனனியாவே என்று கூப்பிட அவன்: ஆண்டவரே, இதோ அடியேன் என்றான்.

அப்பொழுது ஆண்டவர்: நீ எழுந்து நேர்தெரு என்னும் தெருவுக்குப்போய் யூதாவின் வீட்டில் சவுல் என்னும் தர்சுபட்டணத்தான் ஒருவனைத்தேடு; இதோ, அவன் ஜெபஞ்செய்து கொண்டிருக்கிறான்;

அனனியா என்னும் ஒருவன் தன்னிடம் வந்து தான் பார்வை பெறும்படி தன்மேல் கை வைத்ததாகக் கண்டிருக்கிறான் என்றார்.

அனனியாவோ: ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமில் உமது பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

இங்கேயும் உமது நாமத்தைத் தொழுது கொள்ளுகிற யாவரையுங் கட்டுவதற்கு அவன் பிரதான ஆசாரியரிடமிருந்து அதிகாரம் பெற்றுவந்திருக்கிறானே என்றான்.

அதற்கு ஆண்டவர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல்புத்திரருக்கும் என்து நாமத்தைச் சுமந்துகொண்டுபோவதற்கு நான் தெரிந்தெடுத்த பாத்திரம்.

அவன் என் நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்.

அனனியா போய் அந்த வீட்டிற்குட்சென்று அவன்மேல் தன் கைகளை வைத்து: சகோதரனே, சவுலே, ஆண்டவர் என்னை அனுப்பினார்; நீ வந்த வழியில் உனக்குத் தரிசனமான இயேசுவே அவர்; நீ பார்வை பெறும்படிக்கும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்படிக்கும் என்னை யனுப்பினார் என்றான்.

உடனே அவன் கண்களிலிருந்து செதில்கள்போன்றவை விழுந்தன. அவன் பார்வையடைந்தான்; எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான். அதன் பின் போஜனம்பண்ணிப் பலமடைந்தான்.

சவுல் தமஸ்குவிலுள்ள சீஷரோடு சிலநாள் தங்கியிருந்து இயேசுவைக் கடவுளின் குமாரனென்று அவரைத் தாமதமின்றி ஜெபாலயங்களில் பிரசங்கித்து வந்தான்.

---

கிறிஸ்தவ திருச்சபைச் சரித்திரத்திலே நடந்தேறின ஒரு ஆச்சரியமான காரியத்தைக்குறித்து இன்றைக்கு நமது வாக்கியம் சொல்லுகிறது. ஒரு நாள் எருசலேமுக்கும் தமஸ்குவுக்கும் இடையிலுள்ள பாதையில் நடந்த விசேஷித்த சம்பவமானது இந்நாள் வரையில் கிறிஸ்தவத் திருச்சபையில் நடந்தேறின விஷயங்கள் எல்லாவற்றையும்விட அதிக அதிசயமான காரியங்களை உண்டுபண்ணியிருக்கிறது. பவுல் அப்போஸ்தலனைப்போல் வேறெவனும் கிறிஸ்தவத் திருச்சபையில் அவ்வளவு விசேஷித்தவனாகத் தோன்றினதுமில்லை. இப்போது தோன்றுகிறதுமில்லை.

இக்காலத்திலுள்ள கிறிஸ்தவ தூதுவரையும் மிஷனரிகளையும் பார்க்கிலும் அதிகப் பெரியவனாகவுமிருந்தான். இயேசுகிறிஸ்துவில் மறைந்து கிடக்கும் ஐசுவரியத்தின் ஆழத்தை பவுல் அப்போஸ்தலனைப்போல் கிரகித்து அறிந்துகொண்டு, அதைமற்றவர்களுக்கு வெளிப்படுத்தினவர்கள் வெகு சொற்பம். மனுஷ ஜாதிக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட ஈவுகளில் கிறிஸ்துவுக்கு அடுத்தாபோல் பெரிய ஈவாக பவுல் அப்போஸ்தலனை நாம் மதிக்க வேண்டும்.

நாம் நமது இரக்ஷகரண்டை அதிகமதிகமாய் நெருங்கி, அவரை அதிகமதிகமாய் அறிந்து, அதிகமதிகமாய் அவர் பேரில் நம்பிக்கை வைக்கும்படியாக நமக்கு ஒத்தாசை செய்யும் கடவுளுடைய ஈவாக இவன் இருக்கிறதுமல்லாமல் நமக்கு மற்ற எவரையும் விட நல்ல முன்



மாதிரியாகவும், இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே இரக்ஷிப்பின் சுவிசேஷகராக உழைத்து ஜீவிக்கும் கடமையை நம்மெல்லாருக்கும் நினைப்பூட்டுகிறவனாகவும் இருக்கிறான்.

அப்படி பவுல் அப்: கிறிஸ்துவின் ஆச்சரியமான சீஷனாகித் தனது எஜமானுடைய ஊழியத்தில் அவ்வளவு ஆச்சரியமான வேலை செய்யக் கூடியவனானது எதினாலே?

இன்றைக்கு நாமெல்லாரும் சற்றுத்தியானிக்கும்படியாக நான் போடுகிற கேள்வி இதுதான். இக்கேள்விக்குப் பதில் சொல்லவும் பிரயாசப்படுவேன்.

பெரியவர்களும், சிறியவர்களும், ஸ்திரீகளும், புருஷருமாகிய நாமெல்லாரும் கிறிஸ்துவின் ஊழியராகவும் கிறிஸ்துவைப்பற்றி மற்றவர்களுக்குப் பிரசங்கித்து அவரது இராச்சியத்தை அதிகமதிகமாய் ஸ்தாபிக்கிறவர்களாகவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் இக்கேள்வியைக் குறித்து பவுல் அப்: கிறிஸ்துவின் இவ்வளவு ஆச்சரியமான ஊழியனும் பெரிய மிஷனரியுமானது எதினாலே என்று சற்றுத் தியானிக்கத்தக்கதாயிருக்கலாம்.

இது சம்பந்தமாக நான் விசேஷித்து நினைக்கிற மூன்று முக்கியமான காரியங்களைக்குறித்து இன்றைக்குச் சொல்லப்போகிறேன். ஒருவேளை நான் உடனே, முதல் காரியம் அதிக முக்கியமானதென்றும், இரண்டாவது காரியம் முதல்காரியத்தைப் பார்க்கிலும் அதிக முக்கியமானதென்றும், மூன்றாவது காரியம் முந்தின இரண்டு காரியங்களைப் பார்க்கிலும் இன்னும் மகா முக்கியமானதென்றும் சொல்லலாம். பவுல் அப்போஸ்தலனின் ஜீவியத்திலும் ஊழியத்திலும் நடந்தேறினது எதுவோ அது மூன்றாவது முக்கிய காரியத்தில் அடங்கியதைத் தவிர்த்து நடந்திராததை மறக்கவேண்டாம்.

* * *

1. பவுல் அப்போஸ்தலனுடைய ஜீவியத்தில் நான் எடுத்துக் காட்டவிரும்புகிற முதலாவது முக்கிய காரியம்: அவனது பயிற்சியும் கல்வியும் தான்.

புதிய ஏற்பாட்டின் புஸ்தகத்திலே பவுல் அப்போஸ்தலனைக் குறித்து அதிகம் சொல்லப்படவில்லை. அவரது இளம்பிராயத்தைக்

குறித்து நமக்கு என்னென்னதெரியுமோ அதெல்லாம் அவரே தனது நிருபங்களிலும், இன்னும் நியாயாதிபதிகள் முன்னே கொண்டுவரப் பட்டபோதும் தானே வெளிப்படுத்தினவைகள்தான்.

சின்ன ஆசியாவில், அக்காலத்தில் விசேஷித்த பட்டணமாகிய தர்சுவில் இவன் பிறந்தவன் என்பது நமக்குத்தெரியும். நமது நாட்டார் பிழைப்புக்காக அக்கரை தேசத்திற்குப்போவதுபோல அந்த பட்டணத்தில் அநேக யூதர் தங்கள் பிழைப்புக்காகவும் வியாபார விஷயமாகவும் குடியேறி இருந்தார்கள். பவுல் அப்போஸ்தலனின் தகப்பன் ஒரு பரிசேயன் என்பதும், அதற்கேற்றபடி அக்காலத்தில் பக்தி வைராக்கியமுடையவனாகவு மிருந்தான் என்பதும் நமக்குத் தெரியும். மேலும் தன்பிள்ளையைப் பரிசேயனுடைய பிள்ளை என்று சொல்லத்தக்கதாகப் பழைய யூத வழக்கத்துக் கேற்றபடி வளர்க்கவும் படிப்பிக்கவும் விரும்பினான். கடவுளுடைய ஜனமாகிய இஸ்ரவேலருடைய சரித்திரத்தையும் யூதருடைய சத்திய வேதத்தையும் வாசிக்கவும் தானே தன் பிள்ளைக்குக் கற்பித்திருப்பான்.

தன் சொந்த வீட்டில் தர்சுபட்டணத்திலேயே இருந்துகொண்டு கல்வி கற்பது குறைவு. ஆகையால் கல்வியில் தேர்ச்சியுள்ளவனாகும்படி பவுல் எருசலேமுக்கு அனுப்பப்பட்டான். ஏனெனில் அப்பெரிய தேவாலய குருக்களாலும் போதகராலும் கல்வி கற்கும் சமயம் அங்கே கிடைத்தது. அங்கே கமாலியேல் என்ற பேர்போன ஆசிரியன் இருந்ததாக நமக்குத் தெரியும். அவனது பாதத்தின்கீழ் பவுல் கல்வி கற்றுக்கொண்டான். அவன் கல்வியில் அதிகம் தேரவேண்டுமென்னும் ஆவல் அவனுக்கு இருந்ததாகவும் மற்றவர்களைப் பார்க்கிலும் துரிதமாய்ப் படித்துத் தேறும் சாமர்த்தியமும் வரமும் அவனுக்கு இருந்ததாகவும் நாம் அறிகிறோம்.

பத்தொன்பது நூறு வருஷங்களுக்கு முன்னே யூத ஜனங்களுக்கு இருந்த கல்வி ஒழுங்கைவிட இக்காலத்தில் நமக்கு எவ்வளவோ மேன்மையான ஒழுங்குகள் இருக்கின்றன. என்றபோதிலும் நான் ஒரு காரியத்தைக் குறித்து நினைக்கிறதென்ன: இக்காலத்து அநேக ஜனங்களைப் பார்க்கிலும் பவுல் தனக்குக் கற்பிக்கப்பட்டவைகளைக் குறித்து அறிய மிகுந்த ஆவலுள்ளவனாயிருந்தான் என்பதே. பவுலும் அவனது பெற்றோரும் படிப்பு விஷயத்தில் எவ்வளவு ஆவலுள்ள



ர்களாயிருந்தார்களோ அவ்வளவு ஆவலுள்ளவர்களாய் ஒருவேளை இக்காலத்தில் நாமெல்லாரும் இருக்கலாம். ஆனால் நமது பள்ளிக்கூட மாணவரும், அவர்களுடைய பெற்றோரும், உபாத்திமாரும் அதிகமதிகமாய் அறிவை சம்பாதித்து அதைச் சொந்தமாக்கிக் கொள்ள விரும்புவதைப் பார்க்கிலும் பரீக்ஷைகளில் தேறுவதிலேயே மாத்திரம் ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்களோ என்று பயப்படுகிறேன்.

பவுல் தனது சொந்த ஜனங்களுடைய சரித்திரங்களையும், கடவுளுடைய கற்பனைகளையும் சட்டங்களையும் படித்தது மாத்திரமல்ல, கிரேக்க கலை ஞானத்தையும் கிரேக்க மதத்தையும் குறித்துக்கூட வாசித்திருக்கிறானென்று அவனது நூல்களினால் அறிகிறோம். அவனது நிருபங்களிலுள்ள சில உதாரணங்களைக்கொண்டு அவன் இந்த கலை ஞானங்களை அறிந்தவன் என்று அறிகிறோம்.

சில பூர்வ யூதருடைய மார்க்க சம்பந்தமான புஸ்தகங்களில் தகப்பனுடைய கடமைகளைப்பற்றி: சுன்னத்து செய்வது, நியாயப் பிரமாணத்தைக் கற்பிப்பது, வியாபாரத்தைக் கற்பிப்பது, என மூன்று விதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றொரு பூர்வ யூத போதகன் சொல்வதாவது: "வியாபாரத்தைத் தன்மகனுக்குக் கற்பித்து வையாதவனும் திருட்டுத் தொழிலைக் கற்பித்துவைக்கிறவனும் ஒன்றே." பவுல் அப்போஸ்தலனின் உபாத்தியாயராகிய கமாலியேல் என்பவன் "வர்த்தகத் தொழிலையுடையவன் நன்றாய் வேலியடைக்கப்பட்ட திராக்ஷத்தோட்டத்துக்குச் சமானம்" என்று சொல்லுகிறான். இதை நினைத்து பவுலினுடைய தகப்பனும் பவுலுக்குக் கல்வியை மாத்திரமல்ல, அத்தோடுகூட வியாபாரத்தையும் கற்பித்தான். கைத்தொழிலாகிய கல்வியையும் கற்பித்தான். பவுலுக்குக் கூடார வேலையும் நூல் நூற்கும் வேலையும் நெசவுத்தொழிலும் இன்னும் இதுசம்பந்தமான வேலைகளும் தெரிந்ததினால் கடவுளுடைய வேலையில் மற்றவர்களுடைய உதவியை எதிர்பாராமல் தன்னைத்தானே ஆதரித்துக்கொள்ளும் திறமையும் அவனுக்கு இருந்ததை நாம் அறிவோம்.—கொரிந்து சபைக்கு எழுதின அவனது முதல் நிருபத்தில் தன்னைக்குறித்து "நான் என் கைகளால் வேலை செய்து உழைக்கிறவன்" என்று எழுதியிருக்கிறான்.

பவுலினுடைய கல்வியையும் தொழிலையும் குறித்து இன்னு
மொரு காரியத்தையும் சொல்லலாம். அவனது முந்தின ஜீவியத்தி
லும் பிந்தின ஜீவியத்திலும் அவனைப்பற்றிச் சொல்லப்பட்டவை
களைக்கொண்டு அவனிடத்தில் ஒரு பலமான நல்ல பழக்கம் இருந்த
தாக அறிகிறோம். அவனது இளம்பிராயத்திலிருந்தே, தான் தொட்ட
காரியத்தில் ஒழுங்கையும் கண்டிப்பையும் கைப்பற்றி வந்தான். அவ
னுக்குச் சரீரபெலயீனமிருந்தாலும் தன்னைக்குறித்து “ அவர்களெல்லா
வரிலும் நான் அதிகமாய் வருந்தியுழைத்தேன் ” என்று 1. Cor.
15:10ல் சொல்லக் கூடியவனாயிருந்தான். நமது வீடுகளிலும், பள்
ளித்துறைகளிலும் முழு ஜீவியத்திலும் காணப்படுகிற ஒழுங்குகளும்
முறைகளும் குறைவுள்ளவைகளா யிருக்கிறதினால்தான் நம்மால் காரி
யங்கள் வெகுசொற்பமாய் நடந்தேறுகிறதுமல்லாமல் நம்மால் எதிர்
பார்க்கப்படுவதும் சொற்பமாயிருக்கிறது.

நாம் பவுலைக் கவனித்துப்பார்த்து அவன் கடவுளுடைய ஆச்சரிய
மான ஊழியனானது எப்படி என்ற கேள்விக்குப் பதில்சொல்லப்
போனால் அக்கேள்விக்குப்பதில் அவனது படிப்பு, அதின் தேர்ச்சி
முறை இவைகளைக் கவனிக்கையில்தான் நன்றாய்ப் புலப்படும்.

* * *

2. இந்தக் கேள்விக்கு இன்றைக்கு இரண்டாவதாகச் சொல்
லும் அதிக முக்கியமான பதில் : அவனது வைராக்கியமும் ஊக்கமும்
தான்.

இன்றைய வாக்கியத்தில் ஆண்டவரின் சீஷரைப் பயமுறுத்து
வதும் கொலை செய்வதுமாய்ச் சீறிக்கொண்டேயிருந்தான் என்று
வாசிக்கிறோம். இது பயங்கரமல்லவா ? ஆம், பயங்கரமானகாரியம்
தான். எப்படியிருந்தாலும் பவுலினுடைய குணத்தில் இது ஒரு
விசேஷித்த அடையாளம்தான். அவன் அப்போது ஒரு யூதன். யூத
முறைமையான கல்வியும் தேர்ச்சியுமடைந்தவன். தன்னை உண்டாக்
கின கடவுளிடத்திலும் மதவிஷயமாய்த் தான் உண்மையிருக்க
விரும்பினான். மேலும் அக்காலத்தில் தான் அறிந்தமட்டிலும் கட
வுளுக்கென்று தன்னை முழுமனதினாலும் தத்தம் செய்தான். அவன்
தனக்காகவும் தன்னயத்துக்கென்றும் கவலைப்படாமல் தனக்குத்
தெரிந்தமட்டில் கடவுளுக்காகவே கவலைப்பட்டான்.



இவன் மேலான அறிவுடையவனாயும் கடவுளுக்கு எதையாகி
லும் செய்வதில் ஆவலுள்ளவனாயும் மாத்திரமிராமல் விரும்பினதைச்
செய்தான். நமது வாக்கியத்தில் அவனைக்குறித்து அவன் பிரதான
ஆசாரியரிடம் போய் இயேசு கிறிஸ்துவின் சீஷரில் எவரையும் வழி
யில் கண்டால் அவர்களைக் கட்டி எருசலேமுக்குக்கொண்டு வரும்படி
தமஸ்குவிலிருந்த ஜெப ஆலயங்களுக்குக் கடிதங்களைக் கேட்டுவாங்
கினதாகச் சொல்லியிருக்கிறது. கடவுளுக்காக அவன் வைராக்கியத்
தாலும் ஊக்கத்தாலும் நிறைந்திருந்தான். கடவுக்குத் தான் ஏதோ
செய்கிறதாக நினைத்துத் தன் காரியங்களை ஒழுங்குபடுத்தினான்.
தன்னை வெறுத்தவனாகத்திரிந்தான். தான் அறிந்த மட்டில் கடவு
ளுடைய இராச்சியத்தைத் தான் பரவச்செய்கிறவனாக நினைத்தே கடு
மையும் நீண்டதுமான பிரயாணத்தைச்செய்ய ஆரம்பித்தான். அவன்
கலாத்தியருக்கு எழுதின முதல் நிருபத்தில் கடவுளுடைய திருச்
சபையை அளவுக்கு மிஞ்சி துன்பப்படுத்தி அதைக் கெடுத்தும் போட்
டதாகச் சொல்லுகையில் தன்னைத் தனது வைராக்கியத்துக்கும் ஊக்
கத்துக்கும் அடையாளமாகக் காட்டுகிறான். அவன் அகரிப்பா இராஜா
வுக்குமுன் நின்றபோது பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறையில்
வைத்ததாகவும் அவர்களுடைய மரணத்துக்கு அவனே காரணமாயிரு
ந்ததாகவும் சொன்னான். அவர்கள் பேரில் மூர்க்க வெறிகொண்டவ
னாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களை இம்சைப் படுத்தி
வந்தேன் என்றும் சொன்னான்.—

எப்படியிருந்தாலும் இவனே இப்பேர்பட்ட வைராக்கியமும்
ஊக்கமும் உடையவனும் கடவுளுடைய இராச்சியத்திற்கென்று
தனக்குத் தெரிந்தமட்டில் தன்னையே தத்தம் செய்யக்கூடியவனுமாயி
ருந்தான். கடவுள் தமது இராச்சியத்தில் ஊழியம் செய்யும்படி இப்
பேர்பட்டவர்களைத்தான் பிரயோகிக்கக்கூடும்.

வைராக்கியமும் ஊக்கமும் இல்லாத எவனும் அநேகமாய் ஒன்
றுக்கும் உதவாதவனே. இப்படிப்பட்டவனைக் கடவுள் தமது இராச்
சியத்திற்கென்று தெரிந்துகொள்ளுகிறதில்லை. அவர்களால் ஒன்றும்
முடியாது. எதையாகிலும் தப்பிதமான வழியில் செய்வதும் அறிவின்
[illegible]ால் செய்வதும் கேவலமே. ஆனால் இதைப்பார்க்கிலும் ஒன்

றும் செய்யாதிருப்பதும், வைராக்கியமும் ஊக்கமும் இல்லாதிருப்பதும் அல்லது சோம்பலாயிருந்து கவலையற்றிருப்பதும் மகா கேவலமே. நமது திருச்சபையும் அதின் ஜீவியமும் இக்காலத்தில் குறைவாகக் காணப்படுவது, அது சரியான வழியில் அநேகக் காரியங்களைச் செய்யாதிருப்பதில் அல்ல, வைராக்கியமும் ஊக்கமும் இல்லாமையினாலும் தங்களையும் தங்கள் விருப்பத்தையும் கடவுளுக்குத் தத்தஞ்செய்ய விருப்பமில்லாமையினாலும் ஒன்றும் செய்யாதிருப்பதினாலேயே தான்.

ஒரு மனிதனுக்கு வைராக்கியமும் ஊக்கமும் கடவுளுடைய இராச்சியத்திற்குகென்று எதையாகிலும் செய்யவேண்டுமென்றவிருப்பமும் இருப்பது சுலபமான காரியமல்ல என்பது உண்மை. பவுலுக்கு அவை இருந்தது. ஆனால் பாடுபட வேண்டியவனாயிருந்தான். கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தின் இரண்டாம் அதிகாரத்தில் தனது வைராக்கியத்தினிமித்தமும் ஊக்கத்தினிமித்தமும் தனக்கு ஏற்பட்ட பாடுகளைப்பற்றியும் கஷ்டங்களைப்பற்றியும் சொல்லுகிறான். அவன் தனது எதிரிகளால் மாத்திரமல்ல, தனது சிநேகிதராலும் பகைக்கப்பட்டுத் துன்பப்படுத்தப்பட்டான். அவர்களை அவர்களது சோம்பலிலிருந்தும் சுகத்திலிருந்தும் தங்களைத் தத்தம்செய்ய மனமில்லாதிருக்கும் தன்மையிலிருந்தும் அநேகந்தரம் தொந்தரவு செய்தான். ஆனால் பவுல் அதற்காக விசனப்பட்டதில்லை. தன்னுடைய சுகம், இன்பம் இவைகளைப் பார்க்கிலும் கடவுளும் அவரது இராச்சியமுமே அவனுக்குப் பெரிதாயிருந்தது.

ஆண்டவரே! எங்கள் கிறிஸ்தவ சபைகளிலும் அவைகளிலுள்ள பெரியவர்களிடத்திலும் சிறியவர்களிடத்திலும் அதிக வைராக்கியத்தையும் ஊக்கத்தையும் உண்டு பண்ணியருளும். அப்படித்தான் கடவுள் நம்மை தமது இராச்சியத்தின் ஊழியராக்கிக் கொள்ளக்கூடும்.

* * *

3. இன்றைக்கு எல்லாவற்றையும்விட பவுல் அப்போஸ்தலனுடைய ஜீவியத்தில் விசேஷித்துச் சொல்ல விரும்புகிற மூன்றாவது முக்கிய காரியம் அவன் கண்ட காட்சியே. அது அவனுடைய ஆண்டவரும் இரக்ஷகருமாகிய இயேசுகிறிஸ்துவின் உண்மையான காட்சியே.



அவன் எருசலேமிலிருந்து தமஸ்குவுக்குப் போகிறவழியில் அக்காட்சியைக் கண்டான். அவனது ஊக்கமும், வைராக்கியமுமே அவனை அவ்விடம் நடத்திற்று. நமது வாக்கியத்தில் சொல்லப்பட்டபிரகாரம் தனது தோழரோடு இயேசு கிறிஸ்துவின் சத்தத்தைக்கேட்டது மாத்திரமல்ல, பிரத்தியட்சமாய் அவரைக் கண்டான். வேறு யாரும் அவரைப் பார்த்ததில்லை. மற்ற எவரைக்கொண்டும் அறியுமுன்னே தானே நேரிலேயே அவரை அறிந்துகொண்டான். அப்படி கலாத்தியருக்கு எழுதின நிருபத்தின் முதல் அதிகாரத்தில் சொல்லுகிறான். ஆச்சரியமான விதமாய் இயேசு கிறிஸ்து தம்மை வெளிப்படுத்தினார். அவனுடைய ஜீவிய மாறுதலுக்கு இதுவே காரணம்.

பவுல் இயேசு கிறிஸ்துவிலே உயிருள்ள ஆண்டவரும் இரக்ஷகருமானவரைப் பிரத்தியட்சமாய்க் கண்டான். இயேசு கிறிஸ்துவை தரிசித்த இந்த அனுபவமே அவனுக்கு தனது ஊழியத்திற்கு வேண்டிய பெலத்தையும் தைரியத்தையும் கொடுத்தது. கொரிந்து சபை அவனது அழைப்பைக் குறித்துச் சந்தேகம்கொண்டது. அவனை இயேசுவின் உண்மையான பணிமுட்டாகச் சிலர் ஒப்புக்கொண்டதில்லை. "நான் என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தரிசித்ததில்லையா" என்ற வார்த்தைகளைக்கொண்டு தனது எதிரிகளை தைரியமாய்ச் சந்திக்கிறான். கொரிந்தியருக்கு எழுதின இதே நிருபத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்துத் திடநம்பிக்கையோடு ரூபிக்கையில் தானே உயிர்த்தெழுந்த இரக்ஷகரைக் கண்டதாகவும் சொல்லுகிறான். அங்கே அவனுடைய இருதயத்தில் யாதொரு சந்தேகத்துக்கும் அவநம்பிக்கைக்கும் இடமிருந்திராது.

நமது வாக்கியத்தில் சொல்லப்பட்டபடி பவுல் இயேசுக் கிறிஸ்துவைத் தரிசித்தபொழுது என்ன சம்பவித்தது என்பதைக் குறித்து நாமும் சற்றுச் சிந்திப்போமாக. இச்சந்தர்ப்பத்தில் நாம் விசேஷித்து கவனிக்கவேண்டிய இரண்டு முக்கியமான சம்பவங்கள் உண்டு.

முதலாவது: பவுல் அப்: இயேசுவைச் சூரியபிரகாசத்துக்கும் மேலான ஒளியிலே சந்தித்தபோது தன்னைச் சந்தித்தவர் யார் என்று அறிந்துகொண்ட பின்பு அவனது முதல் கேள்வி என்னவென்றால்: ஆண்டவரே நான் செய்யவேண்டியது என்ன? நான் எதைச்செய்ய

வேண்டுமென்று நீர் விரும்புகிறீர்? என்பதே. அவனது சொந்த சித்தத்துக்கு ஒன்றும் விடப்பட்டதில்லை. அவன் தன்னை முழுவதும் ஆண்டவருடைய சித்தப்படி ஒப்புக்கொடுத்துக் கர்த்தரும் ஆண்டவருமாகிய அவருடைய சித்தத்தையல்லாமல் வேறொன்றையும் செய்யவிரும்புகிறதில்லை என்ற விருப்பத்தையும் வெளிப்படுத்தினான்.

இரண்டாவது: பவுலின் இந்தக்காட்சி அவனை புதிய ஜெப ஜீவியத்துக்கு நடத்திற்று. தமஸ்குவிலுள்ள இயேசுவின் சீஷரில் ஒருவனாகிய அனனியாவுக்கு ஆண்டவர் பவுலைப்பற்றி அவன் பவுலினிடம் போய் உதவி செய்யும்படி சொன்னபோது ஆண்டவர் தாமே பவுலைப்பற்றி "அவன் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கிறான்" என்று சொன்னார். பவுல் தன்னைக் கிறிஸ்துவுக்குத் தத்தம் செய்ததானது முந்தின நாட்களில் சாப்பிடாமலும் குடியாமலும் தன் முழு இருதயத்தையும் ஜெபத்தின்மூலமாய் ஆண்டவருக்கு முன் ஊற்றி அமைதலாய் இருந்ததினாலே பூரணமடைகிறது. பவுல் பின்னால் சாப்பிடுவதும் தாகம் தீர்த்துக்கொள்வதுமான சாதாரண ஜீவியத்துக்குட்பட்டபோதிலும் அவனுடைய ஜீவியத்தில் நூதனமான காரியம் ஒன்று புகுந்தது. அது கடவுளோடு முந்தின காலத்தைப்பார்க்கிலும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அதிகமதிகமாய் நெருங்கின ஜீவியமே. அநேக காரியங்களின் மேலுள்ள தனது பிரீதியையும் விருப்பத்தையும் கடவுளுடைய சமுகத்தில் கொண்டுவருவது மாத்திரம் உண்மையான ஜெபமல்ல. ஆனால், நாம் என்ன செய்தாலும், கடவுளுடைய சமுகத்தில் இயேசு கிறிஸ்துவுக்குள் எப்போதும் ஜீவிப்பதே உண்மையான ஜெபமாயிருக்கிறது.

தனக்குக் கற்பிக்கப்பட்டவைகளைக் கவனமாய் ஏற்றுக்கொண்டவனும், வைராக்கியத்தாலும், ஊக்கத்தாலும் நிறைந்தவனும், இதற்கு மேலாக இயேசுக் கிறிஸ்துவின் காட்சியைக்கண்டு அவருடைய சித்தத்துக்குத் தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்தவனும், இயேசு கிறிஸ்துவோடு தினந்தோறும் நெருங்கி ஜீவிக்கிறவனுமான மனுஷனே புறமதஸ்தருக்கு முன்பாகவும், இராஜாக்களுக்கு முன்பாகவும் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகவும் இயேசுவின் நாமத்தைச் சுமந்துபோகும் உண்மையான பணிமுட்டாவான். இப்படி நமது வாக்கியத்தில் பவுலைக்



குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நமது வாக்கியத்தில் சொல்லியவாறு இப்பேர்ப்பட்ட மனிதனே பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதோடுகூட இயேசு கிறிஸ்துவை உலக இரக்ஷகராகவும், கடவுளுடைய குமாரனாகவும் பகிரங்கமாய்ப் பிரசங்கிப்பதையல்லாமல் வேறொன்றையும் செய்யமாட்டான். இப்படிப்பட்டவனின் சுவிசேஷத்தை எந்த விதமான மனிதராலும் எதிர்க்கமுடியாது. இப்படிப்பட்ட மனிதனே கடவுளுடைய இராச்சியத்திற்கான மகிமையான ஜெயத்தைச் சம்பாதிக்கக் கூடும்.

என் சிநேகிதனே! பவுல் அப்போஸ்தலனைப் போலொத்த மனிதரையும் ஸ்திரீகளையும் நமது நடுவில் எங்கே பார்க்ககூடும்? பூர்வ திருச்சபையில் இருந்த மாதிரியே இக்காலத்திலும் முழு உலகத்திலும் அப்பேர்ப்பட்ட ஊழியர் கடவுளுக்குத் தேவை. பவுல் அப்போஸ்தலனைப் போல் இருக்கும்படியாகக் கடவுளால் அழைக்கப்படாதவர் நம்மில் ஒருவனுமில்லை. இயேசு கிறிஸ்துவின் உண்மையான சுவிசேஷகனாகத் தன் விசேஷித்த வரத்தின்மூலமாய் இருக்கும்படியாகவும் அழைக்கப் படாதவனுமில்லை. பின்னே ஏன் அப்பேர்பட்ட வல்லமையுடையவனும், எவனும் எதிர்க்க முடியாதவனும் ஜெயங்கொள்ளுகிறவனுமான இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷகனை நமது நடுவிலும் திருச்சபையிலும் காண்கிறதில்லை?

* * *

பவுல் அப்போஸ்தலனைக் குறித்து இன்று நாம் பார்த்தவைகளைச் சற்றுச்சிந்திப்போமாக. கல்வி நாளுக்கு நாள் அநேக வழிகளில் பலவிதமாய் நமக்குக் கிடைத்துவருகிறது. நமக்குக் கொடுக்கப்படுகிறவைகளை நாம் கவனத்தோடும் மரியாதையோடும் ஏற்றுக்கொண்டுவருகிறோமா? நமது அறிவை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும் பிரயாசைப்படுகிறோமா? இவ்விஷயத்தில் பவுலுக்கு இல்லாத சிலாக்கியங்கள் நமக்கு அதிகமுண்டு. நமக்கு பாடசாலைகளும், பிரயோசனமான ஏராளமான புஸ்தகங்களும் உண்டு. அதிகப்படிக்கவேண்டியது. மாணவர் மாத்திரமல்ல, உபாத்திமாரும்கூட தினந்தோறும் மாணவரைப்போல் புதிதாய்ப்படிக்க ஆவலுள்ளவர்களாயிருக்க வேண்டும். ... நமது சொந்தக் காரியங்களை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர ...ண்டிய அவசியம் காணும்போதும், நமது சொந்த நன்மைக்கென்றே

உழைக்கும் அவசியம் நேரிடும்போதும் மாத்திரமல்ல, நமது சொந்த இருதயத்திலேயும் சபைகளிலும் சொந்தத்தாரிடத்திலும் கடவுளுடைய இராச்சியத்தைக் கட்டும் அவசியம் காணும்போதும்கூட ஆவியோடும், வைராக்கியத்தோடும் ஊக்கத்தோடும் உழைக்கக்கூடிய ஆண்களையும் பெண்களையும் நமது நடுவில் எங்கே காணலாம்? வைராக்கியமும் ஊக்கமுமாகிய இவைகளின் தீ கொழுந்துவிட்டு எரியும்படி கவனமாயிருப்போமாக. அது பெரிய நெருப்பாகும்படி அதை வளர்ப்போமாக. கடவுள் அதைவிரும்புகிறதுமல்லாமல், உபயோகப்படுத்துவார்.

மரித்தோரிலிருந்து எழுந்து பிழைத்திருக்கிற நமது ஆண்டவரும் இரக்ஷகருமாகிய இயேசு கிறிஸ்துவின் தெளிவான காட்சியை நமது நடுவில் எத்தனை பேர் பெற்றிருக்கிறார்கள்? அவரைக் குறித்துத்தான் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். நாம் அதையே கற்பித்தும் பிரசங்கித்தும் வருகிறோம். ஆனால், நாம் அவரைத் தரிசித்தது உண்டா? நாம் அவரைக் குறித்துப் பேசுவதும், பிரசங்கிப்பதும் நமது சொந்த அநுபவமாயிருக்கிறதா? நாம் நம்மையே அவருக்கு முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து அவரோடு எப்போதும் ஐக்கியமாய்ப் பிழைக்கும் ஜீவியத்தையன்றி வேறொன்றையும் செய்யக்கூடாத அந்த விதமாய் அவரைத் தரிசித்திருக்கிறோமா?

பவுல் இயேசுவை எருசலேமுக்கும் தமஸ்குவுக்கும் இடையிலுள்ள பாதையில் தரிசித்தான். நாம் அவ்வளவு தூரம்போக வேண்டியதில்லை. அவர் நம்மை எவ்விடத்திலும் சந்திப்பார். அவரது திருவசனத்தின் மூலமாய் உன்னைச்சந்திக்கும் அவரை நீ தினந்தோறும் திருவசனத்தில் காணலாம். தமது பரிசுத்த பந்தியில் அவர் உன்னை அதிக ஆச்சரியமும் உண்மையுமான விதமாயும் சந்திப்பார். நீ அவரைச் சந்தித்ததுண்டா? உன்னோடும் உனக்குள்ளும் அவர் பேசினதை நீ கேட்டதுண்டா?

நாளைய தினம் நாம் மிசியோன் ஸ்தோத்திரப் பண்டிகையைக் கொண்டாடப் போகிறோம். இயேசு கிறிஸ்துவைப்பற்றிய நற்சுவிசேஷத்தோடு இந்தியாவுக்கு முதலில் வந்த மிசியோனரிகளை நாம் விசேஷித்து நினைத்து நமக்குத் தமது சுவிசேஷ ஊழியரை அனுப்பும்படி கிருபைகூர்ந்த கடவுளை ஸ்தோத்திரிப்போமாக. கடந்த காலங்களின



யும் கடந்த காலங்களில் உழைத்த கடவுளுடைய பெரிய ஊழியரையும் மாத்திரம் நினைப்பது போதாது. இன்னும், கடவுளுடைய பழைய ஊழியருக்காக மாத்திரம் அவரைத் துதித்து ஸ்தோத்தரிக்கிறதும் மாத்திரம் போதாது.

உன்னுடைய ஜீவியத்தின் ஒவ்வொரு நாளும் மிசியோன் ஸ்தோத்திரப் பண்டிகையாயிருக்கட்டும். அப்போது கடவுள் உன்னைத் தமது ஊழியரில் ஒருவனாக்கித் தமது செய்தியைப் புதிதான ஜனங்களுக்கு அறிவிக்கும் பாக்கியத்தை அருளின கடவுளைத் தினமும் துதிக்கிறவனாவாய்.

உனது ஜீவியத்தின் ஒவ்வொருநாளும் மிசியோன் ஸ்தோத்திரப் பண்டிகையின் நாளாயிருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். இயேசு கிறிஸ்துவை மெய்யாகவே உன் ஆண்டவரும் இரக்ஷகருமாகத் தரிசித்து, உன்னையே அவருக்கு ஒப்புக்கொடுத்து ஜெப ஜீவியஞ் செய்ய ஆரம்பித்து பவுல் அப்போஸ்தலனைப்போல் உன் இரக்ஷகரோடு ஓயாமல் நெருங்கின ஜீவியம் செய்தாலொழிய ஒவ்வொரு நாளும் உனக்கு மிசியோன் ஸ்தோத்திரப் பண்டிகையாயிருப்பது முடியாது. ஆமேன்.

---

## இரக்ஷிக்கப்படுவதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?

(திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின 9-ம் ஞாயிறு.)

---

வேத வாக்கியம்: அப்போஸ்தலர் 16: 16-34.

பிலிப்பி பட்டணத்திலே ஜெபம் பண்ணுகிற இடத்துக்கு நாங்கள் போகையில் ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டான். குறிசொல்ல ஏவுகிற ஆவியை யுடையவன், குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயங்கிடைக்கச் செய்தவன்.

அவன் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து: இந்த மனுஷர் உன்னதமான கடவுளின் அடியார், இரட்சிப்பின் வழியை உங்களுக்கு அறிவிக்கிறார்களென்று சத்தமிட்டான்.

பல நாட்களாக இப்படியே செய்துகொண்டுவந்தாள். பவுல் கோபங்கொண்டு திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப்போகும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உனக்குக் கட்டளையிடுகிறேனென்று அந்த ஆவியினிடம் சொன்னான்; அந்நேரமே அது போய்விட்டது.

அவள் எஜமான்கள் தங்கள் ஆதாய நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று கண்டு பவுலையும் சீலாவையும் பிடித்து அம்பலத்தில் அதிபதிகளிடம் இழுத்துக் கொண்டு போனார்கள்.

அவர்களை அதிகாரிகளிடம் கொண்டுபோய்: யூதராகிய இந்த மனுஷர் நமது பட்டணத்தைக் கலக்குகிறார்கள்;

ரோமராகிய நாம் அங்கீகரிக்கவும் அனுசரிக்கவுங் கூடாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள்.

அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போட்டு அவர்களை அடிக்கச்சொன்னார்கள். அவர்களை அநேக அடி அடித்து சிறைச்சாலையிலே வைத்தார்கள். அவர்களைப் பத்திரமாய்க்காக்கச் சிறைச்சாலைக்காரனுக்கு கட்டளையிட்டார்கள்.

அவன் இப்படிப்பட்ட கட்டளைபெற்று அவர்களை உட்காவலறையில் அடைத்து அவர்கள் கால்களைத் தொழுவிலடித்தான். பவுலும் சீலாவுமோ நடுராத்திரியில் ஜெபம்பண்ணிக் கடவுளைத் துதித்துப் பாடினார்கள்; சிறையிலிருந்தவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

சடுதியில் பூமி மிகவும் அதிர்ந்தது; அதினால் சிறைச்சாலையின் அஸ்திபாரங்களும் அசைந்தன; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டன, எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயின.

சிறைச்சாலைக்காரன் திடுக்கிட்டெழுந்து சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறது கண்டு, சிறையிலிருந்தவர்கள் ஓடிப்போனார்களென்றெண்ணிப் பட்டயத்தை உருவித் தன்னைக்கொன்று கொள்ளப்போனான்.

பவுலோ மிகுந்த சத்தமிட்டு: உனக்குத் தீங்கு ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேயே இருக்கிறோம் என்றான்.

அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச் சொல்லி உள்ளே ஓடி நடுநடுங்கி பவுலுக்கும் சீலாவுக்கு முன்விழுந்து பணிந்து:

அவர்களை வெளியே அழைத்து வந்து:

ஐயன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்க அவர்கள்: ஆண்டவராகிய இயேசுவில் நம்பிக்கையாயிரு, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்களென்று சொல்லி



அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கடவுளின் வார்த்தையை போதித்தார்கள்.

மேலும் இரவில் அந்நேரத்திலேயே அவன் அவர்களை அழைத்துப்போய் அவர்கள் காயங்களைக்கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக்கூட்டிக்கொண்டுபோய் அவர்களுக்கு போஜனமளித்து கடவுளிடம் நம்பிக்கையுள்ளவனாகி தன் வீட்டார் அனைவரோடும் மகிழ்ச்சியாயிருந்தான்.

---

" இரக்ஷிக்கப்படுவதற்காக நான் என்ன செய்யவேண்டும் ?" இந்தக் கேள்வி பிலிப்பி பட்டணத்துச் சிறைச்சாலையின் காவற்காரன் அப்போஸ்தலனாகிய பவுலைக் கேட்ட கேள்வி.

அப்:பவுலை இக்கேள்வி கேட்டபோது பதில்சொல்ல ஒரு நிமிஷமும் தாமதித்ததில்லை. இக்கேள்விக்குத் தகுந்த பதில் உடனே சுருக்கமாயும் நேராகவும் சொன்னார்.

"இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்"? இக்கேள்வி வாஸ்தவத்தில் எக்காலத்திலும் எவ்விடத்திலுமுள்ள எந்த மனிதனும் அவனது இருதயத்தின் ஆழத்திலிருந்து கேட்கப்படும் கேள்வி. தற்காலத்திலுள்ளவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷதனைகவும் அப்போஸ்தலனாகவும் இருக்கும்படி பவுலுக்கு விசேஷித்த அழைப்பு வந்தது. மனுஷஜாதிக்கு இரக்ஷிப்பைக் கூறும் அழைப்பு பெற்றான்.

நம்மில் ஒவ்வொருவருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் பெரியோருக்கும், உலகத்துக்கு இரக்ஷிப்பின் சுவிசேஷத்தைக் கூறும் இதே அழைப்பு உண்டு. நமது நடுவில் ஜீவிக்கும் மனிதருக்கும் நமது வேலைத்துறையில் இருக்கும் எல்லாருக்கும் இச்சுவிசேஷத்தைக் கூறும் அழைப்பு நமக்கு உண்டு. இரக்ஷிப்பையும் இரக்ஷிக்கப்படும் வழியையும் பற்றி பவுல அப்போஸ்தலன் சொன்ன சரியான பதிலைப்போல் நாம் எல்லாரும் சொல்லக்கூடியவர்களாயிருக்க வேண்டும்.

பவுலால் சொல்லப்பட்ட பதில் மெய்யாகவே வெகு சுருக்கமும் மானது. " ஆண்டவராகிய இயேசுவில் நம்பிக்கையாயிரு. அப்

பொழுது நீயும் உன் வீட்டாரும் இரக்ஷிக்கப்படுவீர்கள்" என்பதே. சில போதகங்களை விசுவாசிப்பது முக்கியமல்ல. அல்லது சில சடங்காசாரங்களையோ முறைகளையோ செய்து முடிப்பது முக்கியமல்ல. நான் இந்த அந்த மனிதரையும் ஜாதியையும் சேர்ந்தவன் என்பதிலும் விசேஷமில்லை. எனக்கு வயதாயிற்று நான் அதிகம் படித்தவன் என்பதும் காரியமல்ல. இன்னும் விசேஷித்த புத்தி சாதுரியமும் ஆஸ்தியும் விசேஷமல்ல. "இயேசுகிறிஸ்துவின்பேரில் நம்பிக்கையாயிரு; அவருக்கு உன்னைத் தத்தம்செய்" என்ற ஒன்றான காரியத்தையல்லாமல் வேறொன்றாகிலும் காரியம் இல்லை.

இயேசுகிறிஸ்துவில் நம்பிக்கையாயிருப்பது, தன்னை அவருக்கு ஒப்புக்கொடுப்பது என்றால் இதின் கருத்தென்ன? இதைக்குறித்து அநேகம் சொல்லலாம். என்றபோதிலும் நமது வாக்கியத்தில் வெகு அழகாயும் சுருக்கமாயும் பிலிப்பி பட்டணத்துச் சிறைச்சாலைக்காரனைக் குறித்து, அவன் இரக்ஷிக்கப்பட்டு சந்தோஷத்தையும் பாக்கியத்தையும் எப்படி அடைந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறதிலேயே இக்கேள்விக்குத் தகுந்த சுருக்க விடையை நாம் காண்கிறோம்.

* * *

முதலாவது சொல்லப்பட்டிருக்கிறதென்ன? அப்: பவுல் அவனிடத்தில் கடவுளின் வார்த்தையைப் போதித்தான் என்பதே. அதினால் என்ன தெரிகிறது? சிறைச்சாலைக்காரனும் அந்த வார்த்தையைக் கவனித்துக் கேட்டான் என்பதுதான். ஒரு மனுஷன் இரட்சிக்கப்பட வேண்டுமானால், அவனுக்குக் கடவுளுடைய வார்த்தையைப் போதிப்பதும், அவன் கடவுளுடைய வார்த்தையைக் கேட்பதும் தான் முதல் காரியமாயிருக்கிறது. கடவுளுடைய வசனத்தைக் கேட்பது என்றால், எல்லா தன்னிச்சை, தன்மனம்போல் நடப்பது, முதலிய எல்லாவற்றையும் விட்டு விடுவதுதான்.

பிலிப்பிப்பட்டணத்துச் சிறைச்சாலைக்காரனைச் சற்று யோசிப்போமாக. பயந்து போனான். தற்கொலை செய்துகொள்ள ஆயத்தமாயிருந்தான். அன்று இரவில் சிறைச்சாலையில் நடந்த ஆச்சரியமான காரியங்களினால் இந்த விதமாய் அவன் மனம் தத்தளித்தது. கொடூரமான தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளக்கூடிய ஒரேவழி தன்னைக் கொல்



வது என்றே நினைத்தான். ஆனால் வெகு சீக்கிரத்தில் அமைதியுள்ளவனானான். தன் சுய வழிகளை விட்டு விட்டான். பவுலினால் சொல்லப்பட்ட கடவுளின் வசனத்துக்குச் செவிகொடுத்து அவருடைய வசனத்தையே ஒன்றான சத்தியமென்று நம்பத் தொடங்கினான்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு காரியத்தைக் கவனிக்க வேண்டியது. இந்த மனிதனுக்கு இரட்சிப்பின் செய்தியைச் சொல்லும் சிலாக்கியம் பவுலுக்குக் கிடைத்தபோது அவர் நேராகவும் சுருக்கமாகவும் நமது இரக்ஷகராகிய இயேசு கிறிஸ்துவையே அறிவிக்க ஆசைப்பட்டார் என்று நினைக்கிறேன்.

நாம் சுவிசேஷ வேலையைச் செய்யும்போதும், செய்யப் பிரயாசப்படும்போதும் நாம் செய்கிறதுபோல பவுல் அச்சந்தர்ப்பத்தில் செய்தார் என்று நான் நினைக்கிறதில்லை. நமது பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுக்குள் இருக்கிறதும் இருக்கிறதென்று நாம் நினைக்கிறதுமான தீமையான காரியங்களைக் குறித்தே நாம் அடிக்கடி விரிவாய்ப் பேசுகிறதுண்டு. அப்: பவுல் கொரிந்து சபைக்கு எழுதின முதலாம் நிருபம் 2-ம் அதிகாரம் 2-ம் வசனத்தில் எழுதினபடி "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையுண்ட அவரையே, அன்றி வேறொன்றையும் நான் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்பதையே அவர் அச்சமயத்திலும் தீர்மானம் செய்திருப்பார். பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் தங்கள் தீமையான வழிகளையும் பழக்க வழக்கங்களையும் விட்டுவிட வேண்டுமென்று விரும்புவோமானால், அவர்களுடைய தீமையான பழைய வழிகளையும் அவநம்பிக்கையையும் எடுத்துப் பேசுவதினால் அல்ல, நல்ல காரியங்களையும் இயேசுகிறிஸ்துவையும் அவரால் அடையும் இரட்சிப்பையும் நேராகச் சொல்லித்தான் பிரசங்கிக்க வேண்டுமே.

பிலிப்பிப் பட்டணத்துச் சிறைச்சாலைக்காரன் இயேசு கிறிஸ்துவின்மேலுள்ள தன் நம்பிக்கையை பவுல் அப்போஸ்தலனால் சொல்லப்பட்ட கடவுளுடைய வார்த்தையைக் கேட்டதினால் காண்பித்தான் என்று நாம் முதலாவது சொன்னோம்.

* * *

[illegible] என்ன? அவன் செய்த இரண்டாவது காரியம் [illegible]. [illegible] தனக்குச் சொல்லப்பட்ட கடவுளுடைய

வசனத்தைத் தான் கேட்டு ஏற்றுக்கொண்டதாகக் காண்பிக்கிறார். அதாவது, சிறைச்சாலைக்காரன் பவுலையும் சீலாவையும் அப்போதே தன் வீட்டிற்குக் கொண்டுபோய் அவர்களுடைய காயங்களைக் கட்டினான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிசயமான விதமாய்ப் பிறத்தியாரைச் சிநேகிக்கும் ஆவல் உடனே அவனுக்குள் உண்டாயிற்று. கிறிஸ்து அவனுக்குக் காண்பித்த அன்பைக் குறித்த வசனத்தைக் கேட்டிருந்தான். ஆகையால் இப்போது கிறிஸ்துவின் பேரிலும் அவரது ஊழியர்பேரிலும் அன்பைக் காட்டும் ஆவல் அவனுக்குள் உண்டாயிற்று.

இதனால் அவனுடைய ஜீவியத்தில் ஒரு பெரிய மாறுதல் உண்டானதாகத் தெரிகிறது. பவுலையும் சீலாவையும் பத்திரமாய்க் காக்கச் சிறைச்சாலைக்காரன் கட்டளை பெற்றவுடனே அவன் அவர்களை உட்காவலறையில் அடைத்து அவர்கள் கால்களைத்தொழுவில் அடித்தான் என்று நமது வாக்கியத்தில் வாசிக்கிறோம். அவனுடைய குரூரம் இதனால் நன்றாய் விளங்குகிறதுமல்லாமல் மற்றவர்களுக்கு அவனால் அதிகத்துன்பமும் கஷ்டமும் உண்டாயிருக்கும் என்பதிற்கு அத்தாட்சியாகவுமிருக்கிறது. கைதிகளைக் கொடுமையாய் நடத்த அவன் முந்தி எவ்வளவு ஆவலுள்ளவனாயிருந்தானோ அவ்வளவாக அவன் இப்போ அவர்களை பட்சமும் அன்புமாய் நடத்தும் ஆவலுள்ளவனாகிவிட்டான்.

அவனுடைய ஜீவியத்தில் இப்பேர்பட்ட மாறுதல் எதினாலே உண்டாயிற்று? தங்களுக்கு இரக்கம் காட்டும்படி கைதிகள் ஒரு வேளை இவனை கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்களோ? அல்லது லஞ்சம் கொடுத்தார்களோ? அல்லது அவர்களது அழுகையும் புலம்பலும் அவனுடைய இருதயத்தைத் தொட்டதோ? அப்படி ஒன்றும் நடந்ததில்லை. கிறிஸ்துவின் ஊழியக்காரரால் பிரசங்கிக்கப்பட்ட கடவுளுடைய வார்த்தைக்கு அவன் அமைதலோடும் கவனத்தோடும் செவிகொடுத்தான். அந்த வசனந்தான் அவனுடைய ஜீவியத்தில் இப்பேர்ப்பட்ட அதிசயமான மாறுதலை உண்டுபண்ணிற்று இப்படி குரூரமுள்ளவன் பட்சமுள்ளவனாகித் தன்பட்சத்தை அன்பின் கிரியைகளால் வெளிப்படுத்த ஆவலுள்ளவனானான்.





இயேசுகிறிஸ்துவினுள்ள தன் நம்பிக்கையினால் சிறைச்சாலைக்காரன் காண்பித்த மூன்றாவது விஷயம் என்னவென்றால்: அவனும் அவனுடையவர்களும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதே.

இதன் கருத்தென்ன? கடவுளோ தமது எத்தனங்களாகிய தமது ஊழியரைக்கொண்டு செய்கிற இந்த கிரியையினால் அவன் கிறிஸ்துவின் சரீரமாகிய கிறிஸ்துவின் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டான் என்பதை இது வாஸ்தவமாய் வெளிப்படுத்துகிறது. அவன் கிறிஸ்துவின் நெருங்கிய ஐக்கியத்தில் மாத்திரமல்ல, கிறிஸ்துவின் உண்மையான சீஷருடைய ஐக்கியத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டான். ஞானஸ்நானமானது இப்போதும் இருக்கிறவிதமாய் கிறிஸ்துவோடும் அவருடைய சபையோடும் உள்ளானவிதமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு ஒரு வெளியான அடையாளமாயிருக்கிறது.

இதற்குப் பிற்பாடு மற்றவர்களுக்கு அன்பைக் காட்டுவதில் அவன் அதிக ஆவலுள்ளவனாகி, அதிகமதிகமாய்ச் சந்தோஷத்திலும், மனப்பாக்கியத்திலும் உள்ளாகி, தன் வீட்டாரெல்லாரோடும் கடவுளிடத்தில் அதிகமதிகமாய் நம்பிக்கையை வைத்தான் என்று நமது வாக்கியத்தின் கடைசி வசனத்தில் வாசிக்கிறோம்.

* * *

"இரட்சிக்கப்படுவதற்கு நான் செய்யவேண்டியதென்ன?" இது பிலிப்பி பட்டணத்துச் சிறைச்சாலைக்காரனுடைய கேள்வி. இக்கேள்விக்குத் தகுந்த பதிலைப்பெற்றுத் தனக்குக் காட்டப்பட்ட வழியில் சென்றான்.

இங்கே இவ்வுலகத்தில் எல்லாம் இரக்ஷிக்கப்படுதலில் முடிவடைகிறதில்லை. இயேசுகிறிஸ்துவின்பேரிலுள்ள விசுவாசத்தின் மூலமாய் நாம் இரக்ஷிக்கப்படுகிறோம், நாம் இரக்ஷிக்கப்பட்டாயிற்று. ஆனால் நாம் நாளுக்கு நாள் அதிகமதிகமாய் இரக்ஷிப்புக்குள் புகுந்து, அதை அதிகமதிகமாய் முழுவதும் நம்முடையதாக்கிக்கொ[illegible] வேண்டும். பிலிப்பி பட்டணத்துச் சிறைச்சாலைக்காரன் கேட்டது போல் "இரக்ஷிக்கப்படுவதற்கு நான் செய்யவேண்டிய[illegible]ன?" என்று நமது ஜீவியத்திலும் சில விசேஷித்த சமயங்களில் [illegible]திரம் சில மனுஷரால் கேட்கப்படும் கேள்வியாய் மாத்திரம் இரா

மல் நம்மில் ஒவ்வொருவரும் தினந்தோறும் நமது மனதிலும் இருதயத்திலும் கேட்கப்படவேண்டிய கேள்வியாய் இருக்கிறது. நாம் தினந்தோறும் அதிகமதிகமாய்ச் சரியான பதிலைத் தேடவேண்டிய கேள்வி இது. "இரக்ஷிக்கப்படுவதற்கு நான்செய்யவேண்டியதென்ன?" என்ற இந்த கேள்வி ஒன்றினால்தான் நமது ஜீவியத்தில் விசேஷித்த ஆவலையும் கவலையையும் உண்டுபண்ணும்படி இடம் கொடுக்கவேண்டும். ஏனெனில் நமது ஜீவியத்துக்குரிய மற்ற கேள்விகளெல்லாம் இந்த ஒரே கேள்விக்குள் அடங்கியிருக்கிறது.

"இரக்ஷிக்கப்படுவதற்கு நான் செய்யவேண்டியதென்ன?" என்ற இக்கேள்வியைத் தினம்தினம் நமது மனதிலும் இருதயத்திலும்கேட்டு, அதற்குச் சரியான பதிலை நாம்பெற ஆவலாயிருந்தால், பிலிப்பிப்பட்டணத்துச் சிறைச்சாலைக்காரனுக்குப் பவுலால் கிடைத்த: "இயேசு கிறிஸ்துவின்பேரில் விசுவாசி, அவரில் நம்பிக்கையாயிரு; அப்போது இரக்ஷிக்கப்படுவாய்" என்ற அதேபதில்தான் நமக்குக் கிடைக்கும்.

பிலிப்பிப்பட்டணச் சிறைச்சாலைக்காரன் இரக்ஷிப்புக்கு நேரே நடந்த அதே வழியில் நாமும் தினந்தினம் சரியாய் நடக்கவேண்டும். தினம்தினம் அதிகமதிகமாய் ஜாக்கிரதையாகக் கடவுளுடைய வசனத்தைக்கேட்டு அதில் நம்பிக்கை வைக்கவேண்டும். அந்தக் கடவுளுடைய வசனம் நமது ஜீவியத்தில் அதிகமதிகமாய் அற்புதமான விதமாய் மாறுதலை உண்டுபண்ணவேண்டும். கடவுளுடைய வசனமானது நாளுக்கு நாள் நம்மிலுள்ள நன்னயத்தை நீக்கவும் அது நம்மிலுள்ள பகை கொடுமை முதலியவைகளை மாற்றி, அன்பு பட்சம் முதலியவைகளை உண்டுபண்ணவும், அது நம்மிலுள்ள சோம்பலை மாற்றி சுறுசுறுப்பை உண்டுபண்ணவும், அது நம்மிலுள்ள அஜாக்கிரதையை மாற்றி ஜாக்கிரதையை உண்டுபண்ணவும் நாம் இடங் கொடுக்கவேண்டும்.

மேலும் நாம் சிறுபிள்ளைகளாகவோ அல்லது பெரியவர்களாகவோ பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றதின் அர்த்தம் என்ன என்பதை அதிகமதிகமாய் உணர்ந்து அறியவேண்டும். அத்தோடு நமது கர்த்தரும் இரக்ஷகருமாயிருப்பவர் தாமே தம்மைத் தமது பிள்ளைகளும் தமது சரீரமாகிய திருச்சபையின் அவயவங்களுமாக்கிக்கொண்டதின் கருத்து என்ன என்பதையும் அதிகமதிகமாய் உணரப் பிரயாசப்படவேண்டும்.



கடவுளின்பேரில் நம்பிக்கை வைப்பதுவே இடுக்கவாசலாயிருக்கிறது. அதின் மூலமாய்த்தான் நாம் எல்லாரும் உட்பிரவேசிக்கவேண்டும். அத்தோடுகூட இந்த நம்பிக்கை ஒரு விதமாய் நாம் நாளுக்கு நாள் நடக்கவேண்டிய பாதையைப்போலும். இதே பாதை நம்மை அதிகமதிகமாய்க் கடவுளுடைய இராச்சியத்திற்கும் நித்திய ஜீவனின் ஆச்சரியமான வெளிப்படுத்தல் வல்லமை, கடவுளுடைய ஞானம் முதலியவைகளுக்குள் வழிநடத்துகிறதாயிருக்கிறது.

பிலிப்பி பட்டணச் சிறைச்சாலைக்காரனுடைய வரலாற்றை நாம் வாசிக்கும்போது நாம் கவனிக்கவேண்டிய இன்னுமொரு காரியம் உண்டு. சிறைச்சாலைக்காரனுக்குப் பவுல் பதில் உரைத்தபோது அவனது வீட்டையும் வீட்டாரையும் கூடச்சேர்த்துப் பேசினான். பவுல் கடவுளுடைய வசனத்தை அவனுக்குப் பிரசங்கித்தபோது அவன் மாத்திரமல்ல அவனுடைய வீட்டிலிருந்த அனைவரும் வசனத்துக்குச் செவிகொடுத்ததாகவும், இன்னும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷகனாகிய பவுலை அவனது வீட்டிற்கு அழைத்து, வீட்டார் எல்லாரும் சந்தோஷத்தினால் நிறைந்ததுமல்லாமல் கடவுள்பேரில் விசுவாசமுடையவர்களாயிருந்ததாகவும் சொல்லியிருக்கிறது.

சிறைச்சாலைக்காரன் தன் உயிரையே மாய்த்துக்கொள்ள மனதாயிருந்தான். அது அப்படி நடந்திருந்தால் அவனுடைய வீடு முழுவதுமே பெரிய நஷ்டமும் கஷ்டமுமாய் முடிந்திருக்கும்.

பயத்தினாலும் அவநம்பிக்கையினாலும் அவன் தன் உயிரை மாய்த்துக் கொள்வதற்குப்பதிலாக அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்பேரில் வைத்த நம்பிக்கையினால் தன் உயிரை ஆச்சரியமானவிதமாய் புது சிருஷ்டியாக்கிக்கொள்ளக் கூடியவனானது மல்லாமல், தான் இதற்குமுன் அறிந்து அனுபவியாதவிதமாய் வீட்டார் எல்லாரோடும் சந்தோஷபாக்கியத்துக்குள்ளானான்.

என் சிநேகிதனே! பிலிப்பிப்பட்டணத்துச் சிறைச்சாலைக்காரனுக்குக் கிடைத்த பாக்கியத்தைப்போல் நீ எப்போதாவது அனுபவித்ததுண்டா? "இரக்ஷிக்கப்படுவதற்கு நான் செய்யவேண்டியதென்ன?"
கேள்வியானது தினந்தோறும் உன் இருதயத்தில் குடிகொண்
கிறதா? இக்கேள்விக்கான பதிலை நீ கேட்டிருக்கிறாயா? இயேசு

கிறிஸ்துவின்பேரிலுள்ள பூரணமான நம்பிக்கையினால் உன்னையே அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறாயா? நீ ஆண்டவருடைய வசனத்துக்குச் செவிகொடுத்ததுண்டா, தினந்தினம் செவிகொடுத்து வருகிறாயா? இடையறாத அன்பின் கிரியைகளால் நிறைந்து ஜீவியம் செய்து வருகிறாயா? இயேசுகிறிஸ்துவின் அடியார்களோடுள்ள சந்தோஷத்தை நீ அனுபவித்ததுண்டா? இந்த உன் அனுபோகத்தை உன் வீட்டாரெல்லாரும் உன்னோடு கூடி அனுபவிக்கிறார்களா?

நீ கிறிஸ்துவின்பேரில் வாஸ்தவமாக விசுவாசமுடைய சீஷனை நாளுக்கு நாள் தேறினவனானால், நிச்சயமாகவே உன் வீடு முழுவதுக்கும் அப்படியே இருக்கும். இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கடவுளோடு நெருங்கின ஐக்கியம் நமக்கு இருந்ததானால், அதுவே நாம் நமது வீட்டாரோடும் அயல்வீட்டாரோடும் நெருங்கிய ஐக்கியமுடையவர்களாயிருக்கிறோம் என்பதிற்கு அத்தாட்சி. இப்படி சிறைச்சாலைக்காரனும் அவன் வீட்டாரும் அனுபவித்தார்கள்.

இன்றைக்கு மறுபடியும் ஒருதரம் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பந்திக்கு அழைக்கப்படுகிறோம். அவரோடு ஆச்சரியமான விதமாய் நெருங்கின ஐக்கியத்துக்குள்ளாகும்படியாக நம்மை அழைக்கிறார். இப்படி நாம் பரிசுத்த இராப்போசனத்தை ஆசரிக்கிறதானது நமது அயலகத்தாரோடும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சீஷரெல்லாரோடும் நமக்கு இருக்கும் நெருங்கிய ஐக்கியத்தைக் குறிக்கிறது.

ஆண்டவரே, அன்றைக்குப் பிலிப்பிப்பட்டணத்துச் சிறைச்சாலைக்காரனைப்பற்றி "அவன் கடவுளிடம் நம்பிக்கையுள்ளவனாகித் தன் வீட்டார் அனைவரோடும் மகிழ்ச்சியாயிருந்தான்" என்று சொல்லப்பட்டதுபோல, எங்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் இன்றைக்கும் பிறகும் எப்போதும் உண்மையாகவே சொல்லப்பட கிருபைசெய்தருளும்.

ஆமேன்.

# நித்திய ஜீவனுக்குக் கொண்டுபோகும் வழி.

(திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின 13-ம் ஞாயிறு.)

வேத வாக்கியம்: லூக்கா 10:23-37.

பின்பு இயேசு சீஷர்முகமாய்த்திரும்பி அவர்களிடம் தனித்து: நீங்கள் காண்கிறவைகளைக் காணுங்கண்கள் பாக்கியமுள்ளவைகள்.

அநேக தீர்க்கதரிசிகளும் ராஜாக்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும் காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்டான்.

அதற்கு அவர்: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசிக்கிறது என்னவென்று கேட்க.

அவன்: உன் கர்த்தராகிய, கடவுளிடம் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் உன் முழு மனதோடும் அன்புகூர்ந்து உன்னிடத்தில் அன்புகூறுவதுபோல அயலானிடத்திலும் அன்பு கூரவேண்டுமென்று எழுதியிருக்கிறது என.

அவர்: நீ சொன்னது சரி, அப்படியேசெய், அப்பொழுது பிழைப்பாய் என்றார்.

தான் கேள்விகேட்டது நியாயமென்று காண்பிக்க மனதாய் அவன் இயேசுவினிடம்: எனக்கு அயலான் யார் என்று கேட்டான்.

அதற்கு இயேசு: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர்கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு அவனை அடித்துக் குற்றுயிராக விட்டுப்போனார்கள்.

ஒரு ஆசாரியன் தற்செயலாய் அந்தவழியே வந்து அவனைக் கண்டு ஒரு பக்கமாய் விலகிப்போனான்.

அப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து அவனைக்கண்டு பக்கமாய் விலகிப்போனான்.

பிரயாணஞ்செய்த சமாரியன் ஒருவனே அவ்விடம்வரவே அவனைக்கண்டு மனதுருகி,

கிட்டப்போய் அவன் காயங்களில் எண்ணெயும் திராட்சாசரசமும் வார்த்துக் காயங்களைக்கட்டித், தான் சவாரிசெய்த மிருகத்தின்மேல் அவனை ஏற்றிச் சத்திரத்துக்குக் கொண்டுபோய் அவனைப் பராமரித்தான்.

மறுநாளிலே இரண்டு தினாரியத்தை எடுத்துச்சத்திரத்தான் கையில்கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் செலவழித்தால் நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேனென்றான்.

இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் அயலானாக உனக்குத் தோன்றுகிறான் என்று கேட்க

அவன்: அவனுக்கு இரக்கஞ்செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு: நீயும் போய் அப்படியே செய் என்றார்.

---

ஒரு நியாயசாஸ்திரி அல்லது வக்கீல் இயேசுநாதரைப் பார்த்து போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்டான். அதற்கு இயேசுநாதர் பதிலளிக்காமல் அவனைத்தானே வேதத்தில் இதைக்குறித்து என்ன எழுதியிருக்கிறதென்று நினைத்துப்பார் என்றும் "நியாயப்பிரமாணத்தில் நீ வாசிக்கிறது என்ன" என்றும் கேட்டார்.

நாம் அடிக்கடி நமக்குள் அநேக கஷ்டமான கேள்விகளைக்கேட்கிறதுண்டு. அதற்குப்பதிலை அங்குமிங்கும் பல பேரிடத்தில் தேடுகிறோம். ஆனால் பதில் நமக்குச் சமீபத்தில் வேதத்தில் இருக்கிறதென்பதை மறந்துபோகிறோம். நமக்கு ஏற்படுகிற கஷ்டமான கேள்விகளுக்கு அதிலே தான் கடவுள் பதிலைக் கொடுத்திருக்கிறார் என்பதை மறந்துபோகிறோம். ஆகையால் நீ உன் வேதத்தை கவலையுடன் வாசி. அப்போது தகுதியான பதிலை அதில் காண்பாய்.

நியாயசாஸ்திரியின் கேள்வி என்ன? "நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டும்" என்பதே. இதைக்குறித்து வேதம் என்ன சொல்லுகிறது? நியாயசாஸ்திரி சொன்னதாவது:—"உன் கர்த்தராகிய கடவுளிடம் அன்புகூரவேண்டும். உன்னிடத்தில் அன்புகூருவதுபோல் அயலானிடத்திலும்



அன்புகூரவேண்டும்" என்பதே. இதற்கு இயேசுநாதர் என்ன சொன்னார்? நீ "சொன்னது சரி, அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்" என்பதே.

நித்திய ஜீவனைப்பற்றிய கேள்விக்கும் அன்பைப்பற்றிய கேள்விக்கும் அதிக நெருங்கிய சம்பந்தம் எப்போதும் உண்டென்பதை மறக்கக்கூடாது. நித்தியஜீவனைப்பற்றிய கேள்வியானது பலவிதமான ரூபமடையும் திருஷ்:—பாவமன்னிப்பு எப்படி கிடைக்கும்? விசுவாசம் எப்படி உண்டாகும்? முதலியவைகள். இவை எல்லாவற்றிற்கும் மேலானதோ அன்புக்குரிய கேள்வி.

கடவுளையும் இயேசுநாதரையும் பற்றிய சிலகாரியங்கள் உண்மை என்று நம்புகிற நம்பிக்கை, அல்லது நமது மனதில் கிளம்புகிற தீர்மானமற்ற எழுப்புதல், வெது வெதுப்பான உணர்ச்சிகள் இந்த அன்பல்ல. இது வேறே. ஆக, நித்திய ஜீவனுக்குள் நம்மைக் கொண்டுபோகும் அன்பாவது:—கடவுளை நமது முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும், முழுமனதோடும் கூரும் அன்பாம். அவ்வன்பு கடவுளிடத்திலும் மனிதரிடத்திலும் எப்போதும் சேர்ந்து கிரியை செய்யும்.

இதை நாம் சரியாய்ச் சிந்தித்தால், நித்தியஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதைப்போலொத்த கஷ்டமான காரியம் வேறு இல்லை என்பதை அறிந்து உணர்ந்துகொள்வோம். யாதாமொரு போதகத்தையோ திருஷ்:-சத்தியவேதம் கடவுளுடைய வார்த்தை என்பதையோ, நம்புவதினாலும், அல்லது ஏதோ சட்டத்தை அனுசரித்து ஒரு காரியத்தைச் செய்து முடிக்கிறதினாலும் இரக்ஷிப்பு கிடைக்கிறதாயிருந்தால், நம்மில் அநேகர் சுலபமாய் இரக்ஷிக்கப்படுவோம்.

இரக்ஷிப்பை எப்படி அடைவது? நித்தியஜீவனை எப்படி சுதந்தரித்துக்கொள்வது? என்ற இரண்டுகேள்விகளும் அன்பைப்பற்றிய கேள்வியே. அதாவது: கடவுளிடத்திலும் மனிதரிடத்திலும் அன்புகூர்ந்து, நாளுக்குநாள் அதிகமதிகமாய்ச் சிநேகக்கிரியைகளில் பெருகி ஜீவிக்கும் ஜீவியமே அப்படி ஜீவித்தால் நமக்கு நித்யஜீவன் உண்டு.

நம்முடைய சிநேகக் கிரியைகளுக்கு பலனாக நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறோமோ? இல்லை! இல்லை! ஒரு மனிதனுக்கு இர

க்ஷிப்பும், நித்யஜீவனும் அவன் செய்யும் புண்ணியங்களினிமித்தம் கடவுளால் கொடுக்கப்படுகிறதே யில்லை. பின்னே, எதினால் ஒருமனிதன் இரக்ஷிக்கப்பட்டவனாகி நித்தியஜீவனை சுதந்தரித்துக்கொள்ளுகிறான்? இயேசுவின் மூலமாய் அவன் கடவுளோடு ஒன்றி ஐக்கியப்பட்டு போகும்போது, கடவுளின் தன்மை அவனது இருதயத்தில் கொஞ்சமாகிலும் உருவேற்படும்போது, கடவுளைச் சிநேகிக்கும் சிநேகம் நமது இருதயத்தில் குடிகொண்டு, அது நமது ஜீவியத்தில் பலன் செய்யும் போது, நாம் இரக்ஷிக்கப்பட்டு நித்தியஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறோம்.

இயேசுநாதர் ஒரு தரம் நியாயத்தீர்ப்பின் நாளைக் குறித்துச் சொன்னதென்ன? எப்பேர்பட்டவர்கள் ஆக்கினையடைவார்கள்? கொலைகாரரா, கள்ளரா, பொய்யரா, விபசாரரா? அச்சமயத்தில் இயேசுநாதர் இப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து ஒன்றும் சொன்னதில்லை.

அவர் சொன்னதென்ன? தங்கள் அயலகத்தானுக்குச் சிநேகத்தைக் காட்டாதவர்களும், சின்னஞ் சிறிய சிநேகக்கிரியைகளைக் காட்டாதவர்களும் நித்தியமாய்க் கடவுளுடைய இராச்சியத்தைவிட்டுப் புறம்பாக்கப்படுவார்கள் என்றார்.

பின், எப்படிப்பட்டவர்கள் நித்தியஜீவனுக்குள் போவார்கள் என்று சொன்னார்? கோவிலுக்கு ஒழுங்காய் வந்தவர்களா? போதக விஷயத்தில் பிசகிப்போகாதவர்களா? சுவிசேஷவேலைக்கும் கோவிலுக்கும் அதிகமாய்க் கொடுக்கிறவர்களா? இயேசுநாதர் அப்பேர்ப்பட்ட காரியங்களைக் குறித்து அச்சமயத்திலே ஒன்றும் சொன்னதில்லை. பிறத்தியானுக்குச் செய்யப்படுகிற சிறியஉதவி, பசித்தவனுக்குப் போசனம் கொடுத்தல், அம்மணமானவனுக்கு வஸ்திரம் கொடுத்தல், காவலிலிருக்கிறவர்களையும் வியாதியாயிருக்கிறவர்களையும் சந்தித்தல், தாகமாயிருக்கிறவனுக்குத் தண்ணீர் கொடுத்தல், இப்பேர்ப்பட்ட காரியங்களைக் குறித்துத் தான் சொன்னார்.

ஆக, அன்பு, நித்தியஜீவன் ஆகிய இவைகளுக்கு நெருங்கிய சம்பந்தம் உண்டு. நாமோ இதை அடிக்கடி உணருகிறதில்லை. ஆன



படியால் நித்திய ஜீவனுக்குட்படுவதும், இடுக்கவாசலுக்குட்பட்டு நெருக்கமான பாதையில் செல்வதும் ஒன்றே.

* * *

நித்திய ஜீவனைப்பற்றிய கேள்வியானது வாஸ்தவத்தில் சிநேகத்தைப்பற்றிய கேள்வி யென்பதை நியாயசாஸ்திரி உணர்ந்த உடனே அவனுக்குள் ஒருவிதமான பயம் உண்டாயிற்றென்பது ஆச்சரியமில்லை. இந்த அன்பு அதிகமானதைத் தன்னிடம் கேட்கிறதென்று யோசித்தான். நாம் அன்பைக்காட்ட வேண்டிய மனுஷரின் தொகையைமட்டுப்படுத்துவதினால் நித்தியஜீவனுக்குக் கொண்டுபோகிற வாசல் கொஞ்சம் விரிவாக்கக்கூடும். ஆகையால் எனக்கடுத்தவன் யாரெனக் கேட்டான்.

நியாயசாஸ்திரிக்கு அயலாராகிய சில கூட்டத்தாரை இயேசுநாதர் சொல்லுவாரென்று அவன் மெய்யாகவே எதிர்பார்த்திருக்கலாம். திருஷ்:—தன் மனைவி, மக்கள், தாய், தந்தையர், அக்கம்பக்கத்தார், தன்னோடொத்த தொழிலாளிகள், தன் ஜாதியார் அவ்வளவுதான். எப்படியோ வேறே எட்டின மனுஷராயிருக்கமுடியாது. இவ்விதமாக ஒருவன் அன்பைக் காண்பிக்கவேண்டிய இடத்தை நெருக்கக்கூடுமானால், ஒரு மனுஷன் நித்தியஜீவனை சுதந்தரிப்பதை இன்னும் கொஞ்சம் எளிதாக்கிக்கொள்ளக்கூடும் என்று நினைத்தான்.

இயேசு என்ன மறு உத்தாரம் சொன்னார்? இவ்விதமான கேள்விகளுக்கு இன்னமும் என்ன மறு உத்தாரம் கொடுக்கிறார்? அவர் ஒரு உவமையைச்சொன்னார்:—

ஒரு மனிதன் அதாவது ஒரு யூதன் எருசலேமிலிருந்து எரிகோவுக்கு இறங்கிப்போனான். திருடர்கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களைக் கழற்றிக்கொண்டு, அடித்துக் காயப்படுத்திக் குற்றுயிராய் விட்டுப்போனார்கள்.

எதிர்பாராத விதமாய் ஒரு ஆசாரியன் அந்தப்பக்கமாய் வந்தான். அவன் அந்த மனிதனைக் கண்டு தனக்குள்ளே "என்ன பரிதாபம், திருடருக்கும் கொள்ளைக்காரருக்கும் கேள்விமுறையில்லையோ, பாதை எவ்வளவு அபாயம். போலீஸ் ஏது. இம்மனிதனுக்கு ஏதோ [illegible]வி வேண்டுமே. ரொம்பமோசமான நிலைமை. நானோ ஒரு வைத்தி

யன் அல்ல. காயம் கட்டுவது எப்படியென்றும் எனக்குத்தெரியாது. மேலும் எரிகோவுக்குச் சீக்கிரம் போகவேண்டும். இவ்வேழை மனிதனுக்கு உதவிசெய்யவோ எனக்குச் சமயம் இல்லை. என்னோடு கொண்டுபோனாலும் சங்கடமாயிருக்கும். அவன் யாரோ நான் யாரோ; பாத்தியம்கிடையாது, இவன் ஒரு குரு, அதாவது ஆசாரியனாயிருந்தால், நான் கட்டாயம் உதவி செய்யவேண்டியதுதான். அவனைச் சேர்ந்த வேறேயாரும் வருவார்கள். அவர்கள் கட்டாயம் சரியாய்ப் பார்ப்பார்கள். ஒருவேளை திருடர் அக்கம் பக்கத்திலிருப்பார்களோ. நான் இங்கே தாமதிக்கக்கூடாது. எனக்கும் ஒருவேளை அப்படியே நடக்கக்கூடும்'' என்று சொல்லிக்கொண்டே, போய் விட்டான் என்று நினைக்கிறேன்.

அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து காயப்பட்டவனைக் கண்டு அந்த ஆசாரியனைப் போலவே நினைத்து, பக்கமாய் விலகிப் போனான்.

ஆனால் ஒரு சமாரியன் அவ்வழியே போகையில், இவன் குற்றுயிராய்க்கிடக்கிறதைப்பார்த்தான். இவன் சமாரியன். காயப்பட்டவன் யூதன். வெவ்வேறுஜாதி. யூதருக்கும் சமாரியருக்கும் யாதொரு சம்பந்தமும் இருந்ததில்லை. முறைப்படி சமாரியர் யூதரால் தீட்டாகவும், தெய்வமற்றவர்களாயும் எண்ணப்பட்டார்கள். பிராமணனும் பறையனும் எப்படியோ அப்படியே யூதனை சமாரியன் தொடப்படாது. இதெல்லாம் இந்த சமாரியனுக்கு நன்றாய்த் தெரியும். ஒரு வேளை இந்த பிரயாணத்தில் யூதரால் இப்பேர்ப்பட்ட தொந்தரவுக் குட்பட்டிருந்தாலும் இருக்கலாம்.

இவையெல்லாம், இந்த ஏழை யூதனைக் காயப்பட்டவனாய்ப் பார்த்தவுடன், மறந்துவிட்டான். அவன் நோக்கமெல்லாம் கஷ்டப்படுகிற இவன் மேல் தான் இருந்தது. அவன்மேல் மனதுருகிக் கிட்டப்போய்க் காயம் கட்டினான். காயம் கட்டுவதற்கான சாமான் அவனிடம் இருந்திராது. ஒருவேளை தன் துணியில் கொஞ்சம் கிழித்துக்கட்டினானென்று. நினைக்கிறேன். காயத்தைச் சுத்தம் செய்யக் கூடியதும் வலியை ஆற்றக் கூடியதுமான, தன்னிடமுள்ள, எண்ணெய்யையும், திராக்ஷரசத்தையும் எடுத்துப் புண்களைக்கட்டினான்.



ஆனால் அவனைப் பத்திரமாய்ப் பராமரிக்கக்கூடிய இடத்துக்கு எப்படி கொண்டுபோவது? வண்டியில்லை. தன் சாமான்களைச் சுமக்கிற குதிரைதான் இருந்தது. என்னசெய்தான்? தன் தலையிலோ தோளிலோ சாமான்களை வைத்துக்கொண்டு, அக்குதிரையின்மேல் அவனை ஏற்றினான். ஒரு சத்திரத்துக்குப் போய்ச்சேர வெகு நேரமாயிற்று. இருட்டிப்போயிற்று. இருந்தாலும், நேரம் அவனுக்குப் பெரிய காரியமல்ல. அங்கேயே தங்கி இரவெல்லாம் அவனைக் கவலையாய்ப் பராமரித்தான். அதிகாலையில் தனக்காக மாத்திரமல்ல காயப்பட்ட மனிதனுக்காகவும் செலுத்தவேண்டியதைச் செலுத்தினதுமல்லாமல், இன்னும் இவனுக்காகச் செலவாகிறவைகளையும் திரும்பிவரும்பொழுது கொடுத்துவிடுவதாயும் வாக்களித்தான்.

* * *

இப்போது, என் சிநேகிதரே! இச்சந்தர்ப்பத்தில் நாம் ஒரு காரியத்தை அதிக நன்றாய்க் கவனிக்கவேண்டும்.

நியாயசாஸ்திரியின் கேள்வியென்ன? எப்பேர்ப்பட்டவர்களுக்கு நான் உதவிசெய்யவும், நேசிக்கவும் கடமைப்பட்டவன் என்பதே. இயேசுநாதரோ இந்த உவமையைச்சொல்லி நியாயசாஸ்திரியை என்ன கேட்டார்? கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு, இந்த மூன்றுபேர்களில், யார் அடுத்தவனாக உனக்குக் காண்கிறது என்பதே.

இந்த இரண்டு கேள்விகளுக்குமுள்ள வித்தியாசத்தை நீ எப்போதாவது சிந்தித்ததுண்டா?

நியாயசாஸ்திரி:—யார் எனக்கடுத்தவன். அதாவது: என்னிடத்தில் எப்பேர்ப்பட்டமனிதர் நியாயமாய் உதவிதேடலாம் என்று கேட்டான்.

இயேசுவோ:—நான் என்னையே எப்படி மற்றவர்களுக்கு அடுத்தவனாகக் காண்பிக்கலாம், காண்பிக்கக்கூடும்? அதாவது: மற்றவர்கள் உனக்கு அடுத்தவர்கள் அல்ல. இதற்குப்பதிலாக அன்பான எண்ணங்களாலும், அன்பான வார்த்தைகளாலும், அன்பான கிரியைகளாலும் நான் என்னாலானமட்டும் என்னை அதிகமானபேர்களுக்கு அடுத்தவனாக ஆக்கிக்கொள்ளப் பிரயாசப்படுவது கடமையாயிருக்கிறது.

இயேசுநாதர் நியாயசாஸ்திரியைக் கடைசியாகக் கேள்விகேட்கும் விதத்தை இன்னும் ஒருதரம் சிந்திப்போமாக. கள்ளர்கையில் அகப்பட்டவன் அந்த மூன்றுபேர்களில் யாருக்கு அடுத்தவன் என்று இயேசுநாதர் கேட்கவில்லை. இதற்குப்பதிலாக அவர் கேட்டதென்ன? கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேர்களில் எவன் அயலானாக உனக்குத் தோன்றுகிறான் என்று கேட்டார். மேலும் அத்தோடேசேர்த்து "நீயும் போய் அப்படியேசெய். போய் வழியில் எவ்விதத்திலும் உதவியும், நன்மையும் தேடுகிற யாவருக்கும் உன்னையே அயலானாகக் காண்பி" என்றார்.

இவ்விதமாய், யாதொரு சாக்குபோக்கில்லாமல், யாவருக்கும் அன்பைக்காட்டுவதே, வாஸ்தவத்தில், நித்திய ஜீவனுக்குக் கொண்டுபோகும் இடுக்கமான வாசலும், ஒடுக்கமான பாதையுமாம்.

இயேசுவைப் பார். அவர் நாளுக்குநாள் தன்னை ஒரு அன்புள்ள அயலானாக ஆக்கிக்கொண்டு வந்தார். அவர் போகும் பாதையில் வியாதியஸ்தர் அவரைச் சந்தித்தார்கள். அவர் அவர்களைச் சுகப்படுத்தினார். யார் யார் கேட்கப்பிரியப்பட்டார்களோ அவர்களுக்கெல்லாம் கடவுளுடைய இராச்சியத்தைப்பற்றிய சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாரே யல்லாமல், யார் யார் தகுதியுள்ளவர்கள் யார் யார் தகுதியற்றவர்கள் என்று பார்த்ததில்லை. கடவுள் எப்படி நல்லோர் பேரிலும் தீயோர் பேரிலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியர் பேரிலும் அநீதியர் பேரிலும் மழையை வருஷிக்கப்பண்ணுகிறாரோ, அப்படியே இயேசுவும் தமது அன்பின் சூரியனை யாவர்மேலும், எல்லா விதத்திலும், சிலுவையின் மரணபரியந்தம் பிரகாசிப்பித்து வந்தார்.

அவ்விதமே நாமும் மற்றவர்களுக்கு நம்மை உண்மையும் அன்புமான அயலகத்தாராகக் காட்டவேண்டும்.

* * *

கிறிஸ்துவின் திருச்சபை அப்படிசெய்யப் பிரயாசப்பட்டு வருகிறது. சுவீடன் தேசத்திலுள்ள கிறிஸ்துவின் திருச்சபையும், வெகு தூரத்திலுள்ள ஆப்பிரிகா, சீனா, இந்தியா தேசங்களுக்குத் தன்னை அடுத்தவனாக எண்ணுகிறது. நமது மிசியோன் வேலையினால் சுவீடன் தேசத்துக்கிறிஸ்துவின் திருச்சபை திருப்பத்தூர் ஆஸ்பத்திரிக்கு வரு



கிற ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கும், நமது பள்ளிக்கூடங்களிலும் ஆதரவுசாலைகளிலும் வாசிக்கிற ஆயிரக்கணக்கான மாணாக்கருக்கும், குழந்தை பரிபாலன விடுதிக்கு வருகிற எல்லாக் குழந்தைகளுக்கும் தன்னை அன்புள்ள அயலானாகக் காண்பிக்கிறது. தமிழ்ச் சுவிசேஷ லுத்தரன் திருச்சபையும் மிசியோனரிகளின் மூலமாய் ரீவா, ஜார் சுகுதா முதலிய தூரமான இடங்களிலுள்ள ஜனங்களுக்குத் தன்னை அன்புள்ள அயலானாகக் காட்டுகிறது.

ஆனால் திருச்சபை மாத்திரமல்ல கிறிஸ்துவின் ஒவ்வொரு சிஷனும், யாவருக்கும் அன்பின் அயலானாகத் தன்னை அனுதின ஜீவியத்தில் காட்டவேண்டும். விசேஷமாய் மற்றவர்களின் நன்மையைக் கருத வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் கிறிஸ்து நமக்குக் காட்டியவெளிச்சத்தில் நம்மையே சோதித்துப் பார்ப்போமாக. நித்தியஜீவனுக்குள் பிரவேசிக்கவும் அதைச் சுதந்தரிக்கவும் ஒன்றான வழி கடவுளையும் மனிதரையும் சிநேகிக்கும் சிநேகமே என்பதை மறவாதிருப்போமாக.

பசித்தவர்களுக்குப் போஜனம் கொடுத்தவர்களையும், தாகமுள்ளவர்களை தாகந் தீர்த்தவர்களையும், வஸ்திரமற்றவர்களுக்கு வஸ்திரம் கொடுத்தவர்களையும், வியாதிக்காரரைச் சந்தித்தவர்களுமாகிய அவர்களை இயேசுநாதர் ஒரு நாளில் பார்த்து:—என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகத்தோற்றமுதற்கொண்டு உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட நித்திய இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்பார்.

அப்பேர்ப்பட்ட சிநேகமே சுவிசேஷத்தை மிகுந்த ஆவலுடன் போதிக்கும் போதகன் என்னலாம். ஆதிச் சபையில் ஜனத்தை கிறிஸ்துவண்டை இழுத்தது எதுவென்று உனக்கு ஞாபகமிருக்கிறதா? கிறிஸ்தவர்கள் எங்கும் அதிகமதிகமாய்க் காட்டிய அன்பே. புறமதஸ்தர் கிறிஸ்தவர்களைக் கண்டு "கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் எவ்வளவாய் நேசிக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்" என்று சொல்லி வந்தார்கள்.

இன்றைக்கும், நம்மையும், மதுரைக்கிறிஸ்தவர்களெல்லாரை
பார்த்து அப்படிச் சொல்லக்கூடுமோ? உன் ஜீவியத்திலே கிரியை
யும் சிநேகம்தான் உன்னை நித்தியஜீவனை சுதந்தரித்துக்கொள்ள

ஷும், மற்றவர்களைக் கடவுளண்டை அதிகமதிகமாய் நெருங்கிச்சேர
வும் செய்கிறது.

ஆனால் அப்பேர்ப்பட்ட சிநேகம் உன் இருதயத்தில் எப்படி
வரும்? உன் இரக்ஷகராகிய கிறிஸ்துவண்டை வா. பரிசுத்த இராப்
போசனத்தில் விசேஷித்த விதமாக சந்திக்க அவரண்டை வா. அங்கே
தான் உன் இரக்ஷிப்புக்காக எப்படி அன்பினால் தமது ஜீவனை நமக்கா
கத்தத்தம் பண்ணினார் என்பதை விசேஷித்த விதமாக உனக்கு நினைப்
பூட்டுகிறார். தமது பரிசுத்த பீடத்தின் முன் உனக்கு முன்பாகத்
தமது கைகளை அன்பினால் நீட்டிக்கொண்டிருக்கிறார். அங்கே அவ
ரைச்சந்தி. அப்போது நீ உன் இருதயத்தில் சிநேகம் எத்தனை குறை
வாயிருக்கிறது என்பதை உணருவதுமல்லாமல் உன் சிநேகக்குறைவு
களை அவருக்கு முன் அறிக்கையிட்டு அவரிடமுள்ள சுத்த சிநேகத்
தைக் குளிர்ந்ததும், வெறுமையுமான உன் இருதயத்தில் ஊற்றும்படி
கெஞ்சுவாயாக. உனக்கு அப்படியே அவர் செய்வார். ஆமேன்.

## உலகப் பொருட்கள்.

(திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின 15-ம் ஞாயிறு.)

வேத வாக்கியம் : தீமோத்தேயு 4:4-8.

கடவுள் படைத்ததெல்லாம் நல்லதே; நன்றியறிதலோடு பெற்றுக்கொள்ளப்
படுமானால் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல;

அது தெய்வ வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படுகிறது.

இவைகளை நீ சகோதரருக்குச் சொல்லிக்கொண்டு வந்தால் விசுவாசத்திற்கும்
நீ அனுசரித்து வந்திருக்கிற நற்போதகத்திற்குமுரிய வார்த்தைகளால்
வளர்ந்து வந்த கிறிஸ்து இயேசுவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய்.

சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகித்தெய்வ
பக்தியை அப்பியாசித்துக்கொண்டிரு.

சரீரப்பியாசம் கொஞ்சத்திற்கே பிரயோஜனமுள்ளது; தெய்வபக்தியோ
எல்லாவற்றிற்கும் பிரயோஜனமுள்ளது, அது இந்த ஜீவனுக்கும் வரும்
ஜீவனுக்கும் வாக்குத்தத்தத்தையுடையது.



இப்போது பீடத்தின் முன் வாசிக்கப்பட்ட இன்றைக்காகக்
குறிக்கப்பட்ட பழைய சுவிசேஷவாக்கியம் "முதலாவது கடவு
ளுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்
போது இவையெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" என்ற
இயேசுவின் வார்த்தைகளோடு முடிகிறது. இவ்வார்த்தைகளை இயேசு
சீஷருக்குச் சொல்வதற்குமுன் இவ்வுலகக் காரியங்களினால் தங்களைக்
கஷ்டப்படுத்திக் கொள்ளாதபடி புத்திசொன்னார். அதாவது: எதை
உண்போம் எதைக்குடிப்போம் என்று உங்கள் உயிருக்காகவும், எதை
உடுப்போமென்று உங்கள் உடலுக்காகவும் கவலைப் படாதிருங்கள்
என்று சொன்னார். இன்னும் ஆகாசத்துப் பட்சிகளையும் வெளியில்
புஷ்பித்திருக்கும் லீலிய புஷ்பங்களையும் சீஷருக்கு எடுத்துக்காட்டி:
அவைகள் தங்கள் ஆகாரத்துக்காகவும் உடைக்காகவும் கவலைப்
படுவதற்கு முன்பே கடவுள் அவைகளுக்காகக் கவலைப்படுகிறார் என்
பதையும், ஆகையால் சீஷர் உலக காரியங்களில் அவைகளைப் பார்க்கி
லும் குறைவான கவலையுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பதையும்
எடுத்துக்காட்டி ஏவுகிறார். கடவுளுடைய இராச்சியத்தையும் அவ
ருடைய நீதியையுந் தேடுவதே கிறிஸ்தவனுடைய அதிமுக்கியமான
கவலையாயிருக்கவேண்டும். இவ்விதமாக ஒரு சீஷன் கடவுளுடைய
அன்பின்பேரில் முற்றிலும் சார்ந்து நடந்தால், அவனுடைய மற்ற
தேவைகளுக்காகக் கடவுள் கவலைப்படுவார் என்பதுக்குச் சந்தேக
மில்லை.

இயேசுவின் இவ்வார்த்தைகள் ஒரு கிறிஸ்தவன் உலக காரியங்
களைக் கவனிக்கவாவது கவலைப்படவாவது கூடாது என்ற எண்
ணத்தை நமக்குள் சுலபமாய் உண்டுபண்ணக் கூடியது. இயேசுவின்
சீஷர்களில் அநேகர் இவ்வுலகத்துக்குரியவைகளையெல்லாம் வெறுத்
துச் சந்நியாசமடங்களில் சேர்ந்து, கூடியமட்டும் இவ்வுலகத்தைவிட்டு
தனித்த அமைதலான ஜீவியம் செய்யக்கூடிய அந்த அளவுக்குப்
போயிருந்தார்கள்.

"முதலாவது கடவுளுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய
[illegible]யையும் தேடுங்கள்" என்று இயேசு சொல்லும்போது: நாம் உலக
[illegible]ங்களிலிருந்து நம்மைப் பிரித்துக் கொள்ளவாவது, அவைகளை

அசட்டை பண்ணவாவது சொல்லயில்லை. நாம் இவ்வுலகத்திலிருக்கும் மட்டும் எல்லா உலகப்பொருளையும் சரியான விதமாய்க் கையாடி இந்த விதமாய்க் கடவுளுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் நாம் தேடவேண்டுமென்று இயேசுநாதர் விரும்புகிறார்.

அப்: பவுல் தமது வாலிப சிநேகிதனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதிய முதல் நிருபத்திலுள்ள நமது வாக்கியத்தில் நமக்கு நினைப்பூட்டுவதும் இதுவே.

* * *

சிற்சில உலக காரியங்களைக் கவனித்துக் கவலைப்படாதபடிக்கு தங்களை அதிகப் பக்திமான்களாக எண்ணிக்கொள்ளுகிற மனுஷர் அக்காலப் பூர்வ திருச்சபையில் இருந்தார்கள். அவர்கள் தங்களுக்கு மாத்திரமல்ல மற்ற மனுஷருக்கும் சில சட்ட திட்டங்களை உண்டு பண்ண விரும்பினார்கள். அதாவது:—

விவாகம் செய்யக்கூடாது. விவாகம் கடவுளுக்குப் பிரியமில்லை. ஏனென்றால் குடும்பத்தையும் வீட்டையும் பரிபாலிப்பதற்குச் சம்பந்தமான அவசியமான கஷ்டநஷ்டங்களெல்லாம் கடவுளுக்குரிய காரியங்களை நன்றாய் நினைத்துத் தியானிப்பதற்குத் தடைகளாயிருக்கலாம்.

இதைஅதைச் சாப்பிட அல்லது குடிக்கக்கூடாது. இதை அதை விலக்குவது கடவுளுக்குப் பிரியமாயிருக்கிறது. ஏனெனில் அப்படிப்பட்ட ஆகாரம் அல்லது பானம் பக்திக்குரிய ஜீவியம் செய்ய விரும்புகிற மனுஷருக்குத் தகுதியுள்ளதாகக் காணப்படுகிறதில்லை என்று இவ்விதமாய் அவர்கள் போதித்து வந்தார்கள்.

அப்படிப்பட்ட போதனைகளுக்குச் செவிகொடுத்து, அப்பேர்ப்பட்ட நிந்தனைசெய்கிற ஆவிகளுடைய வார்த்தைகளையும் பவுல் அழைக்கிறவிதமாய்ப் பொய்யருடைய வார்த்தைகளையும் நம்பிக் கெட்டுப் போகாதபடி பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவையும் கிறிஸ்தவ சபைகளையும் பலமாய் இப்பொழுது எச்சரிக்க விரும்பமாயிருக்கிறான்.



நாம் இப்போது உலக காரியங்களைப்பற்றி அப்: பவுல் நமக்குச் சொல்லவிரும்புகிறது இன்னதென்று அறிந்து அதில் கவனஞ் செலுத்தப் பிரயாசப்படுவோமாக.

* * *

முதலாவது: உலகப்பொருட்கள் நல்லது. ஏனெனில் அவைகள் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவைகள் என்று நமக்குச் சொல்லுகிறான்.

ஒரு கிறிஸ்தவனுக்குக் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டயாவும் நல்லது; தள்ளும்படியானதொன்றுமில்லை, அல்லது தொடக்கூடாதது ஒன்றுமில்லை என்று அவன் சொல்லுகிறான்.

இந்த ஆகாரம் அந்த ஆகாரத்தைப் பார்க்கிலும் தன்னில் தானே பரிசுத்தமானது, மரக்கரி பதார்த்தம் மாமிசபதார்த்தத்தைப் பார்க்கிலும் அதிகப் பரிசுத்தமானது, விவாகமற்ற ஜீவியமானது விவாக ஜீவியத்தைப்பார்க்கிலும் கடவுளுடைய சித்தத்துக்கு அதிகப்பொருத்தமாயிருக்கிறது, தன் ஜீவியகால முழுவதும் தினசரி ஆகாரத்தைத் தானே வேலை செய்து சம்பாதிக்கிறதற்குப் பதிலாக மற்றவர்களால் போஷிக்கப்பட்டுச் சன்மார்க்க தியானத்திலேயே நிலைத்திருக்கிறவன் அதிக பக்திமான் என்ற இவ்விதமான காரியங்களை ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவன் ஒரு போதும் சொல்லமாட்டான்.

இயேசுவைப்போல, உலகத்துக்கடுத்த எந்தப் பொருளும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்றும், அவை மனுஷ ஜாதிக்குப் பிரயோசனமாகச் சிருஷ்டிக்கப்பட்டவை என்றும், நாமும் கவனிக்கும்படி பவுல் அப்போஸ்தலன் விரும்புகிறான். இயேசுகிறிஸ்து தாமே ஒரு விசை நமக்கு“ கடவுள் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கச்செய்து நீதியுள்ளவர்கள் மேலும் நீதியில்லாதவர்கள் மேலும் மழைபெய்யச் செய்கிறார்” என்று சொன்னார். ஆரம்ப முதல், இஸ்ரவேல் ஜாதியாரும், பிற்பாடு எல்லாக் கிறிஸ்தவர்களும் ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தின்படி உலகத்துக்கடுத்த எல்லாக் காரியங்களும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்ற தங்கள் பலத்த விசுவாசத்தையே வெளியிட்டார்கள். சிருஷ்டிப்பின் சரித்திரத்தில் எக்காலத்திலும் எல்லா மனுஷராலும் மதிக்கப்பட வேண்டிய அதிமுக்கியமான காரியம் என்னவென்றால், எல்லாவற்றுக்கும்

கடவுளே சிருஷ்டிகர் என்பதே. அதில் சொல்லப்பட்டவைகள் எந்த விதத்திலும், சாஸ்திர அறிவின் பிரகாரமாய், எப்படி சிருஷ்டிக்கப்பட்டது என்பதைச்சொல்ல அல்ல, ஆனல் எக்காலத்திலுமுள்ள எல்லாராலும் ஆகாயமும், சூரியனும், நக்ஷத்திரங்களும், கடலும், மரங்களும், மிருகங்களும் இவ்வுலகத்திலுள்ள எதுவும் கடவுளுடைய சிருஷ்டிப்பின் கிரியையின் நேரான பலனை நமக்குக் காட்டுவதற்காகவே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் கடவுளுடைய சிருஷ்டிப்பின் கிரியையானது சிருஷ்டிப்பின் 6-வது நாளோடு முடிந்துபோகவில்லை. இவ்வுலகத்தில் கடவுள் இன்னும் சிருஷ்டித்துக்கொண்டே யிருக்கிறார். இவ்வுலகத்தில் விர்த்தியாகி வருகிறது எதுவோ அதெல்லாம், எவ்வித நிலையிலிருக்கிறதோ அதெல்லாம், புதிதாய் ஏற்படுகிறவை எவையோ அவையெல்லாம், கடவுளுடைய சிருஷ்டிப்பாயிருக்கிறது என்று எண்ணப்படவேண்டும். ஆகையால் அவை நல்லவையா யிருக்கின்றனவென்று நினைக்கவேண்டும். எப்படியாகிலும், எல்லாம் நன்மைக்கென்றும் மனுஷஜாதியின் பிரயோசனத்திற்கென்றும் உதவுகிற கருவிகளா யிருக்கிறதென்றும் நாம் நம்பிக்கைக்கொள்ளவேண்டும். இவ்வுலகத்துக்கடுத்த ஒவ்வொன்றிலும் நாம் அவரைப்பற்றிக் கண்டடையவேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கிறார். ஆகையால் ஒவ்வொரு காரியமும் நன்மையானதென்றே நம்மால் மதிக்கப்படவேண்டும்.

*   *   *

எப்படியோ உலகப் பொருட்கள் அடிக்கடி தீமையான காரியங்களாக்.முடிகிறது உண்மை.

எந்த விதமான உணவையும் ஒரு மனிதன் அளவுகடந்தும் ஒழுங்குதவறியும் உபயோகிக்கும்போது, அது தீமையான பொருளாக மாறக்கூடும். நம்முடைய வம்சத்திலும், நமது கிறிஸ்தவ சபைகளிலும், மதுரையிலும் இன்னும் மற்ற இடங்களிலும் அநேகவிதமான பானங்களும் ஏராளமான தீமையை உண்டுபண்ணுகிறது. ஏனெனில் அவைகள் நமது மாமிச இச்சைகளை நிறைவேற்றுவதற்கென்று உபயோகிக்கப்படுகிறது. சமுசார வாழ்க்கையும், சந்நியாச வாழ்க்கையும் நம்மில் யாருக்கும் தீமையாக ஆகக்



கூடும். பணம் இவ்வுலகத்தில் பணக்காரருக்கு மாத்திரமல்ல, ஏழைகளுக்கும், பணமில்லாதவர்களுக்குங்கூட ஏராளமான தீமையை உண்டாக்குகிறதென்று நம்மெல்லாருக்கும் நன்றாய்த்தெரியும்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டு, நன்மைக்கென்று ஏற்பட்டிருக்கிற ஒவ்வொன்றும் பாவத்தோடு கலந்துபோயிற்று. ஆனபடியால் தன்னில் தானே நல்லதாயிருக்கிற இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொன்றும் நம்மெல்லாருக்கும் பெரிய சோதனையாக மாறக்கூடும். அதினல் அடிக்கடி அது தீமையான காரியமாக மாறுகிறது.

அதிக அழகும் நேர்த்தியுமான காரியங்களும் ஒரு மனிதனுக்கு அதிகக் கெடுதியானதாக மாறி அவனைக்கடவுளினின்றும்அவரது இராஜ்ஜியத்தினின்றும் பிரிக்கவும் கூடும். கடவுளுக்கும் மோட்சத்துக்கும் நேராக நம்மை உயர்த்திக்கொண்டு போகும்படி நமக்கு உதவியாகக் கடவுளால் ஏற்பட்டிருக்கிறவை நம்மைப் பாவக்குழியிலும், தீமையிலும் தள்ளவும் கூடும். நம்மை பாக்கியவான்களாக்கவும், ஐசுவரியவான்களாக்கவும், கடவுளால் ஏற்பட்டது எதுவோ, அது நம்மை மகா நிர்பாக்கியரும் ஆவியில் எளிமையுள்ளவர்களுமாக ஆக்கவும் கூடும். கடவுளால் நன்மையாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற இம்மைக்குரிய பொருட்களெல்லாம் வாஸ்தவமாகவே தீமையாக மாறவும் கூடும். அடிக்கடி மாறிக்கொண்டும் வருகிறது. நிச்சயமாகவே நாமெல்லாரும் எப்போதும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

*   *   *

அப்: பவுல், இன்றைக்கு விசேஷித்த விதமாய் இம்மைக்குரிய பொருட்கள் ஏன் நன்மைக்குப் பதிலாய் தீமையான காரியங்களாக அடிக்கடி மாறிக்கொண்டு வருகிறதென்பதற்கான ஒரு காரணத்தை நமக்கு எடுத்துக்கூறுகிறன். அவன் சொல்வதாவது: எல்லாம் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது. ஆகையால் நல்லதாயிருக்கிறது. அது நன்றியறிந்த ஸ்தோத்திரத்தோடும், அதில் கடவுளேயே ஒரு ஈவாகப் பெறுகிறோம் என்கிற எண்ணத்தோடும் பெற்றுக்கொள்ளப்பட்டால், ஒன்றும் தள்ளுபடியானதல்ல என்று சொல்லுகிறன்.

இப்பூமியிலுள்ள எதானுலும், எவ்வளவு அழகுவாய்ந்ததும் [illegible]க்தியானதுமாயிருந்தாலும், அது கடவுளுடைய ஈவாக ஏற்றுக்

கொள்ளப்படாவிட்டாலும், சிருஷ்டிகரும் பிதாவுமாகிய கடவுளுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரத்தோடு ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் நம்மெல்லாருக்கும் அது கட்டாயமாய் தீமையாகவே மாறவேண்டும். ஏன்?

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும் மனிதனால் சிருஷ்டிக்கர்த்தாவாகிய அவரோடேகூட ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவரால் சிருஷ்டிக்கப்பட்ட பொருட்களிலிருந்து சிருஷ்டிகர் தள்ளப்பட்டால், இந்தப்பொருட்கள் ஒரு போதும் நல்லதாக இருக்க முடியாது. சிருஷ்டிகராகிய அவர் தாமே ஓயாமல், நாள்தோறும் ஒவ்வொன்றையும் நல்லதாக்குகிறார். எப்படி? அவரால் சிருஷ்டிக்கப்பட்ட பொருட்களிலிருந்து எதுவரையில் அவரைப் பிரிக்காமல் இருக்கிறானோ அதுவரையில், எதுவரையில் மனிதன் இவைகளின் மூலமாய் அவரையே ஈவாக ஏற்றுக்கொள்ளுகிறானோ, அதுவரையிலும், பெற்றுக்கொள்கிறவர்கள் எதுவரையில் அவருக்கு நன்றியையும் புகழ்ச்சியையும் செலுத்துகிறார்களோ அதுவரையிலும், கடவுள் ஒவ்வொன்றையும் நல்லதாக்குகிறார். இவ்வுலகப் பொருட்கள் எதுவானாலும் அவைகளைக் கடவுளுடைய ஈவாக நாம் ஏற்றுக்கொண்டால் மாத்திரம், அவை நம்மால் சிருஷ்டிகரின் சித்தத்துக்குப் பொருந்திய விதமாய்ப் பிரயோகிக்கப்படும். அந்த ஒரே நிபந்தனையினால் மாத்திரம் அவை நமக்குப் பிரயோசனமான வழியில் உதவக் கூடும். அப்போது தான் உலகக் காரியங்களினால் சம்பந்தமான சோதனைகளை நாம் மேற்கொள்ளக்கூடியவர்களாயிருப்போம்.

ஒரு மனிதனுக்கு ஏராளமான தீமைகளை உண்டுபண்ணுகிறதும் அவனைக் கடவுளுடைய ஐக்கியத்திலிருந்து பிரிக்கிறதுமான ஒரு உலகப்பொருளும் இருக்கலாம். ஆனால் இன்னொரு மனிதனுக்கோ அந்த இதே உலகப்பொருளினாலே ஏராளமான நன்மை யுண்டாகிறதல்லாமல், அவனைக் கடவுளுடைய ஐக்கியத்தில் கொண்டு வந்து சேர்க்கிற அற்புதமான கருவியாயுமிருக்கலாம். இது எப்படிக்கூடும்?

முதல் மனிதன் அந்த உலகப்பொருளில் சிருஷ்டிகரையே அறியாமல் அதைத் தன் சொந்தப்பொருளாகப் பாவித்துத் தன் சுயசித்தத்துக்கும், இன்பத்துக்கும், ஆசை இச்சைகளுக்கும் கருவியா[illegible]



கொள்ளுகிறான். மற்றவன் அதே பொருளைக்கடவுளால் தன் நம்பிக்கைக்கு ஒப்புவிக்கப்பட்ட ஈவாகப்பெற்றுக்கொண்டு, அந்த உத்திரவாதத்தோடும் சிருஷ்டிகரின் சித்தத்துக்குப் பொருந்தின விதமாயும் உபயோகிக்கிறான்.

உலகப்பொருட்களெல்லாம், எதுவாயிருந்தாலும், அவை நமக்கு நன்மைக்குப் பலிக்கும்படியாக ஏற்பட்டது.

ஆனால் நாம் அவைகளைக் கடவுளுடைய ஈவாக எண்ணிப் பெற்றுக்கொண்டு, அவைகளுக்காகக் கடவுளுக்கு ஸ்தோத்திரத்தையும் புகழ்ச்சியையும் செலுத்தாவிட்டால், கட்டாயமாய் அவை தீமையாக மாறும்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதெல்லாம் தெய்வ வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படவேண்டும் என்று அப்:பவுல் சொல்லும்போது முன்பு சொன்ன அந்தக்காரியத்தையே அழுத்திப் பேசுகிறான். இப்படி இந்த விதமாய்ப் பரிசுத்தமாக்கப்படுகிற ஒவ்வொரு உலகப்பொருளும் நிச்சயமாகவே நன்மையானதாக ஆகும்.

இவ்வுலகத்தின் பொருட்களைக் கடவுள் நன்மைக்கென்றும் மனுஷஜாதியின் பிரயோசனத்திற்கென்றும் படைத்தார். ஆனால் பாவம் உலகத்தில் புகுந்து, கடவுளுடைய சிருஷ்டியைக் கெடுக்கப்பிரயாசைப்பட்டு, நன்மைக்கென்று ஏற்பட்டிருக்கிற ஒவ்வொன்றையும் தீமையாக மாற்றுகிறது. கடவுள் தாமே தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்தில் பூமிக்குரிய வீட்டில் பிறக்கச்செய்து, அவரை இவ்வுலகமனிதரோடு ஜீவிக்கச்செய்து, இந்தவிதமாய் இப்பூமிக்கடுத்த எல்லாவற்றையும் ஆச்சரியமான விதமாய்ப் பரிசுத்தமாக்க விரும்பிப் பிரயாசப்பட்டிருக்கிறார். இயேசுகிறிஸ்து வாஸ்தவமாகவே கடவுளுடைய ஜீவனுள்ள வார்த்தையாயிருக்கிறார். அதினாலே தான் இவ்வுலகத்துக்குரிய ஒவ்வொன்றும் பரிசுத்தமாக்கப்பட்டு நன்மையாக்கப்பட முடியும். இவ்வுலகத்துக்குரியதெல்லாம், எதுவானாலும் சரி, நாம் அதை இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வரும் கடவுளுடைய ஈவாக ஏற்றுக்கொண்டால்மட்டும், நமக்கு நன்மையாகப் பலிக்கும். எவ்வளவுக்கு அதிகமாக நாம் அதை அவ்விதமாய் என் [illegible] பெறுகிறோமோ, அவ்வளவுக்கதிகமாய் நன்மையாக மாறும்.

இயேசுகிறிஸ்து தாமே பல தரமும் உலகப்பொருட்களை ஆச்சரியமானவிதமாய்ப் பரிசுத்தப்படுத்தி, அவைகளை மனிதருக்கு ஆசீர்வாதமாக மாற்றினதை நாம் இச்சமயத்தில் நினைவு கூர மறவாதிருப்போமாக.

இயேசுநாதர் ஒரு தரம் கலியாண விருந்தின்போது தண்ணீரைத் திராக்ஷரசமாக்கி, அதினால் அவ்வீட்டிலுள்ள ஜனங்களையெல்லாம் பெரிய ஆபத்திலிருந்து மீட்டு அவர்களது சந்தோஷத்தை அதிகரிக்கச் செய்ததுபோலவே, இப்போதும் இன்னும் இவ்வுலகப் பொருட்களை ஆச்சரியமான விதமாய் ஆசீர்வாதமாக மாற்றவும், அதனால் நம்மெல்லாருக்கும் சந்தோஷத்தையும் பாக்கியத்தையும் அதிகரிக்கச் செய்யவும் கூடியவராயிருக்கிறார்.

இப்படி இயேசுகிறிஸ்து உலகப் பொருட்களைப் பரிசுத்தமாகவும் நம்மெல்லாருக்கும் ஏராளமான ஆசீர்வாதமுள்ளதாகவும் மாற்றின அழகும், இருதயத்தைத் தொடக்கூடியதுமான திருஷ்டாந்தங்களை நாம் இங்கே எடுத்துச் சொல்லக்கூடும்.

பரிசுத்த ஞானஸ்நானத்தில் உபயோகிக்கப்படுகிற தண்ணீரை மறுஜனன முழுக்குக்கென்றும், பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலுக்கென்றும் சிருஷ்டித்தார் (தீத்து 3:5).—பரிசுத்த திருவிருந்தில் உபயோகிக்கப்படுகிற அப்பமும் இரசமும் பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தையும் பாவமன்னிப்புக்கென்று சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தையும் அறிவிக்கிற சுவிசேஷகராக அவரால் ஆச்சரியமான விதமாய் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியே அவரது பிரசன்னத்தின் மூலமாய் நமது தினசரி ஜீவியத்தின் சம்பந்தமான எந்த வஸ்துவையும் எந்தக் காரியத்தையும் நமக்கு ஆசீர்வாதமாக மாற்றவும், பரிசுத்தப்படுத்தவும், அவரால்கூடும். ஐசுவரியமோ எளிமைத்தனமோ, சுகமோ வியாதியோ, வெற்றியோ தோல்வியோ, பெலமோ பெலவீனமோ, பாக்கியமோ நிர்பாக்கியமோ, எதுவானாலும் அவரால் அவை நமக்கு நன்மைக்கென்றும் பிரயோசனத்திற்கென்றும் பரிசுத்தமாகக் கூடும்.

பவுல் அப்:லனும் கூட "ஜெபத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டதெல்லாம் நன்மையாகும்; ஆகையால் ஒன்றும் தள்ளுபடியானதல்ல" என்று சொல்லுகிறான். கடவுளுடைய சமுகத்திலும் ஐக்கியத்திலும் ஜீவிக்கிற ஒரு மனுஷன் நிச்சயமாய் ஜெபிக்கிற மனிதனாகவே இருக்கிறான். ஜெபிக்கிற மனிதன் எப்போதும் தன் சிறுமையை உணருவான். அப்படி உணருகிறவன் இயல்பாய்த், தான் எல்லாவற்றையும் கடவுளுடைய சுத்தக் கிருபையினால் பெற்றுக்கொள்ளுகிறதாக உணருவான். இவ்வுலகத்துக்குரிய எதையும் கடவுளுடைய ஈவாகப் பெற்றுக்கொள்ளும்படியாக ஜெபத்தைத் தவிர வேறெதுவும் நமக்குப் பிரயோசனமாயிராது. அதற்காக நாம் நமது நன்றியறிந்த ஸ்தோத்திரத்தைச் செலுத்தாதிருக்கவும் முடியாது. இந்த விதமாய்த்தான் ஒவ்வொன்றும் நமக்கு நன்மையாக மாறுகிறது. இயேசுநாதர் தமது ஜெபத்தின் மூலமாயும் ஸ்தோத்திரத்தின் மூலமாயும் ஐந்து அப்பங்களையும் இரண்டு சிறிய மீன்களையும் 5,000-த்துக்கு மேலான ஜனங்களுக்குப் போதுமானதாக ஆக்கினதை நினைவுகூறுவோமாக. இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீஷன் ஒவ்வொருவனும், தினமும், பல விதமாய், இதைப்போலொத்த எந்தக் காரியமும், அது ஜெபத்தின் மூலமாய்த் தனக்குப் பரிசுத்தமாக்கப்பட்டு நன்மையாகவும் ஏராளமான ஆசீவாதமாகவும் மாறுகிறதை அநுபோகச் சித்தாந்தமாய் உணரக்கூடும்.



ஒருவன் இயேசுவின் உண்மையான சீஷனாயிருந்து இந்த விதமாய் உலகத்துக்குரிய எந்தப்பொருளையும் இம்மைக்குரிய தன்னுடைய ஜீவியத்தின் எந்தக்காரியத்தையும் பிரயோகித்தால், கடவுளுடைய இராஜ்ஜியம் அதிகமதிகமாய் அவனுடைய இருதயத்திலும் அவனைச்சுற்றிலும் ஸ்தாபிக்கப்படுகிறதையும் அநுபவத்தால், கண்டறிகிறதுமல்லாமல் கடவுளுடைய நீதியையும் அதிகமதிகமாய்க் கண்டடைவான்.

உலகப்பொருட்கள் எல்லாம் இயேசுவின் உண்மையான சீஷனுக்கு வாஸ்தவமாய் நல்ல உலகப்பொருட்களாய் மாறக்கூடும்.

அப்போஸ்தலனாகிய பவுல் நமது வாக்[illegible] மூலமாய் இன்னும் ஒரு காரியத்தையும் கடைசியாக நமக்குக்கூட்டுகிறான். அதாவது: தெய்வபக்தியோ எல்லாவற்றிற்கும் பிரயோசனமாயிருந்து இச்சிவனுக்கும் வருஞ்ஜீவனுக்கும் வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறது என்கிறான். ...கருடைய வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்பட்டு

ஸ்தோத்திரத்தோடு பெற்றுக்கொள்ளப்படுகிற எந்த உலகப்பொருளும் வாஸ்தவமாகவே இம்மைக்குரிய நல்ல பொருளாக மாறுவதுமல்லாமல் மறுமைக்குரிய மதிப்பைப் பெற்றதாகவும் மாறக்கூடும்.

உலகப்பொருட்கள், வாஸ்தவமாய்ப் பரலோக பொக்கிஷமாக மாறக்கூடும். அதைப் பூச்சியும் பொட்டும் துருவும் அழிக்கமுடியாது. இன்னும் அதை எத்தகைய திருடர் கொள்ளையிடவும் முடியாது.

ஆண்டவரே! நாங்கள் எல்லாரும் இந்த விதமாய் உலகக்காரியங்களோடு புழங்கவும், அதினாலே அவை எங்களுக்கு இச்சீவனிலும் வருஞ்சீவனிலும் இலாபமாக பலிக்கவும், இந்த விதமாய்க் கடவுளுடைய இராஜ்ஜியம் வாஸ்தவமாய் ஸ்தாபிக்கப்படவும், கடவுளுடைய நீதியை நாங்கள் பூரணமாய்க் கண்டடையவும் கிருபை புரிந்தருளும்.

ஆமேன்.

---

## கடவுளுக்குப் பிரியமான விசுவாசம்.

(திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின 18-ம் ஞாயிறு.)

---

வேத வாக்கியம்: எபிரேயர் 10:38-11:6

என் நீதிமானோ விசுவாசத்தால் பிழைப்பான். பின்வாங்கிப் போவானேயாகில் அவனில் என் ஆத்துமா பிரியங்கொள்ளாது.

நாமோ கெட்டுப்போகப்பின் வாங்குகிறவர்களல்ல, ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களே.

விசுவாசமானது எதிர்நோக்கி ஆசிக்கிறவைகளில் நமக்கு உறுதி, காணப்படாதவைகளில் நமக்கு நிச்சயம்,

இதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்.

காணப்படுகிறவைகள் கண்ணுக்குத் தோன்றுகிறவைகளால் உண்டாகவில்லை … விதமாக உலகங்கள் கடவுளின் வார்த்தையினால் அமைக்கப்பட்டனவென்று நாம் விசுவாசத்தினாலே உணர்ந்து கொள்ளுகிறோம்.

விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியைக் கடவுளுக்குச் செலுத்தினான்; அவன் நீதிமானென்று அதினாலே சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைப்பற்றிக் கடவுளே சாட்சி



225888

கொடுத்தார். அவன் மரித்தும் அந்த விசுவாசத்தினாலே இன்னும் பேசுகிறான்.

விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடி எடுத்துக்கொள்ளப்பட்டான்; கடவுள் அவனை எடுத்துக் கொண்டபடியினால் அவன் காணப்படாமற்போனான்; அவன் கடவுளுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான்.

விசுவாசமில்லாமல் கடவுளுக்குப் பிரியமாயிருப்பது அசாத்தியம். கடவுளினிடம் அண்டி வருகிறவன் அவர் இருக்கிறாரென்றும் அவர் தம்மை ஆவலாய்த் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறாரென்றும் நம்பவேண்டுமே.

---

1. "விசுவாசமில்லாமல் கடவுளுக்குப் பிரியமாயிருப்பது அசாத்தியம்" என்று நமது வாக்கியத்தின் கடைசியில் வாசிக்கிறோம்.

கடவுளின் பேரிலுள்ள தேட்டம் மனுஷருடைய இருதயத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. நாம் எல்லாரும் கடவுளைப் பிரியப்படுத்த விரும்புகிறோம். கடவுள், எப்படியோ, தன்பேரில் பிரியமாயிருக்கிறார் என்பதை ஒரு மனுஷன் உணர்ந்தாலொழிய அவனுக்குள் மனச்சமாதானமும் ஏற்படாது. பூர்வ திருச்சபையின் தகப்பனாகிய பெரிய அகுஸ்தீன் என்பவர் ஒரு தரம் "ஆ கடவுளே! எங்களை உமக்காக சிருஷ்டித்திருக்கிறீர். எங்கள் இருதயமோ உம்மில் இளைப்பாறுதலை அடையும் வரையில் தாகமாயிருக்கிறது" என்று சொன்னான். இதனால் உலக முழுவதும் எக்காலத்திலுமுள்ள ஜனம் இதை அனுபவத்தால் அறிந்து கொண்டது என்பதையும், அனுபவித்து வருகிறது என்பதையும் சுருக்கமாய்க் காண்பிக்கிறார்.

இயேசுவின் போதனைகளைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த …ளுடைய கூட்டத்தைப்பற்றி ஒரு வேளை அறிந்திருப்பாய். அவர் ஒரு பெரிய போதகன் என்றும், அவர்களது ஆழமும் முக்கியமுமான கேள்விகளுக்கு உத்தரவு சொல்லவும் அவரால் கூடும் என்றும் அவர்கள் அறிந்தார்கள். ஆகையால் "கடவுளின் சித்தத்திற்கிசைய …ப்பதற்கு நாங்கள் செய்ய வேண்டுவது என்ன" என்றும் கடவு…க்குப் பிரியமானது எது வென்றும் அவரைக் கேட்டார்கள்

(யோவான் 6:28). கடவுளைப் பிரியப்படுத்துவது எப்படி என்பதே அவர்களின் அதிக முக்கியமான கவலை.

இந்தியாவில் எங்கும் ஏராளமான தேவாலயங்களைப் பார்க்கிறோம். பஜனைக் கோஷ்டியோடும் பெரிய ஊர்வலங்களோடும் பெரிய திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றது. ஆயிரமாயிரக் கணக்காய் ஜனங்கள் தங்கள் காணிக்கையோடு வந்து கூடுகிறார்கள். ஏன்? கடவுளைப் பிரியப்படுத்துவதற்காகத்தான். கடவுளுக்குப் பிரியமான காரியங்களைச் செய்யத்தான். எப்படியோ கடவுளுடைய தயவைச் சம்பாதிக்க வேண்டுமென்று பிரயாசைப்படுகிறார்கள். தங்கள் யாத்திரைகள், தங்கள் காணிக்கைகள், ஸ்நானங்கள் முதலியவைகளினால் இப்படிச் செய்யமுடியும் என்று எண்ணுகிறார்கள். இப்படியாகக் கடவுளைப் பிரியப்படுத்த விரும்புகிறார்கள் என்று நினைக்கிறேன்.

இந்தியாவில் பொதுவாய் கிறிஸ்தவர்களைப் பார்க்கிலும் இன்னும் உத்தான கிறிஸ்தவர்களைப் பார்க்கிலும் புறமதஸ்தர்தான் கடவுளுக்குப் பிரீதியாய் நடக்க ஆவலாயிருக்கிறார்கள் என்பதை நான் அடிக்கடி உணர்ந்ததுண்டு. கிறிஸ்தவர்களைவிட புறமதஸ்தர்தான் கடவுளுடைய கிருபையையும் தயவையும் சம்பாதிக்கும்படியாகப் பலிகளைச்செய்வதில் உண்மையாயிருந்து தங்களுக்குக் கஷ்டத்தையும் இடையூறுகளையும் உண்டுபண்ணிக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய மார்க்க ஜீவியம் குறைவுள்ளதாயிருந்தாலும் கிறிஸ்தவர்களாகிய நாம் அவர்களிடத்திலும், அவர்களுடைய மார்க்க ஜீவியத்திலிருந்தும் கற்றுக் கொள்ளவேண்டியவர்களாயுமிருக்கிறோம். நாம் எல்லாரும் கடவுளைப் பிரியப்படுத்தவேண்டும் என்று அவர் விரும்புகிறார். நமது இருதயத்தின் ஆழத்தில் கடவுளைப் பிரியப்படுத்த வேண்டுமென்ற அவா இருக்கிறது. நாம் அதை அலட்சியஞ் செய்யக்கூடாது.

* * *

2. “விசுவாசமில்லாமல் கடவுளுக்குப் பிரியமாயிருப்பது அசாத்தியம்” என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான்.

400 வருஷங்களுக்குமுன் வசித்த ஒரு வாலிபனை நான் நினைக்கிறேன். அவன் சர்வகலாசாலையில் வாசித்தவன். அவன் B. A. பாஸ்பண்ணினவன். அவன் தத்துவ சாஸ்திரத்தில் நிபுணன் என்ற பட்டம்பெற்றவன். இன்னும் அதிகம் படிக்க ஆவலாயிருந்தான்.



வர வர அவன் இருதயத்திலே எழும்பிய, வெகு முக்கியமாய்த் தோன்றின, ஒரு விசேஷித்த கேள்வி இருந்தது. அதாவது: கடவுளைச் சந்திக்க நான் ஆயத்தமாயிருக்கிறேனா? கடூர நியாயாதிபதியாகிய கடவுள் தம்மைப் பிரியப்படுத்துகிறவனாக என்னைக் கண்டுபிடிப்பாரோ? இக்கேள்விக்கு விடைசொல்லாமல் இருக்க அவனால் முடியவில்லை. விசேஷமாய் அவன் ஒரு நாள் தன்னைப்பட்டாக்கத்தியினால் சேதப்படுத்திக்கொண்டு மரணத்துக்குச் சமீபமாயிருந்தபோதும், தனது ஊரில் கொள்ளைநோய் அதிகமாகித் தனது சிநேகிதரிலும் மாணாக்கரிலும் பலர் செத்துப்போனபோதும், கடவுள் என்னை அழைக்கையில் அவரைச் சந்திக்கக்கூடிய பிரீதியாய் இருக்கின்றேனா? என்ற கேள்விக்கு விடை சொல்லாமலிருக்க முடியாதவனாயிருந்தான்.

மேலும், ஒரு நாள் பயங்கரமான மின்னல் மின்னி இடிவிழுந்தது. அப்போது மோட்சலோகத்தின் கொடூர நியாயாதிபதியாகிய கடவுளுடைய பிரசன்னத்தை உணர்ந்ததுமல்லாமல் மனிதன் கடவுளுக்குப் பிரீதியாயிருக்க வேண்டியதின் அவசியத்தையும் விசேஷித்த விதமாய் உணர்ந்தான். தன் காலத்தில் கடவுளுக்கு அதிகப் பிரீதியாயிருந்ததாக எதை எண்ணினார்களோ அதையே செய்வதாகப் பிரதிக்கினை செய்துகொண்டான். சந்நியாச மடத்தில் பிரவேசிப்பதாக வாக்குறுதி செய்துகொண்டான். அப்படியே சந்நியாசியானான். அவன் கடவுளுடைய பிரியத்தைச் சம்பாதிக்கும்படியாக, சந்நியாசி சரீரத்தை அடக்குவதற்குச் செய்யவேண்டிய கிரியைகளையெல்லாம் மற்ற சந்நியாசிகளைப் பார்க்கிலும் அவ்வளவு திட்டமாயும் உண்மையாயும் செய்துவந்தான்.

ஆனால் எல்லாம் வீணாகத் தோன்றிற்று. எவ்வளவுக்கு அதிகமாகத் தன்னையே அடக்கி நற்கிரியைகளைச் செய்துவந்தானோ, அவ்வளவு குறைவாகத் தான் கடவுளுக்குப் பிரீதியாயிருப்பதைக் கண்டான். எதைச்செய்தாலும் தன்னைச் சுற்றியுள்ள கடவுளுடைய கோபாக்கினையைத்தான் கண்டுணர்ந்தான். கடவுளுடைய கிருபையை அல்ல, கோபாக்கினையைத்தான் உணர்ந்தான். அவன் கடவுளைத் [illegible]மை எவனும் பிரியப்படுத்தக்கூடாத கொடூர நியாயாதிபதியாக மாத்[illegible]ம் கண்டான்,

கடவுளுடைய பிரீதியைத் தேடி அடையாத இந்த ஏழை சந்நியாசியின் பேர் நம்மெல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். அவனது பேர் மார்ட்டின் லுத்தர்.

சந்நியாச மடத்தில் அவன் வேதசாஸ்திரம் படித்தான். அப்போது சத்தியவேதத்தை, விசேஷமாய்ப் புதிய ஏற்பாட்டை அதிகக் கவனமாயும் ஜாக்கிரதையாயும் படித்தான். ஒரு நாள் ரோமர் நிருபத்தின் முதல் அதிகாரம் 17-ம் வசனத்தில், நமது வாக்கியத்திலுள்ள மூதல் வசனமாகிய "நீதிமானே விசுவாசத்தால் பிழைப்பான்" என்ற வசனத்தை வாசித்தான். அவ்வசனத்தையே யோசித்துத், தியானம் செய்துகொண்டான். இப்படி அநேக வருஷம் செய்தான். கடவுளுக்குப் பிரீதியுண்டாக்கும்படி தான் இத்தனை வருஷமாகச் சென்ற பாதை தப்பிதமானது என்று கொஞ்சம் கொஞ்சமாகக் கண்டு கொண்டான். அவனது மார்க்க வைராக்கியம் உண்மையானது. மெய்யாகவே நம்மில் எவரையும் பார்க்க அவன் வைராக்கியமுடையவனாயிருந்தான். ஆனால், அவன்சென்றபாதை தப்பிதமான பாதையாயிருந்ததுமல்லாமல் அவனை அதிகமதிகமாய்த் துன்பத்தின் ஆழத்தில் கொண்டுபோனது. அவன் கடவுளைக் கோபாவேஷம்பூண்ட கொடூர நியாயாதிபதியாக மாத்திரம் கண்டறிந்தான். ஆனால் இப்போதோ விசுவாசமில்லாமல் கடவுளுக்குப் பிரியமாயிருப்பது அசாத்தியம் என்பது உண்மைதான் என்று கண்டு கொண்டான்.

அதன் அர்த்தம் என்ன? கடவுளைப் பிரியப்படுத்துவதற்கு இன்றியமையாச் சாதனமாகிய விசுவாசத்தின் அர்த்தம் என்ன என்ற கேள்வியை முதல் முதல் கேட்போமாக.

* * *

3. விசுவாசம் என்றால் என்ன? "விசுவாசமானது எதிர்நோக்கி ஆசிக்கிறவைகளில் நமக்கு உறுதி, காணப்படாதவைகளில் ...க்கு நிச்சயம்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். விசுவாசத்தைப்பற்றியும்; ...... கிறிஸ்தவ விசுவாசத்தைப்பற்றியும் சொல்லக்கூடியதெல்லாம் இதிலே சொல்லப்பட்டதில்லை. இப்படி இருந்தாலும், இவ்வார்த்தை விசுவாசத்தைப்பற்றிக் கொஞ்ச மாத்திரமல்ல, பிரதானமான காரியத்தைச் சொல்லுகிறது. ஆம், இரண்டு பிரதான காரியங்களைச் சொல்லுகிறது.



முதலாவது: விசுவாசமானது மனிதனின் உள்ளான ஜீவியத்துக்கடுத்ததும்; சரீரக்கண்களால் பார்க்கக் கூடாததுமாயிருக்கிறது. இங்கேதான் கிரியைக்கும் விசுவாசத்துக்குமுள்ள வித்தியாசத்தை நீ பார்க்கிறாய். கிரியைகள் வெளியரங்கமானதாயிருக்கலாம். சில சமயங்களில் அவை புறம்பான காரியங்களாகவே இருக்கிறது. விசுவாசமோ உள்ளான காரியமாயிருக்கிறது. அது இருதயத்தின் ஒரு பொருளாயிருக்கிறது. இருதயத்தின் சம்பந்தமில்லாமலே நீ அநேக கிரியைகளைச் செய்யக்கூடும். இன்னும் அற்புதமும் ஆச்சரியமுமான கிரியைகளையும் செய்யக்கூடும். ஆனால் விசுவாசத்தை—கடவுளைப் பிரியப்படுத்தக்கூடிய விசுவாசத்தை ஆகிலும்—உன் முழு இருதயத்தின் சம்பந்தமின்றி காட்டமுடியாது.

இரண்டாவது: விசுவாசமானது உள்ளான ஒரு காரியமாய் அல்லது இருதயத்தின் ஒரு பொருளாய் மாத்திரமிருந்தாலும், எப்படியோ வாஸ்தவமான ஒரு பொருளாயிருக்கிறது. "காணப்படாதவைகளில் நமக்கு நிச்சயமாயிருக்கிறதென்று" அப்போஸ்தலன் சொல்லுகிறான். அப்படி, உள்ளானதும் இருதயத்துக்கடுத்ததுமான பொருளாகிய விசுவாசம், சரீரக் கண்களால் பார்க்கக்கூடியதும் வெளியரங்கமான கிரியைகளைப் போலொத்ததுமான வாஸ்தவமான ஒரு பொருளாய் இருக்கிறதென்று நாம் மறக்கக்கூடாது.

அப்போஸ்தலன் கடவுளுக்குப் பிரியமான விசுவாசத்தைக் குறித்து விஸ்தரிக்கையில் எபிரேயர் நிருபத்தின் 11-ம் அதிகாரம் முழுவதிலும் திருஷ்டாந்தங்களைப் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துக்காட்டுகிறான். நமது வாக்கியத்தில் இரண்டு பெயர்கள் சொல்லப்படுகிறது. எந்த பெயர்கள் என்று கேட்டால், ஆபேல், ஏனோக் என்பதே. கிறிஸ்தவ விசுவாசத்தின் தன்மை இன்னதென்று கொஞ்சமாவது நாம் அறிந்துகொள்வதற்கு இந்தத் திருஷ்டாந்தங்கள் உதவியாயிருக்கிறது. கிறிஸ்தவ விசுவாசத்தை, அதின் எல்லா நிறைவோடும் தெளிவோடும், நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கக் கூடாவிட்டாலும் புதிய ஏற்பாட்டில் நாம் அறிகிறோம். எப்படியோ கொஞ்சமா[redacted]ருந்தாலும் முக்கியமானதை நாம் பழைய ஏற்பாட்டிலும் காண[redacted]றோம்.

௨. காயீன் ஆபேல் என்றவர்களின் பழைய சரித்திரத்தையும் அவர்கள் காணிக்கையையும் நாம் நினைத்து வாசிக்கையில், ஆபேலின் காணிக்கை கடவுளுக்குப் பிரியமாயிருந்ததாகவும் காயீனின் காணிக்கை கடவுளுக்கு வெறுப்பாயிருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏன்? ஆபேல் ஆட்டையும் காயீன் பழங்களையும் கொண்டுவந்ததினாலோ? இல்லை, இல்லை. கதையில் சொல்லப்பட்டபடி, காயீனின் காணிக்கை கடவுளுடைய தயவைத் தனக்காகவே சம்பாதிக்கவும் தனக்கு சுயமேன்மையைச் சம்பாதிக்கவே கொண்டுவரப்பட்டது என்பதை நாம் அறிகிறோம். அப்பேர்ப்பட்ட காணிக்கைகள் ஒருபோதும் கடவுளுக்குப் பிரீதியானதல்ல. இவைகள் இருதயத்தின் விசுவாசத்தோடு சம்பந்தப்படாத வெளியரங்கமான கிரியைகளாய் மாத்திரம் இருக்கிறது. ஆனால் ஆபேலின் காணிக்கையோ தன்னையே கடவுளுக்கு விசுவாசத்தினாலும் நம்பிக்கையினாலும் ஒப்புக்கொடுத்துத் தத்தம் செய்வதற்கு அடையாளமாய் இருந்தது. இருதயத்திலிருந்து வரும் விசுவாசத்தோடு சம்பந்தப்பட்ட அப்பேர்ப்பட்ட காணிக்கைகளோ கர்த்தருக்குப் பிரியமாயிருக்கிறது.

இப்பொழுது விசுவாசமாவது என்னவென்று நாம் சற்று நன்றாய் அறிந்துகொண்டோம். கடவுள் பேரிலுள்ள நம்பிக்கைதான் விசுவாசம். அது கடவுளைப் பற்றிச் சொல்லப்பட்ட ஏதோ விஷயங்கள் உண்மை என்று நினைப்பதல்ல. எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னையே கடவுளுக்குத் தத்தம் செய்து அவரையே நமது அன்புள்ள பரம தகப்பனாக முழுவதும் நம்புவதாயிருக்கிறது. அவரைக் கொடூர நியாயாதிபதியாக அல்ல எல்லாவற்றிற்கும் முந்தி பட்சமுள்ள தகப்பனாக நம்புவதுதான்.

“விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்” என்ற வார்த்தையை மார்ட்டின் லூத்தர் தியானிக்கையில் அவர் கண்டுபிடித்ததும் இதுவே.

* * *

4. விசுவாசத்தினாலல்லாமல் ஒருவனும் கடவுளுக்குப் பிரியமாயிருக்க முடியாது என்கிற உண்மையைக் கண்டறிந்ததினாலே கடவுளையும் மதத்தையும் பற்றிய மார்ட்டின் லூத்தரின் கோட்பாடெல்லாம் மாறுதலடைந்தது.



கடவுள் கோபமும் கொடுங்கோன்மையுமான நியாயாதிபதியல்ல. அவரது தயவை மனிதன் தன் நற்கிரியைகளால் சம்பாதிக்கமுடியாது. நற்கிரியைகளாலும் புண்ணியக்கிரியைகளாலும் கோபமுள்ள நியாயாதிபதியின் தயவைச் சம்பாதித்துத் தன்னை நீதிமானாக்கப் பிரயாசைப்பட்டுக்கொள்வதும் தேவதாபக்தியல்ல. இது அசாத்தியமான காரியம். “எந்த நற்கிரியையும் எவனையும் நல்லவனாக்காது”. என்று லூத்தர் தனது பிரயாசையான அனுபோகத்திலிருந்து சொல்லுகிறான்.

கடவுள் ஒரு பட்சமுள்ள தகப்பன். அவர் நமது பாவங்களையும் நமது அபாத்திரத்தன்மையையும் பாராமல் தமது கரங்களினால் பட்சமாய் நம்மில் ஒவ்வொருவரையும் அணைத்து, நாம் அவருடைய பிள்ளைகளென்று உணரும்படி விரும்புகிறார். ஒரு பிள்ளை தன் தகப்பனுடைய வீட்டில் இருந்து கொண்டு அவனது தயவையும் அன்பையும் அங்கே ருசித்துக்கொண்டு வருவதுபோல நாம் கடவுளுடைய சந்நிதியில் தினந்தோறும் ஜீவிப்பதே தேவதாபக்தி. கிறிஸ்து மார்க்கத்தின் பிரகாரம் நீதிமானாக்கப்படுதலானது மனிதன் பரம நியாயாதிபதியாகிய கடவுளுக்குமுன் நீதிமானாகத் தன்னைத் தீர்ப்பது அல்ல, கடவுள் அன்புள்ள தகப்பனாக மனிதனை அவனது அபாத்திரத்தன்மையைப் பாராமல் தமது பிள்ளையாகத் தீர்ப்பது என்பதே. இப்படிப்பட்ட தகப்பனாகிய கடவுளின் தீர்ப்பினால் ஒரு மனிதன் நீதிமானாவான். இவ்விதமாய்த்தான் கடவுளோடுள்ள ஒரு மனிதனின் ஜீவியம் நீதிமானாகுதலோடு ஆரம்பமாகிறது. நீதிமானாகுதல் அவனது சுயகிரியைகளால் அடைகிற முடிவான காரியமல்ல.

கர்த்தருடைய வசனத்தில் “விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்” என்று நாம் வாசிக்கையில் அதின் அர்த்தம் இன்னது என்று இப்பொழுது நமக்கு ஒரு வேளை சற்று நன்றாய் விளங்கும்.

ஒரு மனிதன் தான் கடவுளுடைய பிள்ளை என்றும், அவர் அவனுடைய தகப்பனென்றும், உணரும்போது அதுவே குணப்படுதலாயிருக்கிறது. பிறகு அவன் தினந்தோறும் குழந்தையைப்போல தன் பரம தகப்பனுடைய வீட்டிலே வாசஞ்செய்யவேண்டும். ஒரு சிறுகுழந்தை [illegible]றிலும் தகப்பனையே நம்பிச் சிநேகித்துத் தன் எல்லா தேவை[illegible]க்கும் அவரையே நோக்கிப் பார்க்கிறதுபோல, அவன் கடவுள் [illegible]லேயே தன் நம்பிக்கையை வைத்து நாளுக்கு நாள் தன்னையே

அவருக்குத் தத்தஞ் செய்யவேண்டும். இதுவே விசுவாசத்தின் அர்த்தம்.

பிறகுதான் நற்கிரியைகள் பின்தொடருகிறது. கடவுளுக்கு நமது பேரிலுள்ள அன்பை நாம் அறிந்து உணர்ந்திருக்கும்பொழுதே கடவுளின் கண்களில் நாம் நீதிமான்களாகத் தீர்க்கப்படுகிறோம். இதுவே ஒரு மனிதனின் குணப்படுதல். கடவுள் நமது பாவங்களையும் அபாத்திரத்தன்மையையும் பாராமல் நம்மைத்தேடி நம்மை தமது பிள்ளைகளாக்குகிறார் என்று உணருகிறதும் அத்தோடுகூட நாம் அவர்பேரில் நம்பிக்கையாயிருந்து, அவருடைய பிள்ளைகளாக அவருக்கு நம்மைத் தத்தஞ்செய்கிறதும் குணப்படுதல்தான். அப்பொழுது நமது தின ஜீவியத்துக்கடுத்த ஒவ்வொரு காரியமும் பரம தகப்பன் தமது பிள்ளைகள்மேல் வைத்த அன்புக்குப் புதியதும் அற்புதமுமான திருஷ்டாந்தங்களாகவும் அடையாளங்களாகவும் நாம் கண்டு உணருவோம். பிற்பாடு எப்படியாகிலும் நமது தகப்பனுக்குப் பிரீதியாயுள்ள வேலைகளையே நாம் செய்ய ஆவலுள்ளவர்களாவோம். இப்படிப்பட்ட ஆவல் நமக்குள்ளே எப்படி உண்டாயிற்று என்று கேட்டால், கடவுளிடத்தில் மேன்மையைத் தேடுவதற்காகவே நற்கிரியைகளைச் செய்யவேண்டும் என்கிற விருப்பத்தால் அல்ல, கடவுளுடைய அன்பின் தினசரி புது அனுபவத்தாலும் பரமதகப்பன் நமக்கு நமது பாவங்களை மன்னித்தலின் அனுபவத்தாலுமே. மேலும், இப்படிப்பட்ட அனுபோகம் நாம் தினமும் நற்கிரியைகளைச் செய்கிறதற்காகப் புது பெலனைக்கொடுக்கும்.

"நல்ல மனிதன் நல்ல கிரியைகளைச் செய்கிறான்" என்று லூத்தர் சொல்லுகிறான். நல்ல மனிதன் நல்ல காரியங்களைச் செய்யாமலிருக்கமுடியாது. நல்ல காரியங்கள் அவனிலிருந்து புறப்படாவிட்டால் என்ன தெரிகிறது? அவன் இன்னும் தன்னைக்கடவுளுடைய பிள்ளையாக அறிந்துகொள்ளவில்லை. அவன் மனம் மாறவில்லை. அவன் பரம தகப்பனுடைய வீட்டில் சரியாய் வசிக்கவில்லை. கடவுள் பேரில் நம்பிக்கையாயிருந்து அவருக்குத் தன்னைத் தத்தம் செய்வதேயல்லாமல் வேறொன்றும் கடவுளுக்குப் பிரியமான விசுவாசமாயிராது.



5. கடவுளை நமது தகப்பனாக எண்ணி அவர்பேரில் முழு நம்பிக்கை வைத்து, அவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்கலாம் என்பதை நாம் எப்படி அறிவோம்.

இதை நாம் இயேசுகிறிஸ்து ஒருவர் மூலமாய் அறிகிறோம். கர்த்தருடைய வசனத்தில் அவர் நம்மைச் சந்திக்கிறார். நாம் அவரைச் சந்திக்கிறோம். இப்படி லூத்தர் கிறிஸ்துவையும் கிறிஸ்து லூத்தரையும் கர்த்தருடைய வசனத்தினால் ஒருவரை ஒருவர் சந்தித்தார்கள். அவரை லூத்தர் உயிருள்ளவராகவும் ஏக காலவாசியாகவுமே சந்தித்தான்.

இயேசுகிறிஸ்து நேராகவும் சரியாகவும் மனிதனோடும் நம்மில் ஒவ்வொருவரோடும் ஐக்கியமாகிற பரம தகப்பனாகிய கடவுளாகவே இருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்மைக் குறித்துச் சொல்லுகிறதாவது: "நான் சுயமாய்ப் பேசவில்லை; நான் சொல்லவும் பேசவும் வேண்டியது இன்னதென்று என்னையனுப்பிய பிதாவே எனக்குக் கற்பித்திருக்கிறார்" (யோவான் 12:49) என்றார். மேலும் "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ப் பேசவில்லை. என்னில் நிலைத்திருக்கிற பிதாவே தமது கிரியைகளைச் செய்கிறார்" (யோவான் 14:10) என்றார்.

இவ்விதமாய் இயேசு நாதர் கடவுளை நமக்கு நமது பரமதகப்பனாக வெளிப்படுத்துகிறதினாலே அவர் நமது இரட்சகர்

இதை மார்ட்டின் லூத்தர் கண்டது மாத்திரமல்ல, அனுபவமாயும் அறிந்தான். இதை நூதனமாய் அறியவில்லை. அப்போஸ்தலன் காலத்திலிருந்த பழைய சத்தியத்தையல்லாமல் வேறொன்றையும் அவன் நூதன அனுபவமாய் அறிந்துகொண்டதில்லை. அவனுடைய காலத்தில் ஏறக்குறைய எல்லாரும் இந்த அனுபவத்தைக் கண்டதில்லை. பழைய சத்தியத்தின் இந்த அவனுடைய நூதன அனுபவத்தைத் தைரியமாய் எல்லாருக்கும் எடுத்துச் சொன்னான். இதனால் சீர்திருத்தல் என்ற கிரியை உண்டாயிற்று. அவன் பழைய காரியத்தில் ஏதும் கூட்டினதும் அதை வேறு விதமாய் அர்த்தப்படுத்தினதுமில்லை. [illegible]படி தனக்கென்று ஒரு சபையை ஏற்படுத்தினதுமில்லை. பழைய[illegible]ய சத்தியத்தின் நூதன அனுபவத்தை மாத்திரம் அடைந்தான்.

இயேசுகிறிஸ்துவின் எந்த சபையையாவது லூத்தரின் பேரால் அழைப்பதானது இயேசுகிறிஸ்துவின் மூலமாய்வருகிற இரக்ஷிப்பைப் பற்றிய பழைய சத்தியத்தின் ஆச்சரியமான ஐசுவரியத்தை லேசாய்க் குறைக்கிறதாயிருக்கலாம். மேலும், இப்படிச்செய்தால் இயேசுகிறிஸ்துவினால் உண்டான இரட்சிப்பானது 16-ம் நூற்றாண்டிலுள்ள ஒரு மனிதனுடைய அற்புதச்செய்கையாக லேசாய்த் தோன்றக்கூடும்.

* * *

அப்போஸ்தலன் நமது வாக்கியத்தில் "நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களல்ல" என்று சொல்லுகிறான். பரமதகப்பனுடைய கரங்கள் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் விரிக்கப்பட்டிருக்கிறதென்று அப்போஸ்தலன் உணர்ந்தான். அக்கரங்களுக்குத் தான் தப்பிப்போக அவர் பிரயாசப்படவில்லை. பின்னடைந்ததில்லை. கரங்களை விரித்துக் கொண்டிருக்கிற தகப்பன் தன்னைப்பிடிக்க இடங்கொடுத்தான். மார்ட்டின் லூத்தரும்கூட இதேவிதமாய்ப் பின்னடையாமல் விசுவாசத்தினால் பிழைத்தான்.

என் பிரிய சிநேகிதனே! நீயும் நீதிமானாகி விசுவாசத்தினால் ஜீவிக்கும்படியாக உன்னையும் பிடிக்கும்படியாக நமது பரமதகப்பன் இயேசுகிறிஸ்துவிலே தமது கரங்களை விரித்துக்கொண்டிருக்கிறார். இப்பொழுது இந்த நாளிலும் தமது வசனத்தின் மூலமாயும், இந்த நிமிஷத்தில் விசேஷித்த விதமாய்ப்பரிசுத்த இராப்போசனத்தின் மூலமாயும் உன்னைப் பிடிக்கும்படியாகத் தமது கரங்களை விரித்துக்கொண்டிருக்கிறார். "நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களல்ல; ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களே" என்று அப்போஸ்தலனைப்போல நீயும் அறிக்கை செய்யமுடியுமா?

ஆண்டவரே! நாங்கள் எல்லாரும் நீர் எங்கள் பரமதகப்பனென்றும் நாங்கள் உம்முடைய பிள்ளைகளென்றும் உணர்ந்து உம்முடைய வீட்டிலே உமக்குப் பிரியமுண்டாக விசுவாசத்தினால் பிழைக்கும் பாக்கியத்தை அருளிச் செய்வீராக. ஆமேன்.

---

# பரிசுத்தவான்கள் யார்?

(பரிசுத்தவான்களின் திருநாள்—நொவெம்பர் மாசத்தின் முதல் ஞாயிறு.)

வேத வாக்கியம்: மத்தேயு 5:1-12.

இயேசுநாதர் ஜனத்திரளைக்கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்காரவே, அவருடைய சீஷர் அவரிடம் வந்தார்கள்.

அப்பொழுது அவர் அவர்களுக்கு உபதேசமாகத் திருவாய் மலர்ந்தருளினதாவது:—

ஆவியில் தரித்திரர் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

துயரப்படுவோர் பாக்கியவான்கள்; அவர்கள் தேறுதல் அடைவார்கள்.

சாந்த குணமுடையோர் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்.

நீதியின்மேல் பசிதாகமுடையோர் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

இரக்கமுடையோர் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

இருதயத்தில் சுத்தமுடையோர் பாக்கியவான்கள்; அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள்.

சமாதானம் பண்ணுவோர் பாக்கியவான்கள்; அவர்கள் கடவுளின் பிள்ளைகள் எனப்படுவார்கள்.

நீதியினிமித்தம் இம்சை யனுபவிப்பவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

என்னிமித்தம் உங்களை நிந்தித்து இம்சைப்படுத்தி எல்லாவிதத் தீமைகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் நீங்கள் பாக்கியவான்கள்.

சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன்மிகுதியாகும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே இம்சைப்படுத்தினார்கள்.

கிறிஸ்தவ திருச்சபையின் பழைய வழக்கத்தின்படி நொவெம்பர் மாதம் 1-ம் தேதி சகலபரிசுத்தவான்களின் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்தத் தேதி ஞாயிற்றுக்கிழமையாயிராதபடியினாலே நமது சபையில் இந்தத் தேதிக்கடுத்த முதல் ஞாயிற்றுக்கிழமையாகிய இன்றையத்தினத்தை இந்தப் பண்டிகைநாளாகக் கொண்டாடுகிறோம்.

பரிசுத்தவான்களை, விசேஷமாக இப்பூமியில் ஜீவியம் செய்து வந்து ஜெயங்கொண்டவர்களை நாம் நினைக்கத் தேவையுண்டு. அப்பவுல் சொல்லுகிற பிரகாரமாகக் கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுள் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளைப் பெறுவதற்கு இலக்கை நோக்கித் தொடருகிறவர்களாகிய சகல பரிசுத்தவான்கள் நமக்கு நமது ஜீவியப் போராட்டத்தில் தேறுதலாகவும் புத்திபோதனையாகவும், நல்ல முன்மாதிரியாகவும் இருக்கிறதை நாம் நினைத்து இதின் மூலமாய்க் கடவுள் மனுஷ ஜாதிக்குக் கொடுத்த அவருடைய பெரிய ஈவுகளுக்காக அவரை ஸ்தோத்தரிக்கவும் வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பரிசுத்தவான் என்று சொல்வதில் நமது கருத்தென்ன? கர்த்தருடைய ஜனத்தினுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கிறவனே பரிசுத்தவான் என்று கடந்த ஞாயிறு சொல்லப்பட்டது. மேலும் இன்னும் யாரைப் பரிசுத்தவான் என்போம்? இவ்வுலகத்தில் நமது நடுவில் இன்னும் உயிரோடிருந்தாலும், கடவுளுடைய ஜனத்தின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கத் தகுதியுள்ளவனாயிருக்கிறவன் எவனோ அவனும் பரிசுத்தவான்.

கடந்த ஞாயிறு இதின் சம்பந்தமாக ஒரு காரியத்தைக் குறித்து நினைப்பூட்டப்பட்டோம். அதாவது: கடவுளுடைய ஜனத்தின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கத் தகுதியுள்ளவர்களும், பிரவேசித்தவர்களுமான ஜனங்களின் குணவிஷயங்களில் முக்கியமாய் ஒன்றைக் குறித்துத்தான் நினைப்பூட்டப்பட்டோம். அவர்களைப்பற்றி விசேஷித்துச் சொல்லக்கூடியதாயிருக்கிறதும் இருந்ததும் என்ன?

அவர்கள் சும்மாயிருக்கிறதில்லை. வேலை எப்போதும் தொடர்ந்து செய்கிறார்கள். அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். [illegible]கள் நித்தியஜீவனைப் பற்றிக்கொள்ளும்படியாக விசுவாசத்தின்



போராட்டத்தைப் போராடுகிறார்கள். ஏனெனில் அதற்காகவே அழைக்கப்பட்டார்கள்.

கடந்த வாரத்தில் மறுபடியும் ஒருதரம் பரிசுத்தவான்களில் ஒருவனாகிய மார்ட்டின் லுத்தரின் ஜீவியத்தைக் குறித்துப் படித்தோம். அவனைப் பரிசுத்தவான் என்று நாம் அழைப்பது ஏன்? அவனால் செய்யப்பட்ட பெரிய காரியங்களினால் அல்ல, ஆனால் அவர் வாஸ்தவமாய் இருக்கிறபிரகாரமாக இருந்ததினாலேதான். அவன் எவ்விதமாயிருந்தான்? அவன் ஜீவியத்தில் இருந்த விசேஷமென்ன? அவன் போராடுகிற ஆத்துமாவாயிருந்தான். ஆவியின் பெலத்திலும் ஆவிக்கடுத்தத் தன்மையிலும் அவன் சித்திபெற்றவரையிலும் ஒருபோதும் திருப்தியடைந்ததில்லை. அவன் இன்னும் அதிகமதிகமாய்ச் சித்தியடையும்படியாகப் பேராவலுள்ளவனும், போராடுகிறவனுமாய் இருந்தான். அவன் ஞானஜீவனில் வளருகிறவனாயிருந்தான். அப்பேர்ப்பட்ட மனி[illegible]வனுடைய இராச்சியத்திலும் கிறிஸ்துவின் சபையிலும் எப்[illegible]ம் பரிசுத்தவானாயிருக்கிறான்.

* * *

ஒரு பரிசுத்தவானை எப்போதும் போராடுகிற ஆத்துமாவாகவும், வளருகிறவனாகவும், தன் சொந்த துர்க்குணத்தோடு போராடி ஜெயங்கொள்வதிலே வளருகிறவனாகவும், தன் இருதயத்தில் கடவுள் சிருஷ்டித்த ஒவ்வொன்றையும் கடவுளுடைய பெலத்தினால் நன்மையில் விர்த்தியாக்குகிறவனாகவும், இந்திய தேசத்திலே குடியிருக்கிற நாம் நினைக்கப் பிரயாசப்படுவது முக்கியமான காரியமென்று நான் நினைக்கிறேன். மேலும் நித்திய மோட்சானந்தமானது கடவுளுடைய சித்தத்துக்கேற்றவிதமாய் நமது உள்ளான மனுஷனின் வாஸ்தவமான பூரண காரியசித்தியாயிருக்கிறது என்று நாம் இப்படியே மறக்காமல் விசேஷித்து நினைக்கவேண்டும்.

இந்து மார்க்கத்தின் சாதாரண கொள்கையின் பிரகாரம் நற்குணங்களுக்கும் துர்க்குணங்களுக்கும் வாஸ்தவத்தில் யாதொரு திட்டமான வித்தியாசம் இருக்கிறதைக் காணோம். ஆகையால் துர்க்குணங்[illegible] விரோதமான போராட்டத்திலும், நற்குணங்களை விர்த்திசெய்[illegible]வதிலும் அம்மார்க்கம் வெகு குறைவாயிருக்கிறது. மனுஷனுக்[illegible]ருக்கிறதெல்லாம் ஏறக்குறைய ஒரு பாரமாகவும் மனுஷன்

மோட்சத்தில் பிரவேசிக்கிறதற்குத் தடையானதாகவும் அறியப்படுகிறது. ஒரு மனுஷனுக்குள் இருக்கிற ஒவ்வொன்றும் எக்குணமாயிருந்தாலும் அது நிர்மூலமாக்கப்பட்டபொழுது, அல்லது அழிக்கப்பட்டபொழுது மாத்திரம் ஒரு மனிதன் மோட்சத்தில் பிரவேசிக்கலாம். அப்பொழுதுகூட அவன் மோட்சத்தில் பிரவேசிப்பதானது ஒரு துளி தண்ணீர் பெரிய சமுத்திரத்தில் விழுவது போலிருக்கும். ஒவ்வொரு தனித்த மனிதனுக்கும் இருக்கிற குணவிசேஷத்தைக் குறித்தும், தன்மையைக் குறித்தும் வளர்ச்சியைக் குறித்தும், விர்த்தியைக் குறித்தும் யாதொரு அபிப்பிராயமும் கிடையாது.

பக்திமார்க்க ஜீவியத்துக்கடுத்ததும் மோட்சானந்தத்துக் கடுத்ததுமான இந்த எண்ணம் இந்தியாவில் அதிகமாய் ஊடாடி வருகிறபடியால், கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசுத்தவானுக்கேற்றச் செய்யும் ஜீவியம் போராடுகிறதும், வளருகிறதும் மனுஷ இருதயத்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நல்ல காரியங்களின் சித்தியை நோக்குகிறதுமான ஜீவியமாயிருக்கிறது என்பதை விசேஷித்த விதமாய், எப்போதும் மனதில் வைப்பது அதிக முக்கியம் என்று நான் நினைக்கிறேன். ஒரு நாளில் நாம் பிரவேசிக்கும்படி ஆவலாய்க் காத்திருக்கிற மோட்சமானது நம்மில் ஒவ்வொருவருக்கும் இங்கே இப்பூமியில் கூடியதாயிருப்பதைப் பார்க்கிலும் அங்கே தனித்தனியாய் அதிகச் சிறந்த ஜீவியம் செய்யக்கூடிய ஒரு இடமாயிருக்கிறது என்பதையும் கிறிஸ்தவர்களாகிய நாம் எப்போதும் மனதில் வைப்பதும் அதிக முக்கியமானதாயிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இப்பூமியில் எத்தகைய மகா சிறந்த காரியங்களைச் செய்தவனாயிருந்தாலும், ஒருவனுக்குத் தனித்த குணவிசேஷம் கிடைத்தாலொழிய—பவுல் அப்: எபேசியர் 4:12-ல் தான் கடவுளின் குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் தேர்ந்த அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி பூரண புருஷராகும்வரைக்கும், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு வந்தெட்டும் வரைக்கும், என்று சொல்லுவதைப்போல, ஒருவன் இருந்தாலொழிய—ஒருவனுக்கும் மோட்சத்திலும் பரிசுத்தவான்களின் பெரிய கூட்டத்திலும் இடமில்லை.



நமது வாக்கியத்தில் இயேசு தமது சீஷருக்குச் சொன்ன வார்த்தைகளைச் சற்று நாம் இப்போது சிந்தித்தால், இது நமக்கு அதிக நன்றாய் விளங்கும். ஏனென்றால், பாக்கியவான்களைப்பற்றியும் தமது உண்மையுள்ள சீஷர் அடையப்போகும் பாக்கியத்தின் தன்மையைப் பற்றியும் இந்த வார்த்தைகளே சொல்லுகின்றன.

"ஆவியில் தரித்திரர் பாக்கியவான்கள்." இயேசுவின் சீஷர் ஆவியில் எப்படியாவது எப்போதும் தரித்திரராயிருக்க வேண்டுமென்பது அதின் கருத்தல்ல. கடவுளிடத்திலிருந்து ஆவியின் ஈவுகளை எவ்வளவாக ஒரு சீஷன் பெற்றிருந்தாலும், அவன் எப்போதும் தன்னைத் தரித்திரனாகவே உணருவான் என்பதே அதின் கருத்து. ஏனென்றால், அவனுக்கு ஆவல் அதிகமாயிருக்கிறதுமல்லாமல் வேறொன்றும் இல்லை. மேலும் கடவுளிடத்தில் இருக்கிற ஐசுவரியம் அளவற்றது. ஒருவன் எவ்வளவாகக் கடவுளிடத்திலிருந்து ஆவியின் ஈவுகளைப் பெற்றிருக்கிறானோ, அவ்வளவுக்கு அதிகமாய் அவன் தன்னைத் தரித்திரனை எண்ணும் குணமும், விர்த்தியாகும் ஆவலும் கொடுக்கப்படும். மோட்சராச்சியம் அதின் பூரணத்தோடு ஆவியில் தரித்திரருக்குக் கிடைக்கும். இவ்விதமாய் அவர்கள் பாக்கியவான்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாகிறார்கள்.

"துயரப்படுவோர் பாக்கியவான்கள்." முதலாவது தங்களுக்காகவே, அதாவது அவர்கள் தங்களுடைய எல்லா பெலவீனங்களின் நிமித்தமும் பாவங்களின் நிமித்தமும் துயரப்படுகிறவர்களாயிருக்கிறார்கள். தங்களுக்கு அடுத்தவர்களுடைய துன்மார்க்கத்தின் நிமித்தமும், முழு உலகத்தின் பொல்லாப்பின் நிமித்தமும் மாத்திரமல்ல, தங்கள் சொந்த பெலவீனங்களுக்காகவும் சிநேகக் குறைவுக்காகவும் துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேற்றப்படுவதினால் பாக்கியவான்களாயிருக்கிறார்கள். தனக்காக [illegible] துயரப்படத் துவங்கினவன் தன் துயரங்களையும் துக்கங்களையும் நீக்குகிற பாதையின் முதல்படிக்கு வந்திருக்கிறான். கடவுள்தான் அவனுக்குப் பாவமன்னிப்பை அளிப்பதினாலும் அவனுக்குள் புதுக்குணத்தைச் [illegible]ப்பதினாலும் அவனைத் தேற்றுவார்.

"[illegible]சாந்த குணமுடையோர் பாக்கியவான்கள்." தங்களையே மேற் [illegible] சாந்தகுணமுடையோர் பாக்கியவான்கள். அவர்கள் பூமி

த்தையும்கூட மேற்கொள்ளுவார்கள். அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். அவர்கள் மனுஷரையும் எல்லா வஸ்துக்களையும் தங்கள் புறம்பான அதிகாரத்தினால் அல்ல, தங்கள் சாந்த குணத்தினால் ஆண்டு கொள்வார்கள்.

"நீதியின்மேல் பசிதாகமுடையோர் பாக்கியவான்கள்." இவ்வுலகத்தில் நேரிடும் பசியும் தாகமும் அதிகமாகத் திருப்தியடைகிறதில்லை ஏனென்றால் அது தன்னயத்தினால் கலந்திருக்கிறது. என்றாலும், நீதியின் பேரில் பசிதாகமுடையவன் பாக்கியவான். ஏனெனில் கடவுளாலேதான் திருப்தியடைகிறான். கடவுளுடைய இராச்சியம் ஒருநாளில் தன் எல்லா மகிமையோடும் அலங்காரத்தோடும் ஏற்படுமே.

"இரக்கமுடையோர் பாக்கியவான்கள்." இரக்கமுடையோர் யார்? அவர்கள் நல்ல சமாரியனைப்போல அன்புள்ள இருதயமுடையோராக தரித்திரரும் கஷ்டப்படுகிறவர்களுமான அயலகத்தாருக்கு உதவும்படியாகத் தங்கள் சுகத்தை வெறுக்கிறவர்கள். அவர்கள் கடவுளிடத்திலிருந்தும் மனிதரிடத்திலிருந்தும் இரக்கத்தைத் தாங்களே சம்பாதிக்கிறபடியால் பாக்கியவான்களாயிருக்கிறார்கள்.

"இருதயத்தில் சுத்தமுடையோர் பாக்கியவான்கள்." இருதயச் சுத்தமுடையவர்களாக இயேசு கிறிஸ்துவினால் யார் எண்ணப்படுகிறார்கள்? தன் இருதயத்தில் எவ்வித துர்க்குணமும் இல்லாதவனை இயேசு நினைத்துச்சொல்லவில்லை. அப்பேர்க்கொத்த மனிதனை உலகத்தில் ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், தங்கள் இருதயத்திலுள்ள கெட்ட ஆசையிச்சைகளையும், கடவுளால் தங்கள் இருதயத்தில் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும் அதின் பூரண தேர்ச்சிக்கும் வளர்த்திக்கும் வருகிறவரையில், கடவுளுடைய பெலத்தினால் தினந்தோறும் உண்மையாய்ப் போராடுகிறவர்களையுமே இயேசு நினைக்கிறார். இயேசு மாய்மாலக்காரராயில்லாமல் நேர்மையானவர்களையும் யோக்கியமானவர்களையுமே நினைக்கிறார். அவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் அவர்கள் கடவுளை முகமுகமாய்த் தரிசிக்கும் வரையில் கடவுளை அதிகமதிகமாய்க் கிட்டிச் சேரக்கூடியவர்களாயிருக்கிறார்கள்.



"சமாதானம் பண்ணுவோர் பாக்கியவான்கள்." சமாதானம் நிறைந்தவர்கள் அல்லது சமாதான முள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசு சொல்லுகிறதில்லை. நமது நடுவில் சமாதானமுள்ள அநேகர் உண்டு. சமாதானம் பண்ணுகிறவர்களோ அதிகச் சொற்பம். சமாதானமுள்ளவர்களில் அநேகருடைய குணம் எப்படி? அவர்கள் ஒன்றுக்கும் கவலைப்படுகிறதில்லை. நல்ல காரியங்களுக்கும் கெட்ட காரியங்களுக்கும் கவலைப்படுகிறதில்லை. சமாதானம் அடிக்கடி சுத்த தன்னயமுள்ளதாயிருக்கிறது. "எனக்கு யாதொன்றைப் பற்றியும் கவலையில்லை. என்னைச் சுற்றிலும் என்ன நடந்தாலும், என்ன சம்பவித்தாலும் பேசாமல் அமைதியா யிருக்கப் பிரயாசப்படுகிறேன். ஏனெனில் எனக்குள்ளே அமைதி தேவையாயிருக்கிறது. எந்தவிதமான தொந்தரவும் எனக்குப் பிடிக்காது" என்று சொல்லுவார்கள். கடவுளுடைய ஒரு பிள்ளையினிடத்தில் இயேசு இதைவிட அதிகம் எதிர்பார்க்கிறார். கடவுளுடைய ஒவ்வொரு பிள்ளையும் சமாதானத்தை உண்டுபண்ணவும், இவ்வுலகத்தில் மனிதரிடத்தில் சமாதானத்தை உண்டுபண்ணவும் வேண்டுமென்று அவர் விரும்புகிறார். இவ்விதமான முயற்சியும் ஊக்கமுமாய் இருக்கிற ஒருவன் வாஸ்தவமாய்ப் பாக்கியவானாய் இருக்கிறான். ஏனெனில் அவன் வாஸ்தவமாய்க் கடவுளுடைய பிள்ளை.

"நீதியின் நிமித்தம் துன்பம் அனுபவிக்கிறவர்கள் பாக்கியவான்கள்." இங்கே இவ்வுலகத்தில் பரிசுத்தவான்கள் எப்போதும் துன்பத்தை அனுபவிக்க வேண்டியவர்களா யிருந்தார்கள், இருக்கிறார்கள். நமது ஆண்டவரும் இரக்ஷகருமாகிய அவரைப்போல ஒருவனுக்கும் அவ்வளவு கொடூரமான துன்பம் உண்டானதில்லை. கடவுளுடைய ஒரு பிள்ளை எப்போதும் துன்பத்துக்கும், பகைக்கும் ஆயத்தமாயிருக்கவேண்டும். ஆனால் நீதியினிமித்தம் இம்சை அனுபவிக்காத அநேக துன்பப்படுகிற கிறிஸ்தவர்கள் உண்டு. அவர்கள் தங்களுடைய சொந்த குற்றங்களுக்காகவும், மனிதரோடு ஒத்துவசிக்கும் போதுள்ள அநுதாபமற்ற சிநேகக் குறைவுகளுக்காகவுமே இம்சை அனுபவிக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களோடு கூடி ஜீவிக்கும்போது தங்களுடைய சொந்த பெருமையினிமித்தமும் தன்னயத்தினிமித்தமும் இம்சைப்படுகிறார்கள். அப்பேர்ப்பட்ட கிறிஸ்த

வர்கள் இயேசுவினால் எவ்விதத்திலும் பாக்கியவான்கள் என்று அழைக்கப்படுகிறதில்லை. நம்மில் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நீதியையும் கடவுளுக்குரிய காரியங்களையும் நாம் சுயநயத்தோடும் நமது சொந்த குறைவுகளோடும் கலந்துவிடுவோம். ஆனால் சிநேகத்தைக் காட்டி, இவ்வுலகத்தில் நீதி உண்டுபண்ணுவதில் முயற்சியும் ஊக்கமும் உடைய ஒருவனுக்கு அவன் அப்படி நடப்பதினாலே துன்பம் உண்டாகிறது. அவன் பாக்கியவான்: ஏனெனில் கடவுளுடைய இராச்சியத்தின் உண்மையான குடியாயிருக்கிறான். மோட்ச இராச்சியம் அவனுடையது.

* * *

இவ்விதமாய் இயேசுநாதர் நமக்குப் பரிசுத்தமான ஜீவியத்தைப் பற்றிப் போதிக்கப் பிரயாசப்பட்டிருக்கிறார். கடவுளுடைய உண்மையுள்ளபிள்ளையும் தான் இவ்வுலகத்தில் ஜீவிக்கும்போது, அவர் அவனிடத்தில் எதிர்பார்க்கிற கிரியைகளைப்பற்றி நமக்குக் கொஞ்சம் போதித்திருக்கிறார். கடவுளுடைய பிள்ளையின் ஜீவியமானது சுறுசுறுப்பும் ஊக்கமுமானதாயும் தினந்தோறும் வளருகிற ஜீவியமாயும் இருக்கவேண்டுமென்பதை அவர் நமக்குத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். அப்பேர்ப்பட்ட ஜீவியம் பாக்கியமும் பரிசுத்தமுமான ஜீவியமாயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட ஜீவியம் செய்கிற ஒருவன் ஒரு நாளில் நித்திய மோட்ச பாக்கியத்தை அடைவான். அவன் எல்லா மோட்ச வாசிகளும் இருக்கிற கடவுளுடைய இராச்சியத்திலே ஏற்றுக்கொள்ளப்படுவான். அங்கே ஒவ்வொருவனும் ஏகமும் தனிமையுமானவனாயிருந்து முடிவுமட்டும் விர்த்தியாகி, கடவுளைத் தினந்தோறும் போற்றி அவருக்கு ஊழியம் செய்கிறவனாய் அவருடைய சமுகத்தில் ஜீவிப்பான்.

இங்கே இப்பூமியில் வசித்திருந்த எல்லாப் பரிசுத்தவான்களுக்காகவும், நமது திருச்சபையின் எல்லாப் பரிசுத்தவான்களுக்காகவும், விசேஷமாய் நமது திருச்சபையின் உண்மையுள்ள ஊழியரில் சில நாட்களுக்கு முன்னே நித்திரை அடைந்த ஒருவனாகிய செபஸ்தியான் என்பவருக்காகவும், நமது சொந்த சபையின் எல்லாப் பரிசுத்தவான்களுக்காகவும், நமது சொந்த குடும்பத்தின் பரிசுத்தவான்களுக்காகவும் நாம் இந்நாளிலே கடவுளை



ஸ்தோத்திரிப்போமாக. நம்மில் ஒவ்வொருவருங்கூட கடவுள் நம்மை எவ்விடத்தில் வைத்தாலும், இங்கே இப்பூமியில் நாம் அப்பேர்ப்பட்ட பரிசுத்த ஜீவியம் செய்யும்படியாகவும் காலம் வரும்போது மோட்சத்திலுள்ள பரிசுத்தவான்களின் திரள்கூட்டத்தில் சேர்ந்துகொள்ளவும் கடவுள் நமக்குக் கிருபை செய்வாராக.

* * *

நமது ஆண்டவரும் இரக்ஷகருமான இயேசுகிறிஸ்து மறுபடியும் ஒரு தரம் நம்மை அவரது திருப்பந்தியில் அழைக்கிறார். அவரோடு நெருங்கி இருதயத்தில் ஐக்கியப்படும்படி அழைக்கிறார். ஏற்கனவே மோட்சத்தில் தங்கள் இருதயத்தில் நமது ஆண்டவரும் இரக்ஷகருமானவரோடு ஐக்கியமாயிருக்கிற எல்லாப் பரிசுத்தவான்களோடும், நாம் இவ்வுலகத்திலே இன்னும் ஜீவித்தாலும், இருதயத்தில் கர்த்தருடைய திருப்பந்தியில் விசேஷித்த பிரகாரமாக ஐக்கியமாயிருக்கலாம். ஒவ்வொரு ஞாயிறுகளிலும் நாம் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமுண்டு என்ற விசுவாசத்தை அறிக்கையிட்டு வருகிறோம். பரிசுத்தவிருந்தில் சேருகிற நாமும் இந்த ஐக்கியத்தை வாஸ்தவமாக உணரக்கூடும், உணருகிறோம்.

இன்றைக்கு முதல் தடவையாகத் திருவிருந்தில் உங்கள் இரக்ஷகரைச் சந்திக்க அழைக்கப்படுகிற என் பிரியமான பிள்ளைகளே! அவருடைய சமுகத்தில் அவருடைய பிரசன்னத்தை உண்மையாய் உணரவும், அவரை உங்கள் இருதயத்தில் முந்தி சந்தித்ததைப் பார்க்கிலும் அதிகமாய்த் திருவிருந்தில் அவரை உங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும்படியாய் விரும்புகிறேன். மேலும் உங்கள் ஆத்தும இரக்ஷிப்புக்காகப் பாவத்தோடும் சோதனைகளோடும் போராடி நித்திய ஜீவனைத்தேட நீங்கள் தனிமையாயில்லை என்பதை நீங்கள் உணரவேண்டுமென்று விரும்புகிறேன். நீங்களும் நாங்களெல்லாரும் சாட்சிகளின் இத்தனை பெரிய மேகங்களால் சூழப்பட்டிருக்கிறோம் என்பதை முழுவதுமாய் உணரவும், அதின் மூலமாய்ப் பாவத்தையும் அதின் பாரத்தையும் உதறி, நமக்குமுன் இருக்கிற பந்தயத்தில் பொறுமையோடு ஓடி நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கிப்பார்க்கக் கடவோம். ஆமேன்.

# கடவுளுக்கு முன்பாகப் பலத்திலிருந்து பலத்துப் போகுதல்.

(ஞானஸ்நான திடப்படுத்தல் சமயத்தில் செய்த பிரசங்கம்)

---

வேத வாக்கியம் : சங்கீதம் 84:6-8.

*உம்மிலே பெலன் கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் வழிகளைச் செவ்வையாக்கினவர்களும் பாக்கியவான்கள்.*

*அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து, அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்; போதகனும் ஆசீர்வாதங்களால் மூடப்படுகிறான்.*

*பராபரனுக்கு முன்பாகச் சீயோனிலே வந்து காணப்படும் மட்டும் பலத்திலிருந்து பலத்துப்போகிறார்கள்.*

---

என் பிரிய சிநேகிதரே! இந்த நாள் உங்கள் ஜீவியத்திலேயே ஒரு முக்கியமான நாள். நீங்கள் கொண்டாடப் போகிற பண்டிகைகளில் இது அதிக முக்கியமான பண்டிகையாயிருக்கலாம்.

ஞானஸ்நானத்தின் மூலமாய் உங்களில் சிலர் மதுரைச் சபையிலே மாத்திரமல்ல, இப்பூமியிலுள்ள கிறிஸ்துவின் திருச்சபையிலும் இப்போது சேர்க்கப்பட்டீர்கள். இன்னும் கடவுள் தாமே தமது ஊழியரைக்கொண்டு ஞானஸ்நானத்தின் மூலமாய், விசேஷித்த விதமாய்த் தமது கரங்களை விரித்தவராய் உங்களைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். அவர் "நீ என் பிரிய மகன்", "நீ என் பிரிய மகள்" என்ற தமது ஆச்சரியமான வார்த்தைகளை உங்களுடைய இருதயங்களில் சொன்னாரே. நீ அவரது வார்த்தைகளுக்குச் செவிகொடுத்தாயா? செவிகொடுத்தாய் என்று நம்புகிறேன். இன்னும் உன் இருதயத்திலிருந்து தாழ்மையான துதி தோத்திரங்களும் கெம்பீரமான புகழ்ச்சியும் கடவுளுடைய சமுகத்தில் இப்போது தொனிக்கிறதென்று நான் நம்புகிறேன்.

உங்களில் மற்றவர்கள் திடப்படுத்தப்படும்படியாகக் கட[illegible]ளுடைய சமுகத்திற்கு முன்பாக இப்பொழுது தான் வருகிறீர்க[illegible] உங்களில் அநேகர் சிறு குழந்தைகளாக கிறிஸ்துவின் சபையில் ஏ[illegible]



களைவே ஏற்றுக்கொள்ளப்பட்டீர்கள். கிறிஸ்தவ வீடுகளில் வளர்ந்தீர்கள். கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றீர்கள். இவைகள் எல்லாம் உங்கள் சிறுவயதிலிருந்து நா[illegible] நாள் பெற்றுவருகிற கடவுளுடைய ஆச்சரியமான ஈவுகளாயிருக்கிறது. கடந்த [illegible]களில் உங்களுக்குக் கிடைத்த விசேஷித்த போதனைகள், நீங்கள் கடவுளுடைய அன்பையும் கிருபையையும் இன்னும் அதிகமதிகமாய் அறியவும் இப்போதும் எப்போதும் நீங்கள் அவருடைய பிள்ளைகளாயிருக்கவும் வேண்டுமென்ற அவருடைய ஆவலை நீங்கள் அறியவும் உதவியாயிருக்கிறது. இப்பொழுது ஞானஸ்நானம் பெற்றவர்கள் தாங்களே முழு இருதயத்தாலும் தங்களைக் கடவுளுக்குத் தத்தம் செய்யும் தங்களுடைய விருப்பத்தை அறிக்கையிட்டதுபோல நீங்களும் கடந்த வருஷங்களில் பலவிதமாய்க் கடவுள் உங்களுக்குக் காண்பித்த அவருடைய அன்பை ருசித்துக்கொண்டதாகவும் உங்களில் ஒவ்வொருவரும் உங்களையும் உங்கள் முழு இருதயத்தையும் இன்னும் உங்களுக்குள்ளதெல்லாவற்றையும் அவருக்குச் சமர்ப்பித்து அவர் பேரில் சார்ந்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, நம்மையே தத்தம் செய்வதாகவும் இந்தத் திடப்படுத்தல் தினத்தில் பீடத்துக்குமுன் அறிக்கையிடவேண்டுமென்று கிறிஸ்தவ சபை எதிர்பார்க்கிறது. உங்கள் பெற்றோரும் சபையும் ஒருதரம் உங்களை ஞானஸ்நானத்துக்குக் கொண்டுவந்ததை இப்பொழுது நீங்களே தனித்தனியாய்த் திடப்படுத்திக் கொள்ளவேண்டும். கடவுளும் உங்களைச் சிறு வயதில் தமது பிள்ளையாக ஏற்றுக்கொண்டபோது செய்ததைத் திடப்படுத்துவார்.

இப்பொழுது ஞானஸ்நானம் பெற்ற உங்களுக்கும், திடப்படுத்தப்படப்போகிற உங்களுக்கும் எழுப்புதலுக்கென்றும் உதவிக்கென்றும் ஒரு விசேஷித்த வசனத்தைச் சத்திய வேதாகமத்திலிருந்து எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதை நாம் 84-ம் சங்கீதத்தின் 6-ம், 7-ம், 8-ம் வசனங்களில் வாசிக்கிறோம். ஒரு பக்தன் ஆண்டவருடைய நியாயாசனத்துக்கு முன் வெளிப்படும்படியாக [illegible]ர்த்தருடைய சமுகத்தில் இருக்கும் சந்தோஷத்தை அடையும் [illegible]கவும் வாஞ்சையாய்க் காத்திருந்த விஷயத்தைக் குறித்து இந்த [illegible]மான சங்கீதம் சொல்லுகிறது.

இம்மூன்று வசனங்களிலும் சரியான பாக்கியவான்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் ...ரும பாக்கியவான்களாக விரும்புகிறோம். இ... சமயத்தில், என் பிரிய வாலிப சிநேகிதரே, ... ய நீங்கள் உங்களைப்பாக்கியவான்களாக உணரவும், இப்பூமியிலுள்ள உங்கள் ஜீவியகாலமெல்லாம் அதிகமதிகமாய்ப் பாக்கியவான்களாகவும், ஒரு நாளில் மோட்சலோக பரிசுத்தவான்களின் கூட்டத்தில் நீங்களும் சேர்ந்து கொள்ளவும் வேண்டுமென்று விரும்புகிறேன்.

*     *     *

இங்கே பாக்கியவான்களைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதென்ன?

முதலாவது: சரியான பாக்கியவான்கள் யார் என்று நாம் அறிகிறோம். அவர்கள் யார்? ஆண்டவராகிய கடவுளிலே பெலன் கொள்ளுகிற மனுஷர் என்பது. கடவுளிலே நமக்குக் குறைவற்ற அன்புக்கும் பெலனுக்கும் உரிய வழிவகைகளெல்லாம் உண்டு. மற்றவர்களைச் சிநேகிக்கும் சிநேகத்தைக் காண்பிக்கிறதிலே ஒருவனும் தளர்ந்துபோகவும் தப்பிப்போகவும் வேண்டியதில்லை. ஒருவனும் சோதனைகளில் விழுந்துபோகவும் வேண்டியதில்லை. இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கடவுள் தம்முடைய குறைவற்ற ஐசுவரியத்திலிருந்து முழுபங்கை நம்மெல்லாருக்கும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார். தினந்தோறும் அவருடைய வசனத்தை வாசிக்கிறதினாலும் தினமும் அவரோடு ஜெபத்திலே தரித்து ஜீவிப்பதினாலும் அவரைக் கிட்டிச் சேர்! அப்போது நீ பாக்கியவானாவாய்.

இன்னும், தங்கள் இருதயங்களில் வழிகளைச் செவ்வையாக்குகிறவர்கள் பாக்கியவான்கள் என்று சொல்லியிருக்கிறது. எபிரேய பாஷையிலுள்ள மூலவார்த்தையின் அர்த்தம் பலவிதமாய்ப் பொருள்தரலாம். இந்த வசனத்தின் அர்த்தம், தங்கள் இருதயங்களில் ஒன்றையும் மறைக்காமல் நேர்மையானவர்களும், உண்மையுள்ளவர்களும் தங்களை இருக்கிற பிரகாரமாக அல்லாமல் வேறெந்தவிதமாயும் காண்பிக்க விரும்பாதவர்களும் பாக்கியவான்கள் என்று நான் நினைக்கிறேன். கட... டைய வழிகளில் நடக்க வாஞ்சிக்கிறவர்களும், கடவுளுடைய சி... தைச் செய்ய வாஞ்சிக்கிறவர்களும் பாக்கியவான்கள். கடவுளுடைய



...த்தை யல்லாமல் வேறொன்றையும் அவர்கள் செய்கிறதில்லை. என் பிரிய சிநேகிதரே! இந்தப் பாக்கியம் உங்களெல்லாருக்கும் கிடைக்க நான் விரும்புகிறேன்.

இரண்டாவது: அப்படிப்பட்ட பாக்கியவா...ள் செய்கிற வேலையைக்குறித்து நமது வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்த மனுஷன் அற்புதமான காரியங்களைச் செய்வான் என்று நாம் எதிர்பார்க்கிறோம். சீர்திருத்தலின் பண்டிகைத் தினமாகிய இன்றையத்தினத்தில் மார்ட்டின் லுத்தரையும் அவர் செய்த பெரிய காரியங்களையும் அவரைக்கொண்டு கடவுள் செய்ததையும் நாம் நினைக்கிறோம். பாக்கியவானாகிய ஒரு மனிதன் வல்லமையான பிரசங்கம் செய்யவேண்டுமென்றும், அற்புதங்களைச் செய்யவேண்டுமென்றும் சீர்திருத்தியாயிருக்க வேண்டுமென்றும் நாம் பலவிதமாய் நினைக்கிறோம். அப்படி ஒன்றும் நமது வாக்கியத்தில் சொல்லப்படவில்லை. பாக்கியவானும் பரிசுத்தவானுமாகிய ஒரு மனிதனைக் குறித்து மிகவும் சிறிய காரியத்தை, அதாவது குழந்தைகளினாலும் அனுபோகம் முதிர்ந்து வளர்ந்தவர்களினாலும் செய்யப்படுகிறது, ஏழையும் ஐசுவரியவானும் செய்கிறதும் கல்வியற்றவர்களினாலும் கல்வியுடையவர்களினாலும், பெண்களாலும் ஆண்களாலும் செய்யப்படுகிறதுமான காரியத்தையே செய்வான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாக்கியவானாகிய மனிதன் செய்கிற ஓரே காரியம் அழுகையின் பள்ளத்தை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறான் என்று தான் சொல்லியிருக்கிறது.

இவ்வுலகம் அழுகையும் சஞ்சலமும் நிறைந்த பள்ளத்தாக்கைப் போலவும் இன்னும் நதிகளில்லாமல் வரண்டுபோய்ப் பா...கிடக்கிற வனாந்தரத்தைப்போலவும் இருக்கிறது. பாக்கியவானாகிய ஒரு மனிதன் வரண்ட நிலத்திற்கு சோத்தியானதும், ஏராளமானதுமாகிய ஜலத்தைக் கொடுக்கிற கிணற்றைப்போலிருக்கிறான். பாக்கியவானாகிய ஒரு மனிதன் ஜீவிக்கிற இடமெல்லாம் வளரும். அங்கே சந்தோ...மும், பாக்கியமும், ஆனந்தமும், நம்பிக்கையும், அன்பும் வளரும். ...ந்தே பாழ் நிலங்களில் அழகான புஷ்பங்களும், புஷ்டியான அறுப்... உண்டாகும்.

என் பிரிய சிநேகிதரே! இவ்வுலகத்திலுள்ள உங்கள் வழிகள் எல்லாம், நீங்கள் எங்கே போனாலும், நீங்கள் மனுஷருடைய இருதயங்களில் வளருகிற தன்மையை உண்டுபண்ண வேண்டுமென்றும் உங்கள் இனத்தாரிடத்திலும், தேசத்திலும், இன்னும் உங்கள் இருதயத்திலும் [illegible] ஜீவியம் உண்டுபண்ண வேண்டுமென்றும் நான் முழு இருதயத்தினாலும் விரும்புகிறேன். உங்கள் பெலன் கடவுளுக்குள் இருந்தால், கடவுள் உங்கள் மூலமாய் வேலை செய்வார். கடவுள் எங்கேயிருக்கிறாரோ, அங்கெல்லாம் புதுமையான காரியங்கள் எப்போதும் உண்டாகும்.

கடைசியாக: நமது வசனங்களில் பாக்கிவான்களின் பாக்கியத்தைக் குறித்துச் சொல்லுகிறது.

அவர்கள் பலத்திலிருந்து பலத்துப் போகிறார்கள். அவர்கள் பெலன் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. ஒருபோதும் ஜீவியம் நின்றிராது. அது வளர வேண்டும். இல்லாவிட்டால் சரியான உயிர் இல்லை. விசேஷமாய் கிறிஸ்தவ ஜீவியம் வளர்ந்து அதிகமதிகமாய்ப் பெலப்படவேண்டும். இந்த விதமாய்க் கடவுளுடைய பிள்ளையின் பாக்கியம் வளர்ந்து ஒரு நாளில் பரிபூரணமாக வெளிப்படும். அப்போது கடவுளுடைய பிள்ளை மோட்சலோகத்தில் தனது பரம தகப்பனுக்கு முன்னின்று, பராபரன் தம்மைச் சிநேகித்தவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் கண்டதும் இல்லை, காது கேட்டதும் இல்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்துக்குள் ஏறினதும் இல்லை என்று காணுவான். இதுவே கடவுள் நம்மெல்லாருக்கும் ஆயத்தம் பண்ணின முடிவான திடப்படுத்தலாகும்.

ஆண்டவரே! எங்கள் ஒவ்வொருவரையும், நாங்கள் இவ்வுலகத்தில் [illegible] கடைசி முனையில் இருந்தாலும், நாங்கள் எல்லாரும் மோட்சத்தில் கடவுளுடைய பூரணமான சமுகத்தைத் தரிசிக்கவும், நித்தியமும், பரிபூரணமுமான பாக்கியத்தை அனுபவிக்கவும் எங்களுக்குக் கிருபை செய்தருளும்.

ஆனால் மோட்சத்துக்குப் போகும் பாதையானது கடவுளுக்குள் என் பெலத்தை எல்லாம் நாளுக்கு நாள் தேடுகிறதும், வரண்டதும் களி கொடுக்காததுமான இந்த உலகத்தை உயிருள்ளதாக்குகிறதுமே. இந்தப் பாக்கியமானப் பாதையில் நாம் எல்லாரும் நடப்போமாக[illegible]

ஆமேன்.

# நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகம்.

(உபாத்திமார் கூட்டத்தின் வந்தனோபசாரம்.)

---

என் பிரிய சகோதர சகோதரிகளே! இங்கே மதுரையில் நாம் எல்லாரும் ஒன்று கூடவும் நாமெல்லாரும் ஒருவரையொருவர் சந்திக்கவும் கடவுள் கிருபை செய்தார். ஆகையால் நாம் அவரை நமது இருதயத்தின் ஆழத்திலிருந்து ஸ்தோத்தரித்துக்கொண்டிருக்கிறோம். நீங்கள் எல்லாரும் வெவ்வேறு இடங்களிலிருந்தும், வெவ்வேறு பட்டணங்களிலிருந்தும், வெவ்வேறு கிராமங்களிலிருந்தும் வந்திருக்கிறீர்கள். நம்மெல்லாருக்கும் வெவ்வேறு விதமான ஊழியம் கையளிக்கப்பட்டிருக்கிறது. ஊழிய சம்பந்தமான வித்தியாசமிருந்தாலும், நம்மெல்லாருக்கும் பொதுவான ஒரு காரியமிருக்கிறது. நாம் என்ன வேலை செய்தாலும், நமக்கு எவ்வளவு கல்வியறிவு இருந்தாலும், எத்தகைய வரமும் சாமர்த்தியமுமிருந்தாலும், கடவுளும் ஆண்டவருமாகிய இரக்ஷகருக்கும் நாமெல்லாரும் ஒரே மாதிரியும் ஒரே அளவுமான ஊழியம் செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். எப்படி? நாம் எந்த வேலையைச் செய்தாலும், கிறிஸ்தவர்களுக்குள்ளும் புறமதஸ்தருக்குள்ளும் அதிலே கடவுளுடைய இராச்சியத்தின் வளர்த்திக்கென்றே உண்மையாய் உழைக்க வேண்டியவர்கள்.

நமது பொருளட்டவணையில் பலவிதமான காரியங்கள் அடங்கியிருக்கின்றன. உபாத்திமார்களுக்கும் உபாத்தினிமார்களுக்கும் பிரயோசனமான லௌகிக பாடசம்பந்தமான விஷயங்களையும், சுகாதாரம், கிராமாந்தர சீர்திருத்தம் சம்பந்தமான விஷயங்களையும், பிள்ளைகள், வாலிபர்கள், ஸ்திரீகள் நடுவில்செய்யும் கிறிஸ்தவ வேலையைப்பற்றிய விஷயங்களையும், சுவிசேஷ வேலை சம்பந்தமான காரியங்களையும் இன்[illegible]யைக்கடுத்த ஆளுகை சம்பந்தமான காரியங்களையும் குறித்துக் [illegible]வும் பேசவும் போகிறோம்.

மெய்யாகவே, இவைகள் பலவிதமாயிருக்கிறது. இருந்தாலும் இவ்விஷயங்களிலெல்லாம் நாம் எல்லாரும் பொதுவான ஒரு விஷயத்

தைக் கவனிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அந்தப் பொதுவான ஒரே காரியமென்ன? எனக்குள்ளும் மற்றவர்கள் நடுவிலும் இயேசுவுக்கு வழியை ஆயத்தம்செய்யவும், கடவுளுடைய இராச்சியம் என் கிராமத்திலோ, பட்டணத்திலோ, விசேஷமாய் என் இருதயத்திலோ மகிமையாய் ஸ்தாபிக்கப்படவும் இடம்கொடுத்து அவருக்கு ஊழியம் செய்யவும் எப்படி என்னைத் தகுதியுள்ளவனுக்குவேன் என்ற கேள்வியே.

இக்கூட்டங்களில் நடக்கும் தியானப் பிரசங்கங்களும் ஆராதனைகளும் பரிமாறப்படும் பரிசுத்த இராப்போசனமும் இந்த ஒரே பெரிய நோக்கத்தையே நமக்குள்ளும் நமது இருதயத்துக்குள்ளும் கொண்டு வந்து, அதற்கான வழிவகைகளை நமக்குக் காட்டக் கூடியவைகளாயிருக்கும்.

பிரிய சிநேகிதரே! நீங்கள் வேலை செய்துவருகிற உங்கள் கிராமத்திலே உங்களில் அநேகரைப் பார்த்திருக்கிறேன். உங்களுக்கு அங்கங்கே அநேக கஷ்டங்கள் உண்டு. கர்த்தரிடத்திலிருந்து ஆறுதலையும், புது பெலனையும் சில சமயங்களில் பெறுகிறீர்கள் என்பதையும் அத்தோடு கூட கஷ்டஜீவியமும் எதிர்பாராத தடையான அநேக காரியங்களும் அநேகமாய் உங்கள் அன்றாடக அப்பமாயிருக்கிறதென்பதையும் நான் அறிகிறேன். இன்னும் நீங்கள் அறுப்புக்கான வயலைத் தேடுவதில் உண்டாகும் சந்தோஷத்தையும், அதன் கனிகளை நித்திய ஜீவனுக்கென்று சேர்ப்பதில் உண்டாகும் சந்தோஷத்தையும் ஒரு வேளை நீங்கள் குறைவாய்ப் பெற்றிருக்கலாம் என்பதையும் நான் அறிகிறேன். இந்த விஷயத்தில் என் இருதயம் உங்களோடுகூட அங்கலாய்த்து விசனிக்கிறது.

அத்தோடுகூட என் இருதயத்தில் உங்களைக் குறித்து இன்னொரு காரியமிருக்கிறது. அதாவது: உங்களுக்கு நல்வாழ்வு உண்டாக வேண்டுமென்ற விருப்பத்தினாலும் இக்கூட்டங்களில் கடவுள் உங்களுக்குப் புது பெலனையும், தைரியத்தையும், புது முயற்சிகளையும், புதிய நம்பிக்கையையும், புதிய காட்சியையும் கிருபையாய் அ[illegible] நீங்கள் நன்மையான காரியங்களையும் தீமையான காரியங்களையும் வகைபறுத்துப் பார்க்கும்படியான கண்களையும் உங்களுக்கு அளிக்



வும் வேண்டுமென்கிற ஆசையாலும் ஜெபத்தாலும் என் இருதயம் நிரம்பியிருக்கிறது.

என் பிரிய சிநேகிதரே! இந்நேரத்தில் உங்கள் பேரிலுள்ள என் முழு விருப்பத்தையும் ஜெபத்தையும [illegible] போனால், பவுல் அப்போஸ்தலன் எபேசு சபையாருக்கு எழுதின [illegible]தைகளை யல்லாமல் வேறெதுவும் எனக்கு விசேஷமாய்க் காணவில்லை. அ[illegible] வார்த்தைகள் அவர் தமது மிக அருமையான சபையாருக்காக கடவுளிடத்தில் மன்றாடின வார்த்தைகள்தான்—அதாவது:

இதனிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலும் எல்லா பிதிர்த்துவத்துக்கும் நாமகாரணராயிருக்கிற

பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்

விசுவாசத்தினாலே உங்கள் இருதயங்களில் கிறிஸ்து வாசமாயிருக்கவும் அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்; இதன் வழியாய் நீங்கள் அன்பிலே வேரூன்றினவர்களும் அஸ்திபாரமிடப்பட்டவர்களுமாகிச்

சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம் நீளம் உயரம் ஆழம் இன்னதென உணர்ந்து

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாக வேண்டுமென்றும் கடவுளின் சகல பரிபூரணமும் நிறைந்தவர்களாக நிரப்பப்பட வேண்டுமென்றும் இப்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள் கிரியை நடப்பிக்கிற வல்லமையின்படி நமக்குச் செய்ய வல்லவருக்கே

திருச்சபையில் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமை தலைமுறை தலைமுறைக்கும் யுகாயுகங்களாயிருப்பதாக; ஆமென். எபேசியர் 3: 14-21.

அப்போஸ்தலன் சொல்லுகிறதை யெல்லாம் இந்நேரத்தில் விவரிப்பதும் அதைக் குறித்துத் தியானிப்பதும் கூடாதகாரியம். சில [illegible]புகளை மாத்திரம் விசேஷித்துச் சொல்லலாம்.

[illegible] பரிசுத்த பவுலின் முக்கியக் கருத்தென்ன? "நீங்கள் கடவுளின் சகல பரிபூரணமும் நிறைந்தவர்களாக நிரப்பப்பட வேண்டும்." இப்பூமி

யில் ஸ்தாபிக்கப்பட்ட கடவுளின் இராச்சியத்தைக் குறித்துச் செய்யப்பட வேண்டிய அதிமுக்கியமான காரியம் என்ன? இங்குமங்கும் நாம் செய்கிற அற்புதமும் பெருமையுமான காரியங்களல்ல. நம்மில் ஒவ்வொருவரும் ... ஊரில் நேர்த்தியான ஒரு சபையை ஏற்படுத்... அல்ல. இதுவும் செய்யப்படவேண்டியதுதான். ஆனால் எல்லாவற்றிலும் முக்கியமானதும் நிச்சயமானதுமான காரியம் ஏதென்றால்: நம்மில் ஒவ்வொருவரும் கடவுளின் பரிபூரணமும் கொள்ளுமட்டும் நிரப்பப்பட வேண்டும். அதில் ஒரு பாகத்தை மாத்திரம் பெற்றால் போதாது. அவருடைய சகலபரிபூரணத்தாலும் நிரப்பப்படவேண்டும். அப்பொழுதுதான் நீ உன் ஊரில் கடவுளின் இராச்சியத்தை ஸ்தாபிப்பதைப் பற்றிய இரகசியம் தெளிவாகும்.

கடவுளின் பரிபூரணமும் கொள்ளுமட்டும் நிரப்பப்படுவது எப்படி?

இந்தப் பெரிய காரியத்தை அடையும் வழியை அப்போஸ்தலன் அநேக காரியங்களால் விவரிக்கிறான்.

நாம் உள்ளான மனுஷனில் பெலப்படவேண்டும். இதுதான் அவன் சொல்லுகிற முதல் காரியம். நமது முயற்சியும் நாட்டமுமெல்லாம் இதிலே கருத்தாயிருக்கவேண்டும். அதாவது: உள்ளான மனுஷனிலே. அடிக்கடி நமது ஆரம்பமே தவறிப்போகிறது. நமது மனதில் எப்போதும் வருகிற காரியம் எது? நமது அலுவலில் எல்லாம் முக்கியமாய்த் தினசரி முயற்சியாயிருப்பதென்ன? வெளி மனுஷன் அல்லவா? வெளித்தோற்றமான காரியங்கள் அல்லவா? இவைகள் முக்கியமாயிருக்கலாம் என்று நினைக்கிறோம். என்றாலும் இவைகளை உள்ளான காரியங்களோடும் உள்ளான மனுஷனோடும் ஒத்துப்பார்த்தால் ஒன்றும் இல்லை. எப்போதும் வேறெதையும் விட உள்ளான மனுஷன் அதிக முக்கியமானதென்பதை நமது ஞாபகத்திலே வைக்கக் கூடும்படியாக நமது இந்தக் கூட்டம் நமக்குப் பெரிய ஏவுதலாயிருப்பதாக.

உள்ளான மனுஷன் பெலப்படுவது எப்படி? கடவுளுடைய மகிமையின் ஆவியின் வல்லமையால் தான் அவன் பெலப்படுகிறான். நம்மால் கூடியது அல்ல. அது கடவுளின் ஆவியின் வேலை. ... வொரு விஷயத்திலும் கடவுளின் ஆவியானவர் நம்மோடும், ...



...ம்படி இடங் கொ...
... செய்யும் நம்பிக்கையுள்ளவ...

...றம் என்ன? கிறிஸ்து தாமே நமது இருதயங்களில் வாசம் செய்வார். நாம் பக்தியுள்ள முகத்தைக் காட்டவும் அழகான கிறிஸ்தவ வார்த்தைகளை உபயோகிக்கவும் கூடியவர்களாயிருக்கும்போது, நாம் அடிக்கடி திருப்தியடைகிறோம். சில சமயங்களில் எந்தவிதமாயும் உத்தான கிறிஸ்தவர்கள் என்ற பெயரைச் சொல்லும்போதும் நம்மையே திருப்தியாக்கிக் கொள்ளுகிறதே போதும் என்று நினைக்கிறோம். ஒரு போதுமில்லை. கிறிஸ்து தாமே நமது இருதயங்களில் வாசம் செய்யவேண்டும். நமது வார்த்தைகளிலும் மனதிலும் எண்ணங்களிலும் மாத்திரமல்ல, நமது இருதயத்திலுமே அவர் வாசம் செய்யவேண்டும்.

அப்போ தான் நாம் கிறிஸ்துவின் அன்பை அறியக் கூடியவர்களாவோம். அறிவுக்கு மேலான கிறிஸ்துவின் சிநேகத்தை அறிந்து கொள்ள வல்லவர்களாவோம். நாம் கிறிஸ்துவின் அன்பை அறியவும் ருசிக்கவும் கூடும்படி, கடவுள் நமது அபாத்திரத் தன்மையைப் பாராமல், நம்மைத் தேடி நமக்காகக் கவலைப்படுகிறார். மேலும், இதற்கு முன் இராத பிரகாரம் நாம் அதிகப்பரிசுத்தமாயும் சுயவெறுப்புடையவர்களாயும் நம்மை தத்தஞ் செய்யும் ஜீவியம் செய்யும்படியாயும் நமக்குப் பெலத்தையும் சித்தத்தையும் தருவதாலும் நமக்குப் பாவமன்னிப்பை அளிப்பதாலும்கூட நாம் அவரது அன்பை ருசிக்கவும் அறியவும் கூடியவர்களுமாக்குகிறார். இதுவே நமது இருதயம் வாஸ்தவமாயும் படிப்படியாயும் அவரது சகல பரிபூரணமும் கொள்ளுமட்டும் நிரப்பப்படுகிறது.

பரி: அப்போஸ்தலனுடைய இந்த வார்த்தைகளில் நாம் இன்னும் ஒரு காரியத்தை கவனிக்கவேண்டும். அது வெகு முக்கியமானது, ஆனால் அது நம்மால் அடிக்கடி அலக்ஷியம் செய்யப்படுகிறது.

கிறிஸ்தவர்கள் சகல பரிசுத்தவான்களோடும் சேர்ந்து அன்பின் ஆழமும், அகலமும், நீளமும் உயரமும் இன்னதென்று உணரக் கூடும் என்று பவுல் அப்போஸ்தலன் மன்றாடுகிறான். கடவுளின் அன்பையும் ஐசுவரியத்தையும் முழுமையுமாய் நாம் உணரவேண்டும்

...ன் விரும்புகிறான்.

... தனிமையாய் விடப்பட்டால ...

...ய் நன்றாய் அறிந்திருக்கிறான்.

ஒரு மனிதன் எவ்வளவுக்கதிகமாய் கிறிஸ்துவின் சீஷ... துவ சபையுமாகிய பரிசுத்தவான்களோடும் ஐக்கியப்பட்டிருக்கிறானோ, அவ்வளவுக்கதிகமாய் கிறிஸ்துவின் அன்பை அதிகமதிகமாய் உணரக் கூடியவனாகிறதுமல்லாமல் கடவுளின் பரிபூரணத்தினாலும் நிரப்பப் படுகிறான். நாம் தே[illegible]சமுகத்தில் தியானத்தோடும் ஜெபத்தோடும் நமது ஜீவியத்தை நட[illegible]ிப்பது அதிக முக்கியம். ஆனால் அதே மாதிரி கிறிஸ்தவசபையோடும் நெருங்கி ஜீவிப்பதும் அத்தியாவசியமாகிறது. பரஸ்பர உதவியும் பரஸ்பர அனுபவமும் நமக்கு அத்தியாவசியம். அதினால்தான் இப்பேர்ப்பட்ட கூட்டங்கள் அத்தியாவசியமானதா யிருக்கிறது. விசேஷமாய்த் தங்கள் நாட்களைத் தன்னந்தனிமையான இடங்களில் பின்னிடும் கிராமவாசிகளுக்கு இக்கூட்டங்கள் அத்தியா வசியமே. நமது கிறிஸ்தவ அனுபோகமும், கிறிஸ்தவ ஜீவியமும் வளரக் கூடும்படி நாம் ஒன்றுகூடி யோசிக்கவும், எழுப்புதலான ஆரா தனைகளில் பங்குபெறவும் நாம் ஒன்றுகூடி வருவது அவசியம்.

நாம் எல்லாரும் சிநேகத்திலே வேரூன்றி அஸ்திபாரப்பட்டவர் களாகி, சகல பரிசுத்தவான்களோடும், அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணரவும் அறிவுக்கு மேலானகிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும் பராபரனுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்படவும் இக்கூட்டங்களும் ஆரா தனைகளும் கடவுளின் கிருபையினாலே நமக்கு மெய்யாகவே பிரயோஜ னமாயிருப்பதாக.

பிற்பாடு நாம் நமது வீடுகளுக்குத் திரும்பி, நமது வேலைகளைச் செய்யும்போது பரி: பவுல் அப்போஸ்தலனோடு முழு இருதயத்தோ லும் சேர்ந்து, மேலும் மேலும் நாம் வேண்டிக்கொள்வதையும் நினைக் கிறதையும் எல்லாம் பார்க்க, மெத்தவும் அதிகமாய் நமக்குள் பெலனா யிருக்கும் சத்துவத்தின்படிச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபை யிலே என்றைக்குமுள்ள [illegible] தலைமுறைகளிலும் எல்லாம் இயேசு கிறிஸ்து மூலமாய் மகிமை உண்டாகக் கடவோர்களாவோம். இதற்குக் கர்த்தர் நம்மெல்லாருக்கும் உதவி செய்[illegible]வாராக. ஆமேன்.

22588